திருக்கோயில்

மே - ஜூன் 1985 விலை ரூ. 4



பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமித் திருக்கோயிலைச் சார்ந்த கொடைக்கானல் அருள்மிகு குறிஞ்சியாண்டவர் திருக்கோயில் திருப்பணியை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் இராம. வீரப்பன் அவர்கள் 20-5-85 அன்று தொடங்கி வைக்கும் காட்சி., அறநிலையத்துறை ஆணையர் கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ். அவர்களும், தக்கார் டாக்டர் இராதா தியாகராசன் அவர்களும் உடன் உள்ளனர்.



முகப்பு

திருச்சிராப்பள்ளி உச்சிப்பிள்ளையார் கோயிலின் அழகியத் தோற்றம்.

திருக்கோயில்

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை : 27

திருவள்ளுவர் ஆண்டு 2016 குரோதன ஆண்டு வைகாசி & ஆனி
மே, ஜூன் 1985 விலை ரூ. 4-00

மணி : 5, 6

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்

உயர்திரு
ஆணையர் அவர்கள்
அறநிலைய ஆட்சித்துறை
சென்னை-600034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.
ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலம் சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக ஆணையர் அலுவலகத்திற்கே பணம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா
உள்நாடு ரூ 24.00
வெளிநாடு ரூ 36.00

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில் புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

பொருளடக்கம்

தருமபுரம் ஆதீனத்தில் நடைபெற்ற அகில உலக சைவ சித்தாந்த கருத்தரங்கில் அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய சிறப்புரை.

தெய்வீகக் கலைக் கண்காட்சியைத் திறந்து வைத்து இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு கு. ஆளுடையப் பிள்ளை, ஐ.ஏ.எஸ். அவர்கள் ஆற்றிய உரை.

வாலிவத நியாயம்
—அருளரசு கிருபானந்த வாரியார்

மாண்புமிகு அமைச்சர் ஆர்.எம்.வீ. அவர்களின் ''புதிய சிந்தனைகள்'' நூல் மதிப்புரை
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

சிலம்பில் சமத்துவம்
—டாக்டர் ந. சஞ்சீவி

செத்த நாயும் சித்தாந்தமும்
—டாக்டர் பி. சௌரிராஜன்

கிருட்டிணன் தூதுச் சருக்கம்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

அருள்வாரி வழங்கும் சமயபுரம் மாரியம்மன்
—டாக்டர் இரா. கலைக்கோவன்

பராசக்தி பாமாலை
—எதிரொலி விசுவநாதன்

கச்சபேஸ்வரர் கோயில் எனப்படும் ஆலக்கோயில்
—பி.டி. பாலாஜி

திருக்கோயில்கள் ஓர் ஆய்வு
—டாக்டர் ஏ.என். பெருமாள்

வாசகர் எண்ணங்கள்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

தருமபுரம் ஆதீனத்தில் நடைபெற்ற அகில உலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கில்

அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய சிறப்புரை

வணக்கத்திற்கும் நம்முடைய போற்றுதலுக்கும் உரிய இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கருத்தரங்கத்தை நடத்துவதற்குக் காரணமாக அமைந்திருக்கின்ற தருமை ஆதீனகர்த்தர் மகா சந்நிதானம் அவர்களே! வணக்கத்திற்குரிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களே! வணக்கத்திற்குரிய திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர் மகா சந்நிதானம் அவர்களே! காஞ்சி மடத்தைச்சார்ந்த வணக்கத்திற்குரிய அடிகளார் அவர்களே! எங்களுடைய பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய மூத்தமிழ்க் காவலர் டாக்டர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களே! அறநிலையத்துறை ஆணையர் அவர்களே! இந்த நிகழ்ச்சியில் கருத்துரை வழங்கி அமைந்திருக்கின்ற சான்றோர்களே! கருத்தரங்கத்திலே கலந்து கொள்ள வருகை தந்திருக்கின்ற அறிஞர் பெருமக்களே! தாய்மார்களே! நண்பர்களே!

புதிய அத்தியாயம்

தமிழ்நாட்டினுடைய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை இன்றைய தலமுறை எழுதிக்கொண்டிருக்கிறது. அதனுடைய்வெளிப்பாடாக நம்முடைய சமுதாயத்திலே பல்வேறு நிகழ்ச்சிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு சமுதாயத்தினுடைய வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் அடிப்படையாக அமைந்திருப்பது ஆன்மீக உணர்வு என்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்டிய சமுதாயம் தமிழ்ச்சமுதாயம். ஆகவே அத்தகைய உணர்வுகளை நம்முடைய சமுதாயம் எந்தக் காரணத்தாலோ எந்தச்சூழ்நிலைகள் காரணமாகவோ இடைக்காலத்திலே மறந்துவிட்டோ அல்லது மறுத்துக் கொண்டோ புறக்கணிக்க வேண்டும் என்கிற அடிப்படையிலோ நாம் அதைக் கவனிக்காமல் இருந்துவிட்ட அந்தச் சூழ்நிலையில் இன்றைக்குக்காலம் இட்டிருக்கிற கட்டாயத்தின் காரணமாகவும் சமுதாயத்தினுடைய சுழற்சியிலே வந்துசேர வேண்டிய ஒரு காலக்கட்டத்திலே நாம் நின்று கொண்டிருக்கிற காரணத்தாலும் இன்றைக்கு மிகச்சிறந்த காரியங்களில் சான்றோர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதற்கு இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அகில உலக சைவ சித்தாந்த கருத்தரங்கு ஒரு எடுத்துக்காட்டான நிகழ்ச்சி என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆற்றல் பெற்றவனா?

இந்தக் கருத்தரங்கிலே கலந்துகொண்டு கருத்துக்களைத் தெரிவிக்கிற ஆற்றல் பெற்றவன் நான் இல்லை என்பதை நீங்கள் எல்லோரும் உணர்ந்திருக்கிறீர்கள்! இங்கே வணங்கப்பெறுகிற துர்க்கை ஆலயத்திற்கு மகாமண்டபம் ஒன்றை எழுப்பி அதைத்திறந்து வைக்கின்ற பணியை தருமை ஆதீனம் அவர்கள் எனக்கு

வழங்கியிருக்கிறார்கள். அதை ஒட்டி இந்த வளாகத்திற்குள் வருகை தரவும் அவர்கள் இருக்கின்ற இந்தச்சந்நிதானத்திலே அவர்களைச் சந்தித்து வணங்கவும் ஒரு வாய்ப்பை அவர்கள் எனக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேனே தவிர இந்த மகா மண்டபத்தை நான் வந்து திறந்தால்தான் திறக்கவேண்டும் என்றும் இல்லை. அல்லது உலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கிலே கலந்து கொண்டு கருத்துக்களை வழங்குகிற அளவுக்கு ஆற்றல் பெற்றிருக்கிறேன் என்றும் அவர்கள் எண்ணியிருக்கமாட்டார்கள் என்பது எனக்கு மிகத் தெளிவாகத் தெரியும்.

முதன்முறையாக வருகின்றேன்

நான் அவர்களைத் திருச்சி மலைக்கோட்டையில் நடைபெற்ற குடமுழுக்கு விழாவிலே சந்தித்து அவர்களை வணங்கவும் அவர்களுடைய வாழ்த்துக்களைப் பெறவும் நான் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். அதற்குப் பிறகு அவர்களை அவர்கள் இருக்கிற இந்த வளாகத்திலே வந்து பார்க்கிற முதல் சந்தர்ப்பம் இது என்பது எங்களுடைய அருமைக்குரிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். காரணம் வேறு யாரையும் அப்படி குறிப்பிடாத ஒரு சூழ்நிலையில் என்னை அவர்கள் முதன்முறையாக இங்கே வருகிறேன் என்று எடுத்துச் சொன்னதற்கு ஏதாவது பொருளிருக்கிறதா என்பதைக்கூட நான் ஆய்ந்து பார்க்கிறேன்; அப்படி என்ன? இந்த இடத்திற்கு நான் வந்ததினாலே இந்த இடத்திற்கு என்ன பெருமை சேர்ந்துவிட்டது? அது வல்ல; ஆனால் நான் வந்திருக்கிறேன் என்பது ஒரு செய்தியாக அவர்கள் உள்ளத்திலே இடம் பெற்றிருக்கிறது. ஒரு நிகழ்ச்சியாக இடம் பெற்றிருக்கிறது என்பதைமாத்திரம் என்னாலே புரிந்துகொள்ள முடிகிறது.

பயணம் ஒரு தொடர்கதை

அதனாலேதான் நானும் கடந்த 2 நாட்களாக உடல் நலிவுற்றிருந்தாலும் நேற்று கோவையிலே இருந்து காரிலே புறப்பட்டு இன்று காலையில் புதுக்கோட்டைக்கு அருகிலே எழுப்பப்பெற்ற ஒரு தொன்மையான ஆலயத்தின் குடமுழுக்கு விழாவிலே கலந்துகொண்டு விட்டு, பிறகு அவசரம் அவசரமாகப் புறப்பட்டு குறிப்பிட்ட நேரத்திலே இங்கே வந்து கலந்து கொள்ளவேண்டுமே என்கிற அக்கறையோடு இங்கே வந்து சேர்ந்தேன். இதை முடித்ததற்கு பிறகு இரவோடு இரவாகப்புறப்பட்டு நாளை நெல்லை மாவட்டத்தில் கட்டபொம்மன் விழாவிலே கலந்துகொள்ள பாஞ்சாலங்குறிச்சிக்குச் செல்ல வேண்டும். அதற்குப்பிறகு அடுத்தநாள் மதுரைக்கு வரவேண்டும்; ஆதி பராசக்தி வார வழிபாட்டு மாநாட்டிலே கலந்துகொள்வதற்கு. வருகிற வழியிலே ஏற்றுக்கொண்டிருந்த ஒரு பணிக்கு அவசரம் காரணமாக நான் செல்லாமல் அதை விட்டுவிட்டு வந்தேன். குடந்தையில் ஒரு 40 ஆண்டுகளுக்கு மேலாக ஓடாமல் இருந்த ஒரு திருத்தேரை -சாரங்கபாணி ஆலயத்தினுடைய திருத்தேரை வருகிற 21ஆம் தேதியன்று ஓட்ட இருக்கிறார்கள். அதற்கு ஒரு 7, 8 லட்ச ரூபாய் செலவு செய்து இன்றைக்குத் திருப்பணிகள் செய்யப்பெற்று அந்தத்திருத்தேரும் ஓட்டப்பட இருக்கிறது. அதை பார்த்து விட்டுவரவேண்டும் என்கிற அந்த திட்டம் இருந்தது; காலம் அதிகமாகி விட்ட காரணத்தினால் நேரத்துக்கு இங்கே வந்து சேரவேண்டும் என்கிற அந்த கவலையோடு அதை நான் போகிறபோது பார்க்கமுடியுமா என்றால் பார்க்கிறேன். இல்லையானால் 21ம் தேதி வந்து கலந்து கொள்கிறேன் என்று தெரிவித்துவிட்டு வந்துவிட்டேன்.

நான் ஒரு விவாதப் பொருளா?

இதைச் சொல்வதற்குக் காரணம் எங்களை போன்றவர்கள் என்று சொல்லுவதைவிட குறிப்பாக நான் ஒரு விவாதப்பொருளாக சமுதாயத்திலே ஆக்கப்பட்டிருக்கிறவன். இதற்கு முன்னாலே அறநிலையத்துறைக்குப் பொறுப்பேற்றுக்கொண்டிருந்த அமைச்சர்கள் இவ்வளவு பெரிய விவாதத்துக்கு உள்ளாகி, இருப்பார்களா என்பது எனக்குச் சந்தேகம். காரணம் காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே இருந்த அமைச்சர்கள் விவாதத்துக்கு உள்ளாகவேண்டிய அவசியமே இல்லாமல் இருந்தது. பேரறிஞர் அண்ணா அவர்களை ஆட்சிப்பொறுப்பிலே இந்தச்சமுதாயம் அமர்த்தியதற்குப் பிறகு டாக்டர் நாவலர் அவர்கள் சிறிதுகாலம் அறநிலையத்துறையினுடைய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது கூட ஒரு சிறிய நிகழ்ச்சி விவாதத்திற்கு வந்து அப்படியே அடங்கிவிட்டது. நம்முடைய துரதிருஷ்டம் பேரறிஞர் அண்ணா அவர்கள் அதற்குப்பிறகு நீண்டகாலம் நம்முடைய மாநிலத்திலே ஆளுகிற பொறுப்பை ஏற்றுக்கொள்ளமுடியாத சூழ்நிலையில் கலைஞர்கருணாநிதி அவர்களுடைய தலைமையில் ஒரு ஏழாண்டுக்காலம் ஆட்சி நடந்தபோதெல்லாம் அமைச்சர்களாக இருந்தவர்களைப்பற்றி விவாதம் வந்ததே இல்லை. அறநிலையத்துறைக்குள்ளே அல்லது அறங்காவலர்களாக இருந்தவர்கள் எப்படி நிர்வாகத்தை நடத்துகிறார்கள் என்பதிலே வேண்டுமானால் விவாதம் வந்திருக்குமே தவிர, அமைச்சர்கள் விவாதத்திற்கு ஆளானதே இல்லை.

அறியாமையை ஒத்துக்கொள்வதே ஆண்மை

நம்முடைய மாண்புமிகு தமிழகத்தின் தளநாயகர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு ஒரு வருட காலம் இந்த அறநிலையத்துறையை அவர்களே வைத்திருந்தார்கள். அதற்குப் பிறகு

அறநிலையத்துறையின் பொறுப்பை என்னிடத்திலே ஒப்படைத்தார்கள். என்னிடம் ஒப்படைக்கப்பட்டதற்குப் பிறகு நான் பல்வேறு ஆலயங்களிலே சென்று அந்த ஆலய வழிபாடுகளிலே ஈடுபடுகிற சூழ்நிலைகள் எல்லாம் எனக்கு ஏற்பட்டுவிட்டிருக்கிற காரணத்தினாலே நாங்கள் இதுவரை தெரிந்துகொள்ளாமலே வெளியிலே இருந்துகொண்டு பேசிக்கொண்டிருந்த பல விவரங்கள் ஆலயங்களுக்குள்ளே போனதற்குப் பிறகுதான் நேரிடையாகவே தெரிந்துகொள்கிற வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. நான் எங்களுக்கு என்று இப்பொழுது சொல்கிறபொழுது ஒரு பெரிய இயக்கத்தினுடைய தொண்டன் என்கிற முறையில் அந்த இயக்கத்தினரைக் குறிப்பிடுவதற்காக அதைச் சொல்கிறேன். ஏனென்றால் நம்முடைய முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் பேசுகிறபொழுது நம்முடைய சமுதாயத்திலே சில உணர்வுகள் மங்கிப்போயிருக்கிறதே-குறைந்து போயிருக்கிறதே அதற்குக் காரணம் என்ன என்பதை நாம் ஆராயவேண்டும் என்று அவர்கள் அன்போடு இங்கே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தம் உள்ளத்திலே தோன்றிய ஐயப்பாடுகள் பலவற்றையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அப்படி எல்லாம் ஒரு காலத்திலே நாங்கள் இந்த ஆலயங்களுக்குள்ளே செல்லாமலே அல்லது ஆலயங்களைப் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ளாமலே-அதைப்புறக்கணிக்கவேண்டும் என்கிற ஒரு லட்சியத்தையே எங்கள் உள்ளத்திலே பதியவைத்துக்கொண்டு பல கருத்துக்களை வெளியிலே சொல்லிக்கொண்டு இருந்தோம். அந்தக் கூட்டத்தின் சார்பிலே தான் நான் ''நாங்கள்'' என்று சொல்லுகிறேன். ஆகவே இந்த ஆலயங்களுக்குள்ளே செல்லவேண்டிய நிர்ப்பந்தம் நிர்வாகத்தின் காரணமாக வைத்துக்கொண்டிருக்கிற கடமையுணர்வின் காரணமாக ஆலயங்களுக்குச் செல்லுகிற வாய்ப்பு வந்ததற்குப் பிறகு தான் இந்த ஆலயங்களைப்பற்றிய அடிப்படை அறிவே எங்களைப் போன்றவர்களுக்கு தெரிய ஆரம்பித்தது என்பதை நான் இங்கே வெளிப்படையாகவே தெரிவிக்க விரும்புகிறேன். காரணம் மனிதன் தன்னுடைய அறியாமையை முதலிலேதான் அறிந்துகொள்ளவில்லை என்பதை தெரிந்து கொண்டாலே அவன் அறிஞன் ஆகிறான். தன்னுடைய தெரியாமையை, தான் இதுவரை தெரியாமல் இருந்தேன் என்று எடுத்துச் சொல்கிறவன் கொஞ்சம் திறமையுள்ள ஆண்மையுள்ளவனாகிறான். அதைச் சொல்லாததனாலே தான் இவ்வளவு சங்கடங்களும் இவ்வளவு பிரச்சினைகளும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அது ஆன்மீகத்துறையிலேயும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இங்கே நிறைகுடங்களாக மிகப்பெரிய ஆதினங்களைப் பொறுப்பேற்று நடத்திச் செல்கின்ற மகா சந்நிதானங்கள், கற்றறிந்த கல்விச் சான்றோர்கள், சைவநெறியைப் பற்றி முழுதும் தெரிந்தவர்கள், சைவத்திலே ஈடுபட்டிருக்கின்ற காரணத்தினாலே மற்ற சமயங்களைப் புறக்கணித்து விடவேண்டும் என்று எண்ணாமல் அவைகளைப் பற்றியும் ஆராய்ந்து கருத்துக்களைத் தெரிவிக்கிறவர்கள், தவத்திரு குன்றக்குடி அடிகளாரைப்போன்று நம்முடைய சமுதாயத்தைக் காலத்திற்கேற்றவாறு மாற்ற வேண்டுமா? வழிமுறைகளை ஏதாவது மாற்றி அமைக்கவேண்டுமா? என்கிற அந்தச்சிந்தனையிலும் தம்முடைய கருத்தைச் செலுத்துகின்ற சான்றோர்கள் இந்த அவையிலே வீற்றிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்கள் இருக்கிற ஒரு அவையில் எனக்கு இந்த விஷயங்களை தெரியாது என்று எடுத்துச்சொல்வதிலே நான் தயக்கம் காட்டினால் என்னைவிட சமுதாயத்திற்குக்கேடு செய்கிறவர் வேறுயாரும் இருக்க முடியாது என்பதனாலே தான் நானிந்த கருத்தைத் தாராளமாக எடுத்துச்சொல்கிறேன்.

இல்லை என்பது பிடிவாதம்

எனக்குத் தெரியாததைத் தெரியாது என்று சொல்லாததனாலேதான் இந்த நாட்டிலே இவ்வளவு பெரிய குழப்பம்! ஆண்டவன் இருக்கிறானா இல்லையா? எனக்குத்தெரியாது என்று சொன்னால் நான் புத்திசாலி என்று எண்ணிக் கொள்வேன். என்னாலே கண்டு பிடிக்க முடியாத ஒன்றை-ஆராய முடியாத ஒன்றை -ஆராய்ந்து இதுவரை யாருமே கண்டு பிடித்துச் சொல்லாத ஒன்றை இல்லை என்று நான் சொல்வேனேயானால் அதற்கு என்ன பெயரிட்டு மற்றவர்கள் அழைப்பார்கள் என்பதை அவர்களுக்கே நான் விட்டுவிடுகிறேன். ஆகவே இறைவன் இருக்கிறான் என்று சொல்வது நம்பிக்கை. எனக்குத்தெரியாது என்று சொல்வது நடைமுறை; ஆனால் இல்லை என்று சொல்வது பிடிவாதம் அல்லது அறியாமை. ஆகவே இப்படிப்பட்ட குழப்பமான உணர்வுகளே இந்தச்சமுதாயத்திலே உருவாகிக்கொண்டிருந்த காரணத்தினாலே தான் இந்த ஆலயங்களைப் பற்றிக்கூட நமக்குப் பல்வேறு உண்மைகள் தெரியாமல் நாம் அதைப்பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருந்தோமே என்று நான் எண்ணுவதுண்டு.

வாழ்க்கைப்பயணத்தில் ஒரு மாறுதல் கட்டம்

நம்முடைய தவத்திரு குன்றக்குடி அடிகளார் இருக்கிற பகுதிதான் 30, 40 ஆண்டுகளுக்கு முன்னாலே எனக்குச் சொந்த ஊர் மாதிரி. அந்த ஆலயம் தான் எங்களுக்குமோர் ஆலயம். ஒரு ராத்திரி ஏறி குன்றக்குடிக்குப் புறப்பட்டு வந்தவன்தான் நான் நாச்சியார் புரத்திலிருந்து. குன்றக்குடி ஆலயத்திற்குப் போய் கடவுளை எல்லாம் வணங்கிவிட்டு பிறகு வீட்டிலே சொல்லிக்கொள்ளாமலே ஓடிவந்து விட்டேன். அதுதான் என்னுடைய வாழ்க்கைப்

பயணத்திலே ஒரு மாறுதல் கட்டம். அப்படிப் பட்ட ஒரு காலத்திலே நான் ஆலய வழிபாடு களிலே அவ்வளவு அதிகமான நம்பிக்கை வைத் திருந்தவன். T.K.S. சகோதரர்களின் நாடகக் குழுவில்12 வயதில் நான் சேர்ந்ததற்குப் பிறகு உடைகள் வைத்துக்கொள்ளும் பெட்டிக்குள்ளே சாமிபடத்தையெல்லாம் வைத்துப்பூசை செய்து அன்றைக்குத் தந்தைப் பெரியாருடைய பகுத் தறிவு இயக்கத்தைச் சார்ந்தவர்கள் அந்த நாடகக்குழுவிலே இருந்தபொழுது அவர்களை எல்லாம் எதிர்த்துக் கொண்டிருந்தேன்.

வட்டியும் முதலுமாக

அதற்குப் பிறகு தந்தைப்பெரியாருடைய இயக்கத்திலே என்னையும் ஒரு தொண்டனாக நான் ஆக்கிக்கொண்டு ஏறத்தாழ 1940 ஆம் ஆண்டிலே இருந்து 1977, 1978ஆம் ஆண்டு வரை சில நேரங்களிலே நான் ஆலயத்திற்குள் சென்றிருக்கிறேன். அந்த ஆலயத்திற்குள்ளே நுழைந்து அங்கே என்ன நடைபெறுகிறது என் பதைத் தெரிந்துகொள்ளவோ அந்த ஆலயத்தி னுடைய சிறப்பான சிற்பங்களை பார்க்கவோ நுழைந்திருக்கிறேனே தவிர வேறுநேரங்களிலே நான் ஆலயத்திற்குள்ளே நுழைந்ததில்லை. போகவில்லை; போகவேண்டும் என்ற அந்த உணர்வும் இல்லை. ஆனால் இந்த 37 வருடம் 38 வருடம் ஆலயத்திற்குள்ளே போகாமல் இருந்த அந்த கடனையெல்லாம் வட்டியும் முதலுமாகச் சேர்த்து நான் அற நிலையத்துறைக்குப் பொறுப்பேற்றுக்கொண்ட தற்குப் பிறகு ஒரு நாளைக்கு நான்கு ஆலயங் கள் செல்லவேண்டிய அவசியத்திற்கும் ஆளாக்கப்பட்டிருக்கிறேன். நூற்றுக்கணக்கான படிகள் ஏறி மலைமேல் இருக்கிற ஆண்டவனை எல்லாம் வணங்கவேண்டிய நிலைக்கும் நான் ஆளாக்கப்பட்டிருக்கிறேன். தருமை ஆதீனம் அவர்களுக்கே தெரியும். நான் திருச்சி மலைக் கோட்டை குடமுழுக்கு விழாவிற்கு கடைசி வரை படிகளில் ஏறித்தான் போய்வந்தேன். அதைப்போல ஒருநாள் பட்டப்பகல் 12 மணி வெயிலிலே கொண்டுபோய் தருமபுரியிலே உள்ள ஒரு தொன்மையான ஆலயத்திற்குக் கொண்டுபோய்விட்டார்கள்; மலை மேல் இருக் கும் அந்த ஆலயத்திற்கு 12 மணி அளவில் ஏற ஆரம்பித்து 2.30 மணிக்குத்தான் கீழே இறங்கினோம்.

ஐந்து ஆறு ஆண்டுகளில் பெற்ற அனுபவம்

நான் இதைச் சொல்லுவதற்குக் காரணம், இன்றைக்கு இந்த ஆலயங்களுக்குள்ளே நுழை வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததற்குப் பிறகு தான் ஆலயங்களைப்பற்றிய ஆரம்ப அறிவே இப்பொழுது பெற்றுக்கொள்கிற வாய்ப்பை எங்களைப் போன்றவர்கள் பெற்றுக்கொண்டி ருக்கிறார்கள் என்றால், எந்த அளவுக்கு நம் மிடத்திலே இந்த ஆலய வழிபாடுகள் பற்றி-ஆலயங்களுடைய அமைப்பு பற்றி ஆலயங்களு டைய தேவை பற்றிப் பெரியவர்கள் எடுத்துச் சொல்லாமல் இருந்திருக்கிறார்கள் என்பதற் காகச் சொல்லுகிறேன். நம்முடைய முத்தமிழ்க் காவலர் அவர்கள் இந்த ஆலய வழிபாடுகளிலே ஒரு பொது முறையைக்கொண்டு வரவேண் டாமா? என்கிற ஒரு பிரச்சினையின் அடிப் படையிலே சில கருத்துக்களை சொன்னார்களே அவர்களுடைய சிந்தனைக்காகவும் விதைக்கி றேன். ஆகவே ஆலயங்களுக்குப் போய் அப்படி தொடர்பு ஏற்படுத்திக்கொண்ட பிறகு நான் சைவ ஆலயங்களுக்குப் போகிறேன். வைணவ ஆலயங்களுக்குப்போகிறேன். அம்பாள் ஆலயங் களுக்குப் போகிறேன். அந்தந்த ஆலயங்களின் பெயராலேயே பெரியவர்களாக விளங்கி கொண்டிருக்கிறவர்களைச் சந்திக்கவேண்டிய சந்தர்ப்பங்களும் வருகின்றன. நேற்று முன்தினம் கூட மயிலாப்பூருக்கு ஒருவர் அழைத்தார்கள். நீங்கள் அந்த இடத்திற்கு வந்து பார்க்கவேண் டும் என்று. அங்கே போகவேண்டிய ஒரு அவ சியம் என்னவென்றால் அவர்கள் என்னதான் செய்கிறார்கள்? ஏன் அப்படி மக்கள் அங்கே போகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள் வதற்கும் நான் அந்த இடத்திற்குச் செல்லு கிறேன். என்ன சிறப்பு அவர்களிடத்திலே இருக்கிறது. இவ்வளவு மக்கள் அங்கே போகி றார்களே! ஏன் போகிறார்கள்? அதைத் தெரிந்து கொள்ளாமல் நான் ஒரு முடிவுக்கு எப்படி வருவது என்பதற்காகவும் போகிறேன். நான் காலையிலே இருந்து தொடர்ந்து இந்த நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு, 13ஆம் தேதி மதுரை யிலே அந்த மாநாட்டிலே கலந்துகொள்ள இருக்கிறேன். நான் இதைச்சொல்லுவதற்குக் காரணம், அறநிலையத்துறையின் அமைச்சராக இருக்கிறவர் இவ்வளவு ஆழ்ந்து ஆழ்ந்து, இந் தத்துறையினுடைய வரலாறுகளை - சிறப்புக் களை இதற்கு இருக்கிற அடிப்படை உணர்வு களைப் பற்றி தெரிந்து கொள்ளவேண்டும் என்று முயற்சித்து, அப்படித் தெரிந்துகொண்டி ருக்கிற சில உண்மைகளை இந்தநாட்டினுடைய வரலாற்றுச் சிறப்புக்களை பெருமைகளை எடுத்துச்சொல்லுகிற ஒரு அறிவும் ஆற்றலும் எனக்கு இந்த 5, 6 ஆண்டுகளில் கிடைத்திருக் கிறது என்பதற்காகவும் நான் இதைச் சொல்லு கிறேன்.

அந்த இரகசியத்தை வெளியிட்டேன்

இந்தச் சமுதாயத்திலே சமய உணர்வு, ஆன்மீக உணர்வு நிச்சயம் பாதுகாக்கப்பட வேண்டும். அது எந்த முறையிலே நீங்கள்பாது காப்பீர்களோ எனக்குத்தெரியாது. அதற்கு நீங்கள் எல்லாம் தலைமையேற்று நடத்தித்தர வேண்டும் என்பது தான் தமிழ்நாட்டு மக்க ளின் சார்பிலே உங்களிடத்திலே வைக்கிற கோரிக்கையாகும். இதற்கு என்ன வழியைக்

கண்டுபிடிப்பீர்களோ, எங்களுக்குத் தெரியாது. நாங்கள் மக்களைச் சந்திக்கிறபொழுது மக்களுடைய எண்ணங்களை நாங்கள் தெரிந்து கொள்கிறோம். மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கிற கண்ணாடிகளாக நாங்கள் விளங்குகிறோம். ஒவ்வொரு நேரத்திலே போகிற போது அந்த உணர்வுகள் மாறிவிடுகின்றன. சூழ்நிலைகள் வேறுபடுகின்றன. நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். முதன் முதலில் தமிழ் நாட்டில் மதமாற்றம் நடைபெற்றது என்கிற செய்தியை வெளியிலே ஒரு பொது நிகழ்ச்சியிலே பகிரங்கமாக அறிவித்ததே நான்தான். இன்றைக்கு எங்களுடைய பங்காளிகளாக விளங்கிக்கொண்டிருக்கிற - பகுத்தறிவுக்குச் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறவர்கள், ஒரு செகுலர் ஸ்டேட்டிலே இருக்கிற அமைச்சர் - அரசாங்கத்தில் இருக்கிறவர், எப்படி மதத்தலைவர்களை வணங்கலாம்? வாழ்த்தலாம்? பாராட்டலாம்? என்று வழக்கு மன்றத்திற்கும் கூடப்போகிற சூழ்நிலையில் இருக்கிற இந்தக் காலத்திலும் நான் இதைப்போன்ற சமயம் சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்ச்சியிலேதான் அந்த இரகசியத்தை வெளியிட்டேன். அதுவரை மீனாட்சிபுரத்திலே நடைபெற்ற அந்த சம்பவம் வெளி உலகத்திற்கே தெரியாது. நான் இதைச்சொல்லுவதற்குக் காரணம் அந்த மதமாற்றம் தவறா சரியா என்பதற்குள்ளே நான் நுழைய விரும்பவில்லை. ஆனால் நம்முடைய சமயத்திலே இருந்து-காரணம் என்னைப்பெற்ற தாய் தந்தையர் 'இந்து' என்று தான் அழைக்கப்பட்டார்கள். அதனாலே நான் என்னை 'இந்து' என்று சொல்லிக் கொள்வதில் வெட்கப்படவில்லை என்று நான் சட்ட மன்றத்திலேயே கூறினேன்.

இரண்டு பக்கமும் இடி

என்னைச் சைவன் என்று நீங்கள் அழைக்கிறீர்களா! தாராளமாக அழையுங்கள். எனக்கு அதிலே வருத்தமும் இல்லை. ஆனால் நான் எதற்குள்ளும் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதவனாக ஒரு பொறுப்பிலே இருக்கிறேன் என்ற காரணத்தினாலேயே நான் இந்த சமயத்தை-இந்த ஆன்மீகத்தை இந்த மண்ணுக்கே உரிய தத்துவங்களை அடகு வைத்து அழிப்பதற்குத் தரகு வேலை பார்ப்பவனாக மாறமாட்டேன் என்பதை நான் மிகத் தெளிவாக எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனால்தான் உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி என்பதைப்போல் என்னை இங்கே இருக்கின்ற குருமகா சந்நிதானங்களும் கொஞ்சம் சந்தேகக் கண்களோடு பார்க்கிறார்கள். அந்தப் பக்கத்திலே நாங்கள் வளர்ந்து வந்திருக்கின்ற எங்களுடைய பங்காளிகளும் இவரெல்லாம் ஆழ்வார் ஆகிவிட்டார் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆழ்வார் ஆவது அரிது

ஆழ்வார் ஆவது ஒன்றும் மரியாதை குறைவல்ல. எல்லோரும் ஆழ்வார் ஆகிவிட முடியாது. நாயன்மார் ஆகிவிட முடியாது. மன்னராக இருந்த குலசேகரப்பெருமான், முதலமைச்சராக இருந்த மாணிக்கவாசகர், மிகப்பெரிய மாவீரனாக -படைத்தளபதியாக இருந்த பரஞ்சோதி இவர்கள் எல்லாம் இந்த நாட்டிலே வரலாற்றை உருவாக்கி விட்டுச் சென்றிருக்கிறார்கள். அந்த வரலாற்றை மாற்ற முடியாது, அது எத்தனை ஆண்டுக்காலமானாலும், எவ்வளவு புதுவெள்ளம் வந்து அழிக்க முயன்றாலும்.

எங்களைச் சந்தேகிக்காதீர்கள்

களையை எடுக்கிறோம் என்று பயிரையே அழிக்கிற முயற்சி இந்தச் சமுதாயத்திலே நடந்ததன் பயனாக இந்த நாட்டினுடைய தத்துவங்கள் எல்லாம் அழிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டபோதும், இன்றைக்கு உலகம் தழுவிய ஒரு சைவ சித்தாந்த கருத்தரங்கத்தை இன்றைக்கு நம்முடைய மகா சந்நிதானத்தின் சார்பிலே - பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் சார்பிலே இங்கே நடத்தப்படுவது வரலாற்றிலே இடம் பெறுகிற ஒன்று. எந்தப் பாவேந்தர் புரட்சிக்கவிஞர் பெயராலே பல்கலைக் கழகம் இருக்கிறது! அதை நீங்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய தொடர்போடும் இங்கே சைவ சித்தாந்த கருத்தரங்கு! உலகம் தழுவிய கருத்தரங்கு; நான் இதற்கு மேலே சொல்ல விரும்பவில்லை. ஒன்றை மாத்திரம் மனம் திறந்து சொல்கிறேன். என்னையும் சந்தேகிக்காதீர்கள்; எங்களை எல்லாம் நடத்திக் கொண்டிருக்கின்ற இந்த நாட்டினுடைய தளநாயகர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களையும் சந்தேகிக்காதீர்கள்! அது ஒன்றுதான் சான்றோர்களுக்கு நான் வைக்கிற வேண்டுகோள் ஆகும்.

சேரிக்கு வாருங்கள்

நாங்கள் உங்களைச் சந்திக்க வரவில்லை என்பதனாலேயே உங்களுக்கு விரோதிகளாக இருக்கிறோமோ என்று எண்ணிக்கொள்ளாதீர்கள். ஏனென்றால் தருமை ஆதீனம் அவர்களை முதன் முதலாகச் சந்திக்கிற வாய்ப்பை எனக்குத்தந்தவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆவார்; . காரணம் என்னுடைய தாய் வீட்டைப் போன்றது அந்தக்குன்றக்குடி; ஆகவே உங்களைப் பார்க்கவேண்டும் என்று விரும்புகிறோம்; எங்கே என்பது தான் எங்களுக்கு இருக்கிற பிரச்சினை, உங்களை அடிக்கடி பார்க்கவேண்டும் என்று விரும்புகிறோம்; எப்பொழுது என்பது தான் நமக்குமுள்ள பிரச்சினை, நீங்கள் இந்த நாட்டு மக்கள் மத்தியிலே பவனி வரவேண்டும்; சேரிவாழ் மக்கள்

என்று புறக்கணிக்கப்படுகிறார்களே! ஒன்றும் தெரியாதவர்களாக ஆதி திராவிட மக்கள்-அவர்கள் மத்தியிலே நீங்கள் பவனி வந்தாக வேண்டும். இந்த நாட்டிலே யார்யாரோ உங்களை வியாபாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்; விஷமத் தனத்திற்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்; அழிவுக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அருள் கூர்ந்து உங்களை நான்மன்றாடி கேட்டுக் கொள்கிறேன். அவைகளுக்கு அனுமதி அளித்து விடாதீர்கள். நீங்கள் இடமளித்தால் அதற்குள்ளே யார் நுழைந்து கொள்கிறார்கள் என்பதே புரியாமல் போய்விடும். காவி அணிந்துகொண்டிருக்கிறவர்களெல்லாம் வணக்கத்திற்குரியவர்கள் என்று யார் சொன்னாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம். அவர்கள் பத்தரை மாற்றுத்தங்கமாக இருக்கிறார்களா? என்று நிறுத்துப்பார்ப்பது கூட எங்களுக்கு அவசியமில்லை. அவர்களுடைய பார்வையிலே - பழக்க வழக்கத்திலே - பண்பிலே தெரிந்து கொள்ளவேண்டுமென்று நாங்கள் எண்ணிக்கொண்டிருக்கிறோம்.

குப்பனுக்கும் சுப்பனுக்கும் சொல்வது யார்?

இந்த நாட்டிலே சமயத்தை யார் எதிர்த்தார்கள்? சமய உணர்வு ஏன் குறைந்தது? சைவ சித்தாந்தம் என்பது இன்றைக்கு உலகம் தழுவிய ஆராய்ச்சி அரங்கத்தை நடத்த முடிகிறதே! அப்படி நடத்த முடிவதற்கு அடிப்படை காரணமாக ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே தோன்றியிருக்கிறதே! அது நம்முடைய தாய்த்தமிழிலே தோன்றியிருக்கிறதே! இந்தத் தமிழ்மண்ணிலே தோன்றிய சான்றோர்கள் அல்லவா எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள்! இதை அருள்கூர்ந்து 1984ம் ஆண்டில் 59வது வயதிலே தான் நானே தெரிந்துகொள்கிறேன். இதற்கு யார் காரணம் என்பதை உங்களுக்கு முன்னாலேயே பணிவன் போடு வைக்கிறேன்.

இந்தச் சைவ சித்தாந்தம் என்பது ஒரு அடிப்படை மூடநம்பிக்கையிலே கட்டப்பட்டது அல்ல; அதை நீங்கள் இங்கே எடுத்து விளக்கிக் கொண்டு இருக்கிறீர்கள்! ஆனால் நாட்டிலே படிக்கத் தெரியாத பாமரர்குப்பனும் சுப்பனும் இருக்கிறார்களே! 60 சதவீதம் பேர் படிக்காதவர்கள், கை நாட்டுக்காரர்கள்; அவர்களுக்குச் சொல்வது யார்? தயவுசெய்து நான் அதைத்தான் உங்கள் முன்னாலே பணிவன்போடு வைக்க விரும்புகிறேன். உங்களுக்குக்கென்று சில பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் இருப்பதாகச் சொல்கிறீர்கள்! அதைத்தான் நான் திருச்சியிலே - மலைக்கோட்டையிலே ஆதீனம் அவர்களிடத்திலே விவாதித்தபோது அவர்களும் சொன்னார்கள். ஆனால் அதற்கு ஏதாவது ஒரு மாற்றுவேண்டும். ஏனென்றால் கால மாற்றத்திற்கேற்ப நம்முடைய சமயமும் மாறுகிறது; தத்துவமும் மாறுகிறது. நான் அதைத்தான் இங்குசொல்ல விரும்புகிறேன். தயவுசெய்து இந்த நாட்டு மக்களிடத்திலே இந்தக் கருத்துக்களை எடுத்துக்சொல்வதற்குக் கொஞ்சம் காலத்தை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்; அதற்கென்று நேரம் ஒதுக்குங்கள்; மக்கள் மன்றத்திற்கு வாருங்கள்.

சமயம் இல்லையானால் தமிழும் இல்லை

இந்த ஐந்து, ஆறு ஆண்டுக்காலத்திலே நான் பெற்ற அனுபவம், கற்றுக்கொண்டிருக்கிற அனுபவம், நம்முடைய முத்தமிழ்க் காவலர் போன்றவர்களின் உரைகளை எல்லாம் கேட்டு, அனுபவங்களை எல்லாம் தெரிந்து கொண்ட பிறகு இந்த நாட்டிலே ஆன்மீகமும் சமயமும் இல்லையானால் தமிழும் இல்லை; அதை நாம் புரிந்துகொண்டாக வேண்டும். தமிழைப் பாரதிதாசனிடத்திலே இருந்து மாத்திரம் தொடங்க முடியாது. தொல்காப்பியர் காலத்திலே இருந்து தமிழைத் தொடங்க நீங்கள் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள்! தமிழ் செல்வத்தை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

'தமிழ் வாழ்க' என்று ஏதோ 1938ஆம் ஆண்டிலே இந்தி எதிர்ப்பில் மாத்திரம் ஒரு முழக்கம் வந்தது என்று யாரும் வரலாற்றை எழுதவேண்டாம்! 1300 ஆண்டுகளுக்கு முன்னாலே 'தமிழ் ஞான சம்பந்தன்' என்று தன் பெயரையே வைத்துக் கொண்ட ஒரு மிகப் பெரிய தலைவன் இந்த மண்ணிலே பிறந்து வாழ்ந்திருக்கிறான். அதை இந்த நாட்டிற்கு நாம் எடுத்துச்சொல்லவேண்டும். தமிழை எத்தனைப்பெயரிட்டு அழைக்கலாம். சொன்ன அந்தப் புலவர் பெருமகன்-அவனை இந்த நாட்டிற்கு அறிமுகப்படுத்துவது யார்? நீங்கள் எங்களிடத்திலே விட்டால் நாங்கள் எங்களுடைய தலைவர்களுடைய வாழ்த்தோடு நிறுத்திக் கொள்வோம். அதற்குத் மேலே வரமாட்டோம் அது இயற்கை, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நம் தாய்மொழியாம், தமிழை, அழிக்கப்புறப்பட்ட படைகள் பல, சக்திகள் அநேகம்! ஆனால் அவைகளை எல்லாம் தாங்கி நின்று கொண்டிருக்கிறது உலகத்திலே, தலைநிமிர்ந்து தமிழ்மொழி என்றால் அதுதான் தமிழுக்குள்ள வலிவு-தமிழுக்குள்ள ஆற்றல்; அருள்கூர்ந்து நாம் இந்தச் சமயத்திலாவது ஆன்மீகத்திலே இருந்து தமிழைப் பிரிக்கவேண்டும் என்கிற எண்ணத்திற்கு ஒரு முடிவு கட்டியாகவேண்டும். தமிழ் என்பது ஆன்மீகத்தோடு இரண்டறகலந்துவிட்ட ஒன்று. ஆகவே அப்படியெல்லாம் தமிழை வளர்த்த சான்றோர்கள் பலர் இருப்பதைத் தயவு செய்து சாதாரண மக்களுக்குப் பட்டியல் போட்டுத்தாருங்கள் அவர்கள் வரலாற்றை விரிவாக எடுத்துச்சொல்லுங்கள்.

எனக்கு உள்ள சந்தேகங்கள்

இன்றைக்குச் சைவ சித்தாந்தத்தைப் பற்றி இங்கே ஆய்வுக்கட்டுரைகள் வந்திருக்கின்ற-அதனுடைய தொகுப்புகளை-குறிப்புகளாக வந்திருக்கின்றவற்றைக் கொஞ்சம் புரட்டிப் பார்த்தேன். எனக்கு இருக்கிற சந்தேகத்தைப் பெரியவர்கள் முன்னாலே வைக்கிறேன்; இங்கே இருக்கிற அறிஞர்கள் முன்னாலே வைக்கிறேன்.

இன்றைக்கு இந்தச்சைவ சித்தாந்தத்தை பற்றிப் பேசுகிற பொழுது, இந்தச் சித்தாந்தத்தினுடைய சிறப்புகள் என்ன? இச்சித்தாந்தம் எப்படி மற்ற சமயங்களோடு -மற்ற நெறிகளோடு இணைந்து வருகிறது அல்லது மாறுபாடு கொள்கிறது? இன்றைக்கு வளர்ந்து கொண்டு வருகிற விஞ்ஞானத்தோடு இந்தச் சமயம், இந்தச் சித்தாந்தம் ஒத்துப்போயிருக்கிறதா? நம்முடைய முன்னோர்களுக்கு விஞ்ஞானப்பார்வை, விஞ்ஞான அறிவு இருந்ததா இல்லையா? இன்றைக்கு விண்வெளியிலே சுற்றுகிறான் ராகேஷ்சர்மா. அந்த விண்வெளியைச் சுற்றுகிற கருத்தோடு நம்முடைய சைவ சித்தாந்த கருத்து ஒத்துவருகிறதா இல்லையா? அதற்கு அடிப்படை நம்முடைய சைவ சித்தாந்தத்திலே உள்ளதா இல்லையா?

விஞ்ஞானிகளுக்குக் கற்றுத்தந்தவர்கள் நாம்

இன்றைக்கு நம்முடைய P.T. இராஜன் அவர்களுடைய திருக்குமாரர் அவர்கள் இங்கே பேசுகிற போது கூட சில கருத்துக்களைச் சொன்னார்கள். எனக்குக் கொஞ்சம் அரைகுறை ஆங்கிலம் வரும்; நான் புரிந்துகொண்டிருக்கிற அந்த அரைகுறை ஆங்கிலத்திலே சொல்கிறேன். அவர்கள் இந்த Basic elements-Five Basic elements - பஞ்சபூதங்கள் என்று நம்முடைய சமயங்களிலே சொல்லுகிறோம், அதை அவர்கள் சுட்டிக்காட்டிவிட்டு, அதற்குப்பிறகு பஞ்ச இந்திரியங்களைப் பற்றியும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இரண்டையும் அவர்கள் இணைத்தார்களோ என்று எனக்கொரு சந்தேகம். பஞ்ச இந்திரியங்கள் என்பது மனிதனுக்கு இருக்கிற ஐந்து அவயங்களுடைய பணிகள், வேலைகள். ஆனால் பஞ்ச பூதங்கள் Five Basic elements - என்று இன்றைக்கு உலகத்திற்கு விஞ்ஞானி கற்றுத்தருகிறானே! இதை நம்முடைய முன்னோர்கள் 3000 ஆண்டுகளுக்கு முன்னாலே தொல்காப்பியத்திலே சொல்லியிருக்கிறார்களா இல்லையா? தொல்காப்பியத்திலே சொல்லியிருக்கிறார்கள் என்று நீங்கள் பாடலைக் காட்டுகிறீர்களே! அப்படியானால் அந்தப் பாடலை இந்த உலகிற்கு வழங்கினோமா? பள்ளிக்கூடப் பாடத்திட்டங்களிலே சேர்த்திருக்கிறோமா? இன்றைக்குப் பூமி உருண்டை என்று கலிலியோ கண்டுபிடித்தான் என்று இங்கே இருக்கிற ஔவை நடராஜன் போன்ற ஆசிரியர்கள் எல்லாம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களே! இந்த பூமி உருண்டை என்று நம்முடைய முன்னோர்கள் பாடினார்களா இல்லையா? ஞாலம் என்கிற பெயரே உருண்டை என்ற பொருளைக் குறிக்கும் என்று ஒருமுறை 25 ஆண்டுகளுக்கு முன்னாலே சிதம்பரத்திலே ஒரு தமிழ் மாநாடு நடைபெற்றபொழுது நம்முடைய தமிழ்ப்பெரும் புலவர் வெள்ளைவாரணார் பேசினார்; அப்படியானால் ஞாலம் என்ற சொல்லால், உலகம் உருண்டை வடிவம் ஆனது என்பது விளக்கம் ஆகிறது அல்லவா? மாணிக்கவாசகரும், பாடியிருக்கிறார் என்று நீங்கள் தானே பாடல்களை எல்லாம் எடுத்துத்தருகிறீர்கள்? அப்படியானால் விஞ்ஞான ஆராய்ச்சி-அறிவியல் ஆராய்ச்சி இல்லாமல் பாடியிருக்க இயலுமா? 3000 ஆண்டுகளுக்கு முன்னாலே நம் முன்னோர்கள் சொல்லிச்சென்ற கருத்தை நாம் ஏன் மக்களுக்கு எடுத்துச்சொல்லவில்லை? இன்றைக்கும் பள்ளிக்கூடப் பாடல்களிலே இந்த பூமி உருண்டை என்பதற்கு கலிலியோ கண்டு பிடித்த அந்தத் தத்துவத்தைக்காட்டி, ஒரு கப்பல் படமும் போட்டு, அது போய்க்கொண்டே இருக்கிறது- இது முதல் நிலை - இது இரண்டாம் நிலை - இப்பொழுது கப்பல் மறையப் போகிறது என்பதாகத் தானே விளக்கிக் கொண்டு இருக்கிறோம். நான் படித்த காலத்திலே இருந்தது; இப்பொழுது என்ன இருக்கிறதோ தெரியாது.

நிலம், நீர், நெருப்புக்கென ஆலயங்கள்

எனக்கு இந்த ஆலயங்களுக்குள்ளே போன தற்குப்பிறகு தான் சில விவரங்கள் எல்லாம் தெரியவந்தது. காஞ்சிபுரத்திற்குப் போகிறேன்; அங்கே இருக்கிற ஏகாம்பரநாதர் ஆலயம் மண்ணுக்குரிய ஆலயம்; அங்கே கருவறையிலே இருக்கிற லிங்கம் மண்ணாலே செய்யப்பட்டது. அங்கேயிருக்கிற தலவிருட்சம் தோன்றி எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆகின்றன. நானும் நம்முடைய வனத்துறை, மற்ற மற்ற ஆராய்ச்சியாளர்களிடம் கேட்டுக்கொண்டிருக்கிறேன்; இதை ஆராய்ந்து சொல்லுங்கள். இந்த மரத்தின் வயது என்னவென்று கண்டுபிடித்துச் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டே இருக்கிறேன். இன்னும் விடை தெரியவில்லை.

இங்கே வருகிறேன்! நம்முடைய முத்தமிழ் காவலர் இருக்கிற ஊருக்குப் பக்கத்திலே! திருவானைக்கா: அது நீருக்கான ஆலயம்: அங்கே கர்ப்பக்கிரகம் -கருவறை நீருக்குள்ளே இருக்கிறது. நம்முடைய தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் ஆதீனத்திற்குரிய தலைமையிடம் திருவண்ணாமலை. அங்கே நெருப்புக்கான ஆலயம்! தமிழகத்திலேயே நெருப்புக்காக ஒரு விழா வேறு எங்கேயும் கிடையாது. அந்த ஒளி

விழா திருவண்ணாமலையில்தான் இருக்கிறது. கார்த்திகைத் தீப விழா.

அற்புதம் தெரியவில்லையே

காற்றுக்கான ஆலயம் உள்ள தலம் திருக்காளத்தி; அங்கு நான் இன்னும் சென்றதில்லை; காரணம் அந்தத்தலம் நம்முடைய மாநிலத்திற்கு அப்பால் ஆந்திர மாநிலத்திலே இருக்கிறது. அங்குச் செல்லக்கூடிய வாய்ப்பு இன்னும் வரவில்லை. அதற்குப் பிறகு உலகத்திலேயே அற்புதமான அறிவை -விஞ்ஞானத்தை எல்லாம் கொண்டு விளங்கும் ஆலயம் சிதம்பரம்; அது ஆகாயத்திற்கான ஆலயம். இன்றைக்கும் சிதம்பர ரகசியம் என்கிறார்களே! அது என்னவென்றால் கருவறையிலே ஒன்றும் இல்லை. இந்த வெளியை விஞ்ஞானத்தை நடராஜர் வடிவமாக சமைத்திருக்கிறார்கள். உலகிலே இருக்கிற அறிஞர்கள் எல்லாம் அந்த நடராஜருடைய வடித்தைப் பார்த்து வியக்கிறார்கள்; ஆனால் நம்முடைய நாட்டு மக்களுக்கு அந்த அற்புதமும் தெரியவில்லை; அதைக்கொண்டு போய் எத்தனை லட்சம் டாலருக்கு விற்கலாம். பத்துலட்சம் அமெரிக்க டாலர் கிடைக்கிறதே என்று திருடிக்கொண்டு போகத் தெரிகிறதே தவிர, அதனுடைய அற்புதத்தை, அறிவியலைத் தெரிந்துகொள்ள முடியவில்லையே!

மிகச்சிறந்த ஆராய்ச்சி

இவை எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே தோற்றுவிக்கப்பட்ட ஆலயங்கள்-சைவ ஆலயங்கள்! சைவ சித்தாந்தத்தைப் பற்றிக் கருத்தரங்கத்தை நடத்திக்கொண்டிருக்றோமே! இதற்கு எங்களுக்கு விளக்கம் தாருங்கள்! நாட்டு மக்களுக்கு நாங்கள் எடுத்துச் சொல்வதற்கு இதை ஆராய்ந்து தாருங்கள்! இதையும் நான் சில ஆராய்ச்சியாளரிடத்திலே கேட்டேன். எதற்காகக் காஞ்சியை மண்ணுக்குரிய தலமாகக் கொண்டார்கள்? எதற்காகத் திருவண்ணாமலையை நெருப்புக்குக் கொண்டார்கள்? அதிலேயும் மிகச்சிறந்த ஆராய்ச்சி இருக்கிறது. இன்றைக்கு நீங்கள் சமீபத்திலே ஒரு செய்தியை நீங்கள் படித்திருப்பீர்கள்! 15 நாளுக்குள்ளாக வந்தது. உலக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், இந்தியாவிலேயே மிகத்தொன்மை வாய்ந்த நகரமாகக் காஞ்சியைத் தேர்ந்தெடுத்து, அதை ஆய்வு செய்வதற்காக அந்த நிறுவனம் நிதியை ஒதுக்கி இருக்கிறது! அதனாலே தான் நம்முடைய முன்னோர்கள் மண்ணுக்கு உரிய ஆலயமாகக் காஞ்சியிலே உள்ள அந்த ஏகாம்பரநாதர் ஆலயத்தைக் கொண்டிருக்கிறார்கள். சரி, திருவண்ணாமலையை நெருப்புக்கான தலமாக ஏன் கொண்டார்கள்? அதையும் நான்கேட்டேன். ஆராய்ச்சியாளர்களிடத்திலே ! நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கிற மலைகளிலே வயது முதிர்ந்த மலை; கோடிக்கணக்கான ஆண்டுகள், என்ன வயது என்று அறிய முடியாத மலை திருவண்ணாமலை. அது மாத்திரமல்ல. Fire content - நெருப்புச் சக்தி அதிகமாக இருக்கிற மலையும் திருவண்ணாமலை தான். அதனாலேதான் திருவண்ணாமலையைச் சுற்றி ஆசிரமங்கள் எல்லாம் அமைக்கப்பட்டு இருக்கின்றன. மருத்துவர்கள் மருத்துவ நிலையங்களை எல்லாம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத்திருவண்ணாமலையைச் சுற்றி வலம் வருவதற்கெல்லாம் கூடப்பாதைகள் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதனாலேதான் அங்கே ஒளிக்கு வழிபடுகிற விழா, அந்தக் குன்றே நெருப்புத்தன்மை வாய்ந்த குன்று என ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். திருவானைக்காவல் எந்தக்காலத்திலேயும் நீர் சுரந்துகொண்டே இருக்கிற தலம். திருக்,ாளத்திக்கு இன்னும் நான் சென்றதில்லை. சென்று வந்த மக்கள் தெரிந்து சொல்லுகிறார்கள். அது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை. மூலக்கர்ப்பக்கிரகத்திலே இருக்கிறவிளக்கு காற்றிலே ஆடிக்கொண்டே இருக்கிறது என்று சொல்கிறார்கள். எப்படி அந்தக்காற்று உள்ளே வருகிறது? எப்படி அதை அமைத்திருக்கிறார்கள் என்பதே தெரியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே திருக்காளத்தி காற்றுக்கானதலம். நம் சிதம்பரம், ஆகாயத்திற்கான தலம்.

புரட்சித்தலைவர் கொடுத்த பேறு

ஆகவே இந்த Five basic elements பஞ்ச பூதங்கள் தான் இந்த உலகை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றன என்ற அந்தத் தத்துவத்தை நீங்கள் தொல்காப்பியத்திலே இருந்து எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்; அந்தப்பாட்டு எனக்குத் தெரியாது. ஏனென்றால் நான் தமிழையும் சரியாகப்படிக்காதவன்; ஆங்கிலத்தையும் தெரிந்துகொள்ளாதவன்; இப்படி அரைகுறையாக நின்று கொண்டு திண்டாடிக்கொண்டிருக்கிறவன். ஏதோ இந்தப்பெரியவர்கள் சொல்லுகிற அந்த வார்த்தைகளிலே இருந்து சிந்திக்கிற ஆற்றலை என்னைப் பெற்ற தாய் தந்தையர் எனக்கு வழங்கியிருக்கிறார்கள்; தந்தைப் பெரியாரும் சிந்திக்கிற ஆற்றலைத்தந்தார்; பேரறிஞர் அண்ணா அதை வளர்த்தார்; இன்றைக்கு, அதைச் செயலாற்றுகிற அந்தச் சூழ்நிலையைப் புரட்சித்தலைவர் எனக்கு அளித்தார்.

விஞ்ஞானத்தின் அடிப்படையில் எழுந்த தத்துவம்

ஆகவே நான் அந்த சிந்தனையில் சொல்கிறேன். தொல்காப்பியத்திலே நீங்கள் இந்த நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்-இவை ஐந்தையும் குறிப்பிடுகிற பாடல் வைத்திருக்கிறீர்கள். ஆகவே நம்முடைய சைவ சித்தாந்தம் என்பது வெறும் தத்துவம் அல்ல. வெறும் நம்பிக்கையின் அடிப்படையிலே எழுப்பப்பட்ட

தத்துவம் அல்ல; அது ஒரு வாழ்வு நெறி. அறிவின் அடிப்படையிலே எழுந்த தத்துவம். விஞ்ஞானத்தின் அடிப்படையிலே எழுந்த தத்துவம். இல்லையானால் பாரதியார் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னாலே பாடினாரே. ''சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்'' சந்தினுக்கு என்றைக்குப்போனான் மனிதன்? வான வெளியைச் சுற்ற முடியும் என்ற அந்த தத்துவம்-அந்த உணர்வு இல்லை யானால் எப்படி பாடியிருக்க முடியும்? அவருக்கு அந்த உணர்வை எழுப்பிய அந்தத் தத்துவங்கள் எங்கே புதைந்து கிடக்கின்றன? உலகத்திலேயே மனிதன் தோன்றிய காலத்திலேயே நாம் இந்த விஞ்ஞானக் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறோம். தயவு செய்து இந்த அடிப்படையில் நம்முடைய ஆராய்ச்சியாளர்கள். அறிஞர்கள் சிந்தித்து எங்களுக்குத்தரவேண்டும்.

பாராட்டுபவனே மனிதன்

நம்முடைய மகா சந்நிதானத்தின் சார்பிலே -சென்னையிலே அவர்கள் நடத்திக்கொண்டிருக்கிற அந்த நிலையத்தின் சார்பிலே இக்கருத்தரங்கு நடைபெற்றிருக்குமே யானால், இது இன்னும் உலகம் தழுவிய அளவிற்குக்கூட மிகப்பெரிய அளவிலே தெரிந்திருக்கக்கூடும். காரணம் இது ஒரு உலகம் தழுவிய கருத்தரங்கு. இத்தகைய கருத்தரங்குகள் பாமர மக்கள் கலந்துகொள்ளும் மக்கள் மன்றத்திலேயும் வந்தாகவேண்டும். அதற்கு நீங்கள் எல்லாம் துணை நிற்க வேண்டும். நான் உங்களுக்கு மீண்டும் சொல்கிறேன். உங்களிடத்தில் எந்த விதமான மரியாதைக்குறைவோ, உங்களையெல்லாம் மதிக்கவேண்டாம் என்கிற எண்ணமோ, நீங்கள் வணங்கத்தகாதவர்கள்என்கிற கருத்தோ எங்களுக்கு அதிலும் குறிப்பாக எனக்குக் கிஞ்சித்தேனும் இல்லை என்பதை தயவுசெய்து நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். வாழ்க்கையிலே பெரியவர்களைச் சந்திக்கிற பொழுது பாராட்டுகிறவன் தான் மனிதன். பெரியவர்களைச் சந்திக்கிறபொழுது வணங்குகின்ற உள்ளம் படைத்தவன்தான் மனிதன். ஆகவே மற்றவர்களை வணங்குவதே நம்மை எதிர்ப்பதாக இருக்கிறதோ என்று தயவுசெய்து யாரும் கருதிக்கொள்ள வேண்டாம். நம்மாலே வணங்கப்படுகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் பெரியவர்கள், பெரியவர்களாக விளங்கவேண்டும் என்பது தான் எங்களுடைய கருத்து.

நான் யாருக்கும் விரோதி இல்லை

எங்களுக்கு இருக்கிற கவலை எல்லாம் இந்தச் சமுதாயத்தை யார் யாரோ எங்கெல்லாமோ இழுத்துக் கொண்டுபோகிறார்களே என்பது தான். மீனாட்சிபுரம் சம்பவத்திற்குப் பிறகு நான் அடுத்த வாரத்திலே அந்தப் பகுதிக்கே சென்றேன். அதனாலே என்மீதே கூட நம்முடைய அருமைச் சகோதரர்கள் பலருக்குக் கோபம் வருகிறது. நான் அதற்கு விரோதம் என்று கூடப்பேசுகிறார்கள். நான் யாருக்கும் விரோதமும் அல்ல. விரோதியும் அல்ல. எல்லோருமே நண்பர்கள் தான். எங்களுடைய சமயம் அப்படித்தான் கற்றுத்தந்திருக்கிறது! ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று சொன்ன சமயமே இதுதானே! ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்று சொன்ன சமயமே இதுதானே! அப்படி உலகத்திற்கே அவ்வளவு ஒரு சமத்துவக் கருத்தை - ஒற்றுமைக் கருத்தை வழங்கிய சமயத்துக்குச் சொந்தக்காரர்கள் நாம் என்பது மட்டும் அல்ல. இன்றைக்கு வளர்ந்துகொண்டு வருகிற விஞ்ஞானத்துக்கு -அறிவியலுக்கு நாம் விரோதிகள் அல்ல; எதிரிகள் அல்ல. இந்த விஞ்ஞானத்தை-அறிவியலை எங்களுடைய முன்னோர்களே தெரிந்து கொண்டிருந்தார்கள்.

நல்ல நம்பிக்கைகளை அழிக்காதீர்கள்

அதை எடுத்துச் சொல்லத்தவறிவிட்டோம். அதனாலே எங்களை மூடநம்பிக்கையிலே உழன்றுகொண்டிருக்கிறவர்கள் என்றும் குற்றம் சாட்டினீர்கள்; நாங்கள் மூடநம்பிக்கையிலே உழன்று கொண்டிருக்கவில்லை; நாங்கள் நம்பிக்கை வைக்கிறோம்; நம்பிக்கை வைக்கவில்லையானால் உலகமே இல்லை. மனிதனுக்கு மனிதன் நம்பவில்லையானால் உலகில் வாழ்க்கையே இல்லை. வீட்டை விட்டு வெளியிலே போகும் கணவன், வீடு திரும்புகிறவரை மனைவி பத்தினியாக இருப்பாள் என்று நம்பிக்கொண்டு தான் போகிறான். வீட்டைப்பூட்டிவிட்டு ''நாலு தடவை பூட்டை இழுத்துப் பார்த்துவிட்டுப் போனாலும் திரும்பி வருகிற வரை அந்தப்பூட்டுத் திறக்காமல் இருக்கும் என்பதும் நம்பிக்கைதான். ஆகவே நம்பிக்கை இல்லையானால் உலகத்தில் வாழ்வு இல்லை; ஆனால் அந்த நம்பிக்கை மூடநம்பிக்கையாக இருக்கக்கூடாது; அதையும் ஒத்துக்கொள்கிறோம்; ஆனால் மூடநம்பிக்கை என்று எல்லாவற்றையுமே, நம்பிக்கைகளையே சிதற அடித்து விடாதீர்கள்.

சைவசித்தாந்த ஆய்வு மையம்

அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே தான் இன்றைக்கு நாம் சமுதாயத்தை வளர்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த நம்பிக்கையினுடைய அறிகுறிதான் இங்கே நம்முடைய குரு மகா சந்நிதானம் இந்த அகில உலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். 40 ஆண்டுகளுக்கு முன்னாலே இதைப்போல ஒரு விழா நடந்ததாக அவர்கள் சொன்னார்கள்; ஆனால் உலகம் தழுவிய ஒரு கருத்தரங்கு, சைவசித்தாந்தத்திற்கு நடை

பெறுவது இதுவே முதல் முறை என்ற காரணத்தினாலே தான் இந்த நாட்டு மக்களின்சார்பிலே அவர்களை வணங்குவதற்கு நான் கடமைபட்டிருக்கிறேன். ஔவை நடராஜன் சொன்னார்; சென்னைப் பல்கலைக்கழகத்தினுடைய 125வது ஆண்டு விழாவில் சைவ சித்தாந்தத்திற்கு ஆய்வு மையத்தைத் தொடங்கினோம் என்று. அந்தக் குழுவிற்கு மாண்புமிகு நீதிபதி கோகுல கிருஷ்ணன் அவர்கள் தலைவர்; நான் துணைத்தலைவர், நம்முடைய வாழ்நாளிலே ஒரு பல்கலைக்கழகம். சைவசித்தாந்தத்தை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளக் கூடிய சித்தாந்தம் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறதே அதுவே மிகப் பெரிய சிறப்பு.

தமிழின் பெயரால் கேட்டுக்கொள்கிறேன்

தமிழ்நாட்டிலே சைவ சித்தாந்தத்திற்குப் பல்கலைக் கழகத்திலே மையம் தொடங்குகிற பொழுது ஒருலட்ச ரூபாயைத் தருமை ஆதீனம் அவர்கள் வழங்கினார்கள். வேறு எந்தெந்த ஆதீனங்கள் வழங்கினார்கள் என்பதற்கு இப்பொழுது என்னிடத்திலே தகவல் இல்லை. அப்படி வழங்கியிருந்தால், அனைவருக்குமே நான் இந்த நேரத்தில் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அப்படி வழங்க வில்லையானால் வழங்க வேண்டும் என்று ஆண்டவன் அவர்கள் உள்ளத்திலே அந்த அருளை உண்டாக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிப் பட்ட உணர்வோடு அவர்கள் அனைவரும் எங்களுக்கு ஒத்துழைப்பு தந்து எங்களை எந்த உணர்வுகளாலும் நீங்கள் சந்தேகப்பட வேண்டாம். நாங்கள் எல்லாவற்றுக்கும் துணையாக நிற்கிறோம்.

ஆயிரம் முறையும் வருவேன்

எங்களுக்கு இருக்கிற ஒரே வேண்டுகோள்- நீங்கள் எப்படியாவது அது எந்த சட்டதிட்டத்தை அல்லது பழக்கவழக்கத்தை மாற்றுவீர்களோ தெரியாது. நீங்கள் நாடு முழுவதும் வர வேண்டும். அங்கே நாங்கள் உங்களை இந்த நாட்டு மக்கள் மத்தியிலே சந்திக்கவேண்டும். மக்கள் உங்களைப் பார்த்து வணங்குவதை பாராட்டுவதை நாங்கள் கண்டு மகிழவேண்டும். அப்பொழுது தான் சைவசித்தாந்தம் ஆனாலும் வேறு எந்த சித்தாந்தமானாலும் இந்த நாட்டு மக்களிடத்திலே அகற்றப்படாமல், புறக்கணிக்கப்படாமல் பகுத்தறிவின் அடிப்படையிலே விஞ்ஞானத்தின் அடிப்படையிலே வளருவதற்கு வாய்ப்பாகும் என்று நான் கூறி, இந்த நேரத்திலே அந்த வேண்டுகோளை வணங்கிக் கேட்டுக் கொண்டு, நான் முதன்முறை வந்தேன் என்று நம்முடைய வணக்கத்திற்குரிய அடிகளார் அவர்கள் சொன்னார்கள். என்றாலும் ஆயிரம் முறை வருவதற்கும் நான் தயங்கமாட்டேன். ஆனால் வருவதற்குரிய சந்தர்ப்பங்களை நீங்கள் எங்களுக்கு ஏற்படுத்தித் தந்தால் இருகரம் கூப்பி வணங்குவேன் என்பதை மாத்திரம் சொல்லி, இந்த ஆதீனம் தான் அகில உலக சைவ சித்தாந்த கருத்தரங்கு நிகழ்த்த தகுதியுள்ள ஆதீனம். இந்த மண்தான்- இந்த வளாகம் தான் அதற்கு ஏற்ற இடம் என்பதை உலகத்தின் முன்னாலேநிரூபித்துக்கொண்டிருக்கிற ஆதீனகர்த்தர் அவர்களுக்கு வணங்கி விடைபெற்று அமைகிறேன். வணக்கம்.

கந்தர் சஷ்டிக் கவசம்.

காலைமாலை பாடிடுவோம் சஷ்டிக்கவசப் பாடல்
கடையருக்கும் வாழ்வுதரும் கந்தருடைய பாடல்
(காலை)

அன்னையவள் கருவினிலே வைப்பதவன் பாடல்
ஆணாகப் பெண்ணாக அருளுவதும் பாடல்
பத்துத்திங்கள் சிதையாமல் பார்ப்பதவன் பாடல்
பெறும்பொழுதும் துணையிருந்து பிறக்கவைக்கும் பாடல்
(காலை)

தாலாட்டில் தாய்நமக்கு இசைப்பதந்த பாடல்
தவழவைத்து அமரவைத்து நடக்கவைக்கும் பாடல்
கனிமழலை நாவினிலே கொஞ்சவைக்கும் பாடல்
ஊனமின்றி ஞானமோடு நம்மைத்தரும் பாடல்
(காலை)

பலகலைகள் பாரினிலே பயிலவைக்கும் பாடல்
பண்புடையார் நல்லவரை நட்புதரும் பாடல்
பணிகொடுத்துப் பொருள்கொடுத்துப் புகழ்கொடுக்கும் பாடல்
பகைகெடுத்துத் தீயவரை வேரறுக்கும் பாடல்
(காலை)

குணம் நிறைந்த வாழ்க்கைத்துணை தேடித்தரும் பாடல்
குலம் விளங்க மக்கட்செல்வம் கூட்டிவைக்கும் பாடல்
நரைவிழுந்து முதிர்ந்தபோதும் இளமைகொஞ்சும் பாடல்
இறுதி மூச்சை முருகனோடு இணைப்பதந்த பாடல்.
(காலை)

—டாக்டர் த. அமிர்தலிங்கம்

தருமையாதீனம் அனைத்துலக சைவசித்தாந்த முதற் கருத்தரங்கம்

தெய்வீகக் கலைக் கண்காட்சித் திறப்புரை

திரு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ்.,

ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,

அனைத்துலக சைவசித்தாந்த முதல் கருத்தரங்கத்தினையொட்டிச் சீரிய கலைக் கண்காட்சி ஒன்றினை ஏற்பாடு செய்து அதனைத் திறக்கும் பணியினை எனக்களித்த தருமையாதீன குருமகாசந்நிதானம் அவர்களுக்கும் இன்றைய மாலை நிகழ்ச்சிகளில் சிறப்புப்பங்கேற்கும் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கட்கும் மற்றும் இங்குக் குழுமியுள்ள அறிஞர் பெருமக்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சைவசித்தாந்தம்சிவபரம்பொருளின் முழுமுதற்றன்மையைக் குறித்த சித்தாந்தங்களை நன்கு விளக்குவது. இந்த தத்துவக்கொள்கையானது இந்திய நாட்டிலுள்ள சமயக்கொள்கைகளுக்கெல்லாம்தலைமையானது என டாக்டர் போப் கூறியுள்ளார். ரெவரண்ட் கௌடி அவர்கள், சமய ஆராய்ச்சித்துறையிலும், கொள்கை-வாழ்க்கை என்பனவற்றின் வெளிப்பாட்டுமுறையிலும் மிகமிகச் சிறந்ததும் தொன்மையானதுமான சைவசித்தாந்தத்தைப் பெற்றிருப்பது தென்னிந்தியாவே யாகும் என்று தெளிவுபடக் கூறியுள்ளார். இவ்வளவு சிறந்த சமயக்கொள்கையினை மக்கள் அறிந்து, அதன்வழி நின்று உய்ய மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பெரும் பாராட்டுக்குரியன.

அறிவியல் கண்ணோட்டத்தோடும் ஆராய்ச்சி நோக்கத்தோடும் செயல்படும் மக்கள் ஆராய்தற்கு உரிய பொருள்கள் மூன்று; அவை கடவுள், உயிர்கள், உலகம் என்பனவாகும். உயிர்கள் அறிவுள்ளவை. உலகம் அறிவில்லாதது. உலகிலுள்ள பொருள்களை உயிர்கள் ஓரளவிற்கு இயக்குகின்றன. ஆயினும், உயிர்களின் அறிவு மிகச் சுருக்கமானதேயாகும். அந்தப்பொருள்களைத் தனித்தனியே சுட்டறியும் சிற்றறிவேயாகும். அப்படிச்சிறிது அறிவதும் கூட, முற்றறிவை இயல்பாகப்படைத்துள்ள பரம்பொருள் ஒன்று அறிவித்தால்தான் உயிர்கள் அறிகின்றன என்பதும் பெரியதோர் உண்மை. அறிவற்ற பொருள்களைச் சடம் என்று பெரியோர் கூறுவர். இவற்றையெல்லாம் இயக்கும் மேலான பொருள் கடவுள்.

சித்தாந்த சாத்திரங்கள் கடவுளைப்பதி என்றும், உயிர்களைப் பசு என்றும், உலகத்தை பாசமென்றும் கூறும். எல்லா ஆராய்ச்சிகளும் இந்த மூன்றுக்குள் அடங்கும். இவை பற்றிய அறிவை வளர்த்தல் மக்கள் ஆன்மநல முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது. இம்மூன்று பொருள்களும் ஒன்றால் ஒன்று தோற்றுவிக்கப் படாமல் என்றும் உள்ள உண்மைப்பொருள்கள்.

எல்லாம் வல்ல பரசிவப்பொருள் உலகைப் படைத்தது உயிர்களை மேல் நிலைக்கு உயர்த்துவதற்காகவே. ஆகவே அது உலகங்கட்குள்ளும் உயிர்கட்குள்ளும் பிரியாமல் நின்று அவற்றை இயக்கி வருகிறது. தானாக இயங்க மாட்டாத சடப்பிரபஞ்சத்தை ஒரு முறைப்படி ஏதோ ஒரு சக்தி இயக்குவதையும் அதனால் உயிர்கள் படிப்படியாகத் தடைகளினின்றும் விடுபட்டுப் பேரானந்தப் பெருநிலை அடைவதையும் உணர்கின்றோம். இப்படியுள்ள பரம்பொருள் ஒன்றேதான். அப்பொருள் உருவம் அருவம், குணம், குறி இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது. இன்ன தன்மையன் என்றறிவொண்ணா எம்மான் என்று சுந்தரரும், மூவரும் முப்பத்து மூவரும் மற்றைத் தேவரும் காணாச்சிவபெருமான் என்று மாணிக்கவாசகரும் குறிக்கும் இப்பரம் பொருள் அன்பே உருவாய், பெருங்கருணைத் தடாகமாய், ஆன்மாக்கள் தமது வாக்கு, மன முயற்சியதாகவே செல்லுதற்கு அரிதாய் ஆனால் அவையாவும் முடிவிற்சென்று கதியாய் உள்ள நுண்பொருளாயுள்ளது.

ஆன்மாக்கள் எண்ணில்லாதவை. என்றும் உள்ளவை. எவராலும் படைக்கப்படாதவை; சிவத்திற்கும்பாசத்திற்கும் வேறானவை. இவற்

நிற்கு இரண்டு சிறப்பியல்புகள் உள்ளன. ஒன்று பற்றுக்கோடின்றி நில்லாமை. அதாவது பாசத்தையாவது அல்லது பதியையாவது பற்றியே ஆன்மா நிற்கும். மற்றும் சார்ந்ததன் வண்ணமாதல் ,எதைச்சார்ந்து ஆன்மா நிற்கின்றதோ அதனோடு கலந்து அதன் தன்மையைத் தான் பெற்று இயங்கும்.

பாசம், ஆணவம்-மாயை-கன்மம் என மூவகைப்படும். இவற்றில் ஆணவந்தான் மூல மலம். தான் ஒன்றேயாய் அனேக சக்திகளையுடையதாயிருப்பது. உயிர்களின் அறிவினை விளங்கவொட்டாமல் அதற்குத்தடையாயிருப்பது; தன்னையும் காட்டாமல் பிறபொருளையும் காண ஒட்டாமல் மறைந்து நிற்பது.

மாயை என்பது உலகம் தன்னிடம் ஒடுங்குதற்கும் தோன்றுவதற்கும் காரணமாயிருப்பதால் மாயையிலிருந்துதான் 36 தத்துவங்கள் இறைவன்சக்தியால்தோற்றுவிக்கப்படுகின்றன. மாயையின் துணைக்கொண்டே அதனையும் ஆணவ மலத்தையும் தாண்டவேண்டும் என்பது இறைவன் வகுத்துள்ள உபாயம்.

கன்மம் என்பது நாம்பெறும் பிறவிகளின் இயல்பைத்திடப்படுத்தி நாலாவிதமான இன்ப துன்பங்களை விதிமுறைப்படி ஊட்டிவைக்கும். ஒவ்வொரு கன்மமும் தன்தன் பயனைத்தந்தே தீரும். நன்றியுணர்வுடன் இறைவனை எண்ணி அன்புடன்வழிபட்டுப்பேரின்பம் பெறச் செயல்பட வேண்டும்.

சைவ சித்தாந்தத்தின் சீரிய கொள்கைகளை மக்களிடையே பரப்பப் பல்வேறு சாதனங்களைக் கையாளவேண்டும். உயிர்கள் உய்ய வேண்டுமென்ற பெருநொக்கு இச்சித்தாந்தத்தின் கண் மேலோங்கி நிற்பதனைக் கண்காட்சி ஒலி, ஒளிக்காட்சி, தொலைக்காட்சி போன்ற சாதனங்கள் வழியும் அறிவுறுத்திச்சிவத் தொண்டு செய்யலாம் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன் .வணக்கம்.

ஆண்டவனே ஸ்ரீராமகிருஷ்ணராகத் தோன்றினான். இது உண்மையே. பிறருடைய துக்கத்தையும் துன்பத்தையும் போக்கவே ஆண்டவன் அந்த மனித வடிவைப் பெற்றான். தன்நகரில் மாறுவேடத்துடன் செல்லும் அரசனைப் போல உலவினான். பிறர் அவனை இன்னான் என உணர்ந்ததும், அவன் மறைந்து விட்டான்.

* * *

ஸ்ரீராமகிருஷ்ணரால் பணத்தைத் தொடவும் முடியாது. எப்பொழுதும் அவருடைய உபதேச மொழிகளை நினைவிலிருத்திக் கொள்ளுங்கள். உலகத்தில் நீங்கள் காணும் இன்னல்களுக்கு மூல காரணமாவது இப்பணம்தான். அது உங்கள் மனத்தை வேறுபல ஆசைகளிடமும் இழுத்துச் செல்லும். ஜாக்கிரதை.

—சாரதா தேவியார்

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்

வாலிவத நியாயம்

''அருள் மொழியரசு''

திருமுருக கிருபானந்த வாரியார்

இராமாயணத்திலே வாலி வதைப்படலம் ஒரு சிறந்த பகுதி. இதில் பெரிய வில்லங்கம் உள்ளது. வாலியை இராமர் வதைத்தது நியாயமா? அதிலும் மறைந்து கொன்றது முறையா? என்ற ஐயம் எழுகின்றது. புலவர்கள் குழாத்தில் இன்னும் இதற்கு ஒரு தெளிவான விடை தெரியாது மயக்கம் விளைந்து வருகின்றது. ''இராமாவதாரம் பிழைத்துவிட்டது'' என்று கூட சிலர் துணிந்து எழுதுகின்றார்கள். உண்மையிலே இராமர் தவறு செய்தாரா?

இராமர் தன் தம்பியுடன் சீதாதேவியைத் தேடிக்கொண்டு வருகின்றார். கவந்தனைக் கண்டு அவன் கரங்களைத் துணித்தருளினார். அவன் பண்டையுருப்பெற்று இராமரைத் தொழுது துதித்துக் கூறுவான்; ''எம்பெருமானே! துணையமைவது அவசியமாகும். இனம் இனத்துடன் சேரவேண்டும். சுக்ரீவன் என்ற வானரவீரன் நட்புக்குரியவன்; நம்பிக்கைக்கு ஏற்றவன், அவன் மனைவியை வாலி கவர்ந்து கொண்டான். சுக்ரீவன் மனைவியை இழந்து கவல்கின்றான். மனைவியிழந்தவனுக்குத் தான் மனைவியின் பிரிவுத்துயர் விளங்கும். நீர் வாலியைக்கொன்று சுக்ரீவன் மனைவியை அவனிடம் சேர்த்தருளும். அவன் இராவண வதத்திற்கு உதவி செய்து, சீதையைத் தேடித் தருவான்'' என்று கூறிச்சென்றான்.

இராமர் சபரிக்கு வீடுபேறு வழங்கி, அநுமனைக்கண்டு ரிச்யமுகமலையில் சுக்ரீவனை நட்புக்கொண்டார். வாலிக்கும், சுக்ரீவனுக்கும் பகை மூண்டதையும், சுக்ரீவன் மனைவி ''ருமை'' என்பாளைக் கவர்ந்துகொண்டான் என்பதையும் வாலி இராவணனுடன் அக்கினியை வைத்து 'உனக்கு நட்பு எனக்கு நட்பு' என்றும் ''உனக்குப்பகை எனக்குப்பகை'' என்றும் சத்தியம் புரிந்து நட்புகொண்டான் என்பதையும் அநுமன் கூறினான். அவ்வண்ணம் கூறிய அநுமன் உண்மையுடையவன்; பொய்யறியாதவன் என்று கம்பநாடார் கழறுகின்றார்.

பொய்யி லாதவன் வரன்முறை
யிம்மொழிபுகல
ஐயன் ஆயிரம் பெயருடைய மலர்க்கும்
அமலன்
வையம் நுங்கிய வாயிதழ் துடித்தது
மலர்க்கண்
செய்ய தாமரை யாம்பலம் போதெனச்
சிவந்த

இராமருடைய இதழ் துடித்தது; கண்கள் சிவந்தன. கருணைக்கடலாகிய அவருக்கு ஏன் சினம் மூண்டது என்பதைக் கம்பரே கூறுகின்றார்.

ஈரம் நீங்கிய சிற்றவை சொற்றனள்
என்ன
ஆரல் வீங்குதோள் தம்பிக்குத் தன்னரசுரிமைப்
பாரம் ஈந்தவன் பரிவிலன் ஒருவன்றன்
இளையோன்
தாரம் வெளவினன் என்ற செயல்
தரிக்குமாறுளதோ.

இராமர் ''சுக்ரீவா! வாலியை வதைத்து உனக்கு உன் மனைவியையும் அரசையும் தருவேன். அவன் இருக்குமிடத்தைக் காட்டு'' என்றார்.

மறுநாள் அதிகாலை சுக்ரீவன் வாலியைப் போருக்கு அழைத்தான். வாலி யானையின் முழக்கங்கேட்ட சிங்கம்போல் சீறியெழுந்தான்.

அவன் மனைவி தாரை அவனைத்தடுத்துக் கூறுவாள்; ''அன்ப! உன் தம்பிக்கு இராமர் துணையாக அமைந்து உன் உயிரை மாய்க்க வந்துள்ளதாகக் கேள்வியுற்றேன். நீ போருக்கு போவது நன்றன்று'' என்றாள்.

வாலி, ''பெண்மணி! ராமன் அறப்பெருந் தலைவன். அத்திருவாளன் ஒருபோதும் குரங்குடன் நட்புகொள்ளமாட்டான். என்னைக் கொல்லுவதில் ராமனுக்கு என்ன பயன்? நீ பெண்மையால் பிழை கூறுகின்றாய்'' என்று கூறிவிட்டுப் போருக்கு வந்து சுக்ரீவனுடன் போர் செய்து அவனை நையப்புடைத்தான்.

சுக்ரீவன் உடல் நொந்து தோற்று ஓடி இராமரையடைந்து வருந்தினான். ''தம்பி! உனக்கும் வாலிக்கும் உருவத்தில் வேற்றுமை தெரியாமையால் சும்மா இருந்தேன். இந்தக் கொடிப்பூ மாலையைச் சூடிக் கொண்டு சென்று போர் செய். பூமாலையை அடையாளம் வைத்து வாலியைக் கொல்லுவேன்'' என்றார்.

கொடிப்பூ மாலையுடன் சென்று வாலியுடன் போரிட்டான். வாலி அவனை எடுத்துப் பார் மீது எற்றும் பொருட்டு இரு சரங்களாலும் தூக்கினான். அத்தருணம் இராமர் ஒரு சிறந்த கணையைத்தொடுத்து விடுத்தார். வாலி பனதத்து வீழ்ந்தான். கணையை வாலினாலும் காலினாலும் பற்றித்தடுத்தான். அந்த வீரச் செயலைக் கண்டு மறலியும் சிரம் அசைத்தான். வாலி கீழே வீழ்ந்து உருண்டான். ''இவ் வண்ணஞ் செய்தவர் தேவரோ! மூவரோ? இக் கணை சக்கரமோ? வஜ்ராயுதமோ? வேலோ? சூலமோ? என்று ஐயுற்றான். மிகவும் முயன்று ராமசரத்தைச் சிறிது பின்னுக்கிழுத்துப் பார்த்தான். அதில் 'ராம்' என்ற இரு எழுத்துக்கள் பொறித்திருப்பதைக் கண்டான்.

மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந்
திரத்தை முற்றுந்
தம்மையே தமக்கு நல்குந்தனிப்பெரும்
பதத்தைத்தானே
இம்மையே எழுமை நோய்க்கு மருந்தினை
இராமன் என்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக் கண்களால்
தெரியக்கண்டான்

இராமன் வில்லறந்துறந்தார் என்று எண்ணிச் சினத்துடன் சிரித்தான். இராமர் அவன் முன்னே தோன்றினார். அந்த இடத்தில் கம்பர் கூறும் கவியை நன்கு சிந்தியுங்கள்.

இறைதிறம்பினனால் என்னே இழிந்து
ளோர் இயற்கை யென்னின்
முறை திறம்பினனால் என்று மொழிகின்ற
முகத்தான் முன்னர்
மறை திறம்பாத வாய்மை மன்னர்க்கு
முன்னஞ்சொல்லுந்
துறை திறம்பாமல் காக்கத்தோன்றினான்
வந்துதோன்ற

''வேத நெறி தவறாத வேந்தருடைய அறத்தினைக் காப்பதற்காகவே வந்து தோன்றிய பெருமான் அவன் முன்னே தோன்றினார்'' என்று கூறுகின்றார் கம்பர். நூலாசிரியரது கருத்து இராமர் தரும நெறியைக் காக்க வந்தவர் என்பது. அவர் அறம்பிழைக்கவில்லை என்று கம்பநாடார் கருதுகின்றார். இந்தப் பகுதியை நினைவில் பதித்துக் கொள்ளுங்கள்.

வாலி இராமனைக் கேட்கின்றான். ''நீ சத்தியத்தையும் தம் குல மரபினையுங் காத்து உயிர் துறந்த தசரதச் சக்கரவர்த்தியின் மகனா? பரதனுக்குத் தமையனாகப் பிறந்தனையே! மற்றவரைக் குற்றம் புரியாமல் காத்துத். தான்செய்தால் அது குற்றமாகாதோ? தாய்மையையும் நட்பையும் தருமத்தையும் தழுவி நின்றனையே!

மநு தருமம் உன் பாட்டன் எழுதியது. மநு குலத்தில் பிறந்த உனக்கும் உன் குலத்தார்க்கும் மநுவறம் சொந்த சொத்து. நீ மநுவறந் தவறலாமா? உத்தமமான பத்தினியைப் பிரிந்ததனால் அறிவு மயங்கியதோ? அரக்கன் உன் மனைவியைக் கொண்டுபோனதற்காக வாநர வீரனைச்கொல்லுமாறு மநு நெறியிற் கூறியுளதோ? கருணையை எங்கு விடுத்தனை? என்பால் என்ன குற்றங்கண்டனை? இப்பிழையை நீயே புரிந்தால் புகழைத் தரிக்கவல்லவர் யாவர்? துணை தேடாத தனிப் பெரும் வீரனாகிய நீ தந்தை தந்த அரசினை நாட்டில் தம்பிக்குத் தந்தனை. இப்போது என்னைக் கொன்று இந்த அரசைக் காட்டில் என் தம்பிக்குத் தந்தனை; தமையனைக் கொன்று தம்பிக்கு அரசு தரும் செய்கை இன்னும் உளதோ? இது வீரமன்று; விதியுமன்று; அறமுமன்று; என்னுடைய பூமிக்கு நான் பாரமுமன்று. பகையுமன்று; இது கருணையுமன்று; இப்பழி நீ செய்ததன் காரணம் யாது? பகையை ஒழிக்கத் துணைதேடும் நோக்கம் உண்டெனில் இராவணன் என் நண்பன். என்னிடம் அன்புள்ளவன். நான் இங்கிருந்து சொல்லிவிட்டால் சீதையைக்கொணர்ந்து உன் பாதத்தில் சேர்ப்பான். சிங்கம்போன்ற என்னைக்கொன்றுவிட்டு முயல்போன்ற சுக்ரீவனைத் துணைப்பிடித்தனையே? பகலில் ஒளி தருகின்றவன் சூரியன்; இரவில் ஒளி தருகின்றவன் சந்திரன். சந்திரனுக்கு ஒரு களங்கம் உண்டு. சூரியனுக்குக் களங்கங் கிடையாது. சூரியன் குலத்தில் பிறந்த நீ சூரியனுக்கு ஒரு களங்கத்தை உண்டாக்கிவிட்டாய். நீ தநுர்வேதத்தையும், குலாசாரத்தையும் காப்பாற்றவில்லை. வாலியைக் கொல்லவில்லை; அரச தருமத்தின் வேலியைக்கொன்றுவிட்டாய்; நேராக நின்று கொல்லாமல் மறைந்து நிராயுதன்மேல் கணைவிடலாமா? இது நியாயமா?''

அரக்கரோர் அழிவுசெய்து கழிவரேல்
அதற்கு வேறோர்
குரக்கினத்தரசைக் கொல்ல மநுநெறி
கூறிற் றுண்டோ?
இரக்கம்என் குகுத்தாய்? என்பால் எப்
பிழை கண்டாயப்பா
பரக்கழி இதுநீ பூண்டால் புகழையார்
பரிக்கற் பாலார்?

தார மற்றொருவன் கொளத் தன்கையில்

பார வெஞ்சிலை வீரம் பழிப்பதே

நேரு மன்றுநீ மறைந்து நிராயுதன்

மார்பின் எய்யவோ வில்லிகல் வல்லதே.

இத்தனைக் கேள்விகளையும் பொறுமையுடன் கேட்ட ஸ்ரீராமர் விடை கூறுகின்றார்.

''வாலி! என்பால் என்ன குற்றம் கண்டாய்?'' என்று நீ வினாவினை, குற்றம் புரியாத உன் தம்பியைக் கொல்ல முயன்றாய். அவன் அபயம் என்று உன்கால்மேல் வீழ்ந்து வேண்டியும் நீ கருணை புரியவில்லை. மனிதனுக்குச் சிறந்தஅறம் பிறன்மனை விழையாமை. உன் தம்பி மனைவி உனக்கு மகள் முறை. மற்றொருவன் மனைவியை விரும்புவதே பெரும் பாவமாகும். மகள் முறையில் உள்ள உன் தம்பியின் மனைவியை நீவிரும்பிக்கவர்ந்து கொண்டாய். ஆதலால் உன்னைக் கொன்றேன்; எளியவர்களின் துன்பத்தைத் துடைப்பது என் கருத்து. சக்கரவர்த்தியின் திருமகனாகிய நான் உலகில் மறம் புரிவோரை அடக்கி அறத்தை நிலை நிறுத்தவேண்டும்'' என்றார்.

வாலி, ''இராகவா! தேசங்கள்தோறும் சட்டங்கள் மாறும். மதங்கள்தோறும் வேறு வேறு நியாயங்கள் உள. தம்பி மனைவி, தாய் மகள் என்பது மனிதருக்கு உரிய அறம். விலங்குகட்குத் திருமணம் கிடையாது. விலங்குகட்குத் தாயும் தங்கையும் மகளும் ஒன்று தானே. நீ மனிதருக்குரிய நெறியைக் கொண்டு விலங்காகிய என்னைத் தண்டித்தது முறைமையோ?' என்றான்.

இராமர், ''விலங்கு, மனிதன் என்பது இந்த வெற்றுடலை நோக்கி யமைவதில்லை. இந்த உடம்பு ஒரு சட்டைபோன்றது. ஏழை, பணக்காரன் என்பதை அவரவர் அணிந்திருக்கும் சட்டையை வைத்து நிச்சயிக்கக்கூடாது.

முதலைப் பற்றியபோது ஆதிமூலம் என்று அழைத்து முத்திபெற்ற கஜேந்திரனை விலங்கென்று விளம்பலாமோ ? சீதையின் துயரை நீக்க உயிரைத் தியாகஞ்செய்த ஜடாயுவைப் பறவை யென்று பகரலாமோ? நன்மை தீமை யறியாது வாழ்வதுவே விலங்குத்தன்மை. நீ அறியாத அறமேயில்லை என்பதை நீ பேசும் பேச்சே உணர்த்துகின்றது.

தக்க இன்ன தகாதன இன்ன என்

றொக்க வுன்னல ராயின் உயர்ந்துள

மக்களும் விலங்கே மநுவின் நெறி

புக்கவேல் விலங்கும் புத்தேளிரே.

இவை தக்கதல்ல; இவை தகாதவை என்று அறியவில்லையானால் மக்களாயிருப்பினும் அவர்கள் விலங்குகளே! அறத்தினை யுணர்ந்து நடந்தால் விலங்குகளும் தேவராகி விளங்கும்.

இனைய தாதலின் எக்குலத் தியாவர்க்கும்

வினையினால் வரும் மேன்மையுங் கீழ்மை
யும்

அனைய தன்மை யறிந்தும் அழித்தனை

மனையின் மாட்சி யென்றான்மநு
நீதியான்.

ஆதலால் நீ விலங்கன்று; அறிவு பெற்று வாதிக்கின்ற நீ மனிதனே யாகும். அதனால் உன்னை நான் தண்டித்தேன்'' என்றார்.

வாலி, ''இராமா! நீ கூறியதை நான் ஒப்புக்கொள்ளுகின்றேன். நேரில் நின்று தண்டிக்காமல் மறைந்து நின்று கொன்றது என்ன நியாயம்?'' என்றான்.

இங்கு இலக்குவனன் இடைபுகுந்து விடை கூறியதாக இரு பாடல்கள் இடைச்செருகலாக வுள்ளன. அது ''வாலி! உன் தம்பி முன்னே வந்து என் அண்ணாவிடம் சரண் புகுந்தான். உன்னை மாய்த்து அவனுக்கு அரசு தருவதாக அண்ணா வாக்களித்தார். இப்போது நேரில் நின்றால் நீயும் அடைக்கலம் புகுவாய். உன்னை கொல்லதாகத் தந்த வாக்கு பிழைபடும். அதனால் மறைந்திருந்து கொன்றார்'' என்று இலக்குமணன் இயம்பினான் என்றுவரும். இது அத்துணைச் சிறந்த சமாதானம் ஆகாது. அன்றியும் தமையன் பேசும் போது தம்பி இடைமறித்துப் பேசுவது பெருந்தன்மையாகாது. அடுத்துவரும் பாடலில் ''மன்னன் கட்டுரை மனத்துட்கொண்டான்'' என்று வருவதனால், மன்னன் என்ற சொல் இலக்குவனனைக் குறிக்காது, இராமனையே குறிக்கும். ஆதலினால் இலக்குவனன் கூறியதாக உள்ள இரு பாடல்கள் யாரோ ஒரு புலவன் பாடிச்சேர்த்தவையாகும்.

''ஏன் மறைந்து நின்று கொன்றாய்?'' என்ற வினாவுக்கு இராமர் வாய் திறந்து சொற்களால் விடை கூறினாரில்லை. அவனை உணருமாறு உணர்த்தினார். ஞானிகள் சில உண்மைகளை உரையாமலே உணர்த்துவார்கள்.

''செவ்வா னுருவில் திகழ் வேலவன் அன்று
ஒவ்வாததென உணர்வித்ததுதான்''
—கந்தர் அநுபூதி.

''மவுன மந்திரந்தனைப் பழைய
நினது வழி யடிமையும் விளங்கும்படிக்
கினிது உணர்த்தியருள்வாயே
—(அகரமுத) திருப்புகழ்.

திருமால் ராமராக வந்தார் .ஏன் வந்தார்? திருமாலுக்கும் இராவணனுக்கும் பகை கிடையாது. இந்திரனை வென்றான் இந்திரஜித். இராவணனுக்கும் இந்திரனுக்கும் பகை. இந்திரன் இமையவருடன் சென்று திருமாலிடம் முறையிட்டான். திருமால் ''இந்திராதி தேவர்களே! இராவணன் வரம் பெறும்போது, வாநரங்களையும் மாநுடர்களையும் சிறிய பிராணிகள் என்று எண்ணி அவர்களால் வெல்லப்படாமல் இருக்கவேண்டும் என்று கேட்கவில்லை. அதனால் அவனை அழிக்க மாநுடனாக நான் அவதரிக்கின்றேன். இந்திரன்! நீ தேவர் கூட்டத்துக்குத் தலைவன். ஆதலால் வாநரக்கூட்டத்துக்குத் தலைவனாகவாலியாகப் பிறப்பாய்; சூரியனே! நீ சுக்ரீவன் என்ற நாமத்துடன் பிறப்பாயாக. இந்திரன் தம்பி உபேந்திரன் அங்கதனாகப் பிறக்கட்டும். அக்கினி தேவன் நீலன் என்ற வாநரமாகப் பிறக்கட்டும். விச்சுவகன்மா நளனாகவும், ஏனைய தேவர்கள் வானர வீரர்களாகவும் பிறக்கட்டும். நான் உங்கள் பொருட்டு இராமாவதாரம் புரிந்து உங்களுடன் சென்று இராவண வதம் புரிவேன்'' என்று பணித்தருளினார். அவ்வாறே இந்திராதி தேவர்கள் வந்து பிறந்தார்கள். இந்திரன் வாலியாக வந்தான். எதன் பொருட்டு? இராவண வதம் நிகழும் பொருட்டு. இப்போது அவன் இராவணனுடன் நெருப்பை வைத்து உனக்கு உறவு எனக்குறவு, உன் பகை, என் பகையென்று சத்தியஞ் செய்து கொண்டான். வந்த நோக்கம் பிழைத்துவிட்டது.

ஒருநாடகத்தில் நாடக ஆசிரியன், ஒருவனுக்குக் கதாநாயகியாக நடிக்கக்கற்பித்தார், அந்த நடிகன் கதாநாயகி வேடம் புனைந்து, ஒரு கோமாளியைப்போல் குதித்தும் பாடியும் நடிக்கத்தொடங்கினான். நாடகாசிரியன் திரை மறைவில் நின்றபடியே அவனை உள்ளுக்கு இழுத்துவிடுவான். வெளியே நின்று காரணங் காட்டித் தண்டிக்கமாட்டான்.

அதுபோல், இந்த நாடகத்துக்கு ஆசிரியர் இராமர். அவர் தான் இந்திரனை வாலியாக நடிக்க ஏற்பாடு செய்தார். நோக்கம் இராவணன் வதம். வந்த நோக்கத்தை விடுத்து, பகைவனுடன் உறவுகொண்டாடினான். நாடகாசிரியரான ராமர் அவனை மறைந்திருந்தே தண்டித்தார். அவர் மறைந்திருந்து கொன்றது ஏன் என்று வினாவுகின்றான் வாலி.

''நீ இந்திரன்; நான் திருமால்; இலக்குவன் ஆதிசேடன்'' என்று எல்லாம் கூறக்கூடாது. ஆதிசேடனுடைய மகள் சுலோசனை, சுலோசனையின் கணவன் இந்திரஜித்து, உண்மையைக் கூறினால் இலக்குவன் மருமகனாகிய இந்திரஜித்திடம் போய்விடுவான்தானே. எனவே இராவண வதமே நிகழாமல் நிற்கும்.

''காலமொரு மூன்றுங் கருத்தில் உணர்ந்
தாலும்
ஞாலந் தனக்குரையார் நல்லோர் பரா
பரமே''

என்கின்றார் தாயுமானவர்.

ஆதலால், ''நீ இந்திரன்; நான் திருமால்; நீ இராவண வதம் நிகழும் பொருட்டு வந்தாய்; வந்த வரைவை மறந்து நின்றனை. அதனால் உன்னை மறைந்து நின்று தண்டித்தேன்'' என்ற கருத்தினை அவன் உரை உணர்த்தினார் இராமர். அவன் உணர்ந்தான்; உணர்ந்தபின் பிழையை நினைத்து நொந்தான். பின்னர் மன்னிப்புக்கேட்டு வேண்டுகின்றான். அவைகளைப் பின்வரும் பாடல்களால் அறிக.

கவிகுலத் தரசு மன்னன் கட்டுரை
மனத்திற் கொண்டான்
அவியுறு மனத்த னாகி அறத்திறன்
அழியச் செய்யான்
புவியிடை யண்ணல் என்ப தெண்ணினன்
பொருந்தி முன்னே
செவியுறு கேள்விச் செல்வன் சென்னியை
யிறைஞ்சிச் சொன்னான்

வாதியாகிய வாலி இப்பாடலில் ராமர் ''அறத்திறன் அழியச்செய்யான்'' என்று கூறுவதனால் இராமர் அறம் பிழைக்கவில்லை யென்பதையறிக. பின்னும் வாலி வேண்டுகின்றான்.

தாயென வுயிர்க்கு நல்கித் தருமமும்
தகவுஞ் சால்பும்
நீயென நின்ற நம்பி நெறியினில்
நோக்கு நேர்மை
நாயென நின்ற எம்பால் நவையுற
வுணரலாமோ
தீயன பொறுத்தி யென்றான் சிறியன
சிந்தியாதான்.

இரந்தனன் பின்னும் எந்தை யாவதும்
எண்ணல் தேற்றாக்
குரங்கெனக்கருதி நாயேன் கூறிய மனத்
துக்கொள்ளேல்
அரந்தைவெம் பிறவி என்நோய்க்
கருமருந் தனைய ஐயா
வரந்தரு வள்ளல் ஒன்று கேளென
மறுத்து சொல்வான்.

இந்த இரு கவிகளையும் பலமுறை படியுங்கள்.

''எம்பெருமானே! உயிர்கட்குத் தாய் போல் தண்ணருள் சுரந்து அருள் புரிந்து, தருமத்தையும், பெருந்தன்மையையும் சான்றாண்மையையும் தழுவிநின்ற ஐயனே! நாய் போன்ற எங்கள் பால் அறத்தின் தன்மையைக் குற்றமற நோக்கிப் பார்க்கலாமோ? சிறியேன் செய்த

தீமையைப் பொறுத்தருள். பேசிய கொடுஞ் சொற்களைக் குரங்குஎனக்கருதி மன்னித்தருள். பிறவி நோய்க்கு அருமருந்துபோன்றஅண்ணலே! வேண்டிய வரந்தரும் வள்ளலே! தேவரீர் அம்பினால் எய்தி எனக்கு உயிர்போகுந்தருணத்தில் மெய்யுணர்வு தந்து அருள்புரிந்தீர். எல்லாம் நீராக இருக்கின்றீர்''

ஏவுகூர் வாளியால் எய்துநாய் அடியனேன்

ஆவிபோல் வேலைவாய்அறிவுதந் தருளினாய்

மூவர் நீ முதல்வன்நீ முற்றுநீ மற்று நீ

பாவம் நீ தருமம் நீ பகையும் நீ உறவு நீ.

என்று வாலி துதித்து வேண்டுகின்றான்.''அறிவு தந்தாய்'' என்ற சொல்லைச் சிந்தியுங்கள், அவன் இந்திரன் என்றும் வந்த வரவை மறந்து பகைவனுடன் உறவு செய்தது பிழையென்றும் உணரும் உணர்வைத் தந்தார்'' என்று கூறு கின்றான்.

இராகவா! என்தம்பி எனக்குச் செய்த உதவியினும் மேலானது ஒன்று உளதோ? தேவரும் முனிவருங்காணாத தேவரீரை அழைத்து வந்து எம்பி வெற்றரசு எய்தி, வீட்டரசு எனக்குத் தந்தான். என் தம்பி மதுவருந்தி மயங்கியபோது தீவினை புரிவானாகில் என் மேல்விடுத்த இராமபாணத்தை என் தம்பிமேல் விடாதே. தமையனைக் கொல்வித்தவன் இவன் என்று என் தம்பியை உன் தம்பியர் இகழ்வாரேல் அப்பனே, நீ தடுக்க வேண்டும். இந்த அனுமனை உன் கையில் இருக்கும் கோதண்டத்துக்கு நிகராக நினை, என் தம்பியை உன் தம்பியாகக் கொள். இவன் உயிருந் தந்து உதவுவான் என்று கூறினான்.

பின்னர் கண்ணீர் சொரிந்து அழுது கொண்டு நின்ற சுக்ரீவனைப் பார்த்து ''தம்பி! வருந்தாதே. வேதங்களும் முனிவரும் பிரம தேவனும் கலைகளும் கூறும் மெய்ப்பொருளே வில்லை ஏந்தி ஸ்ரீராமனாக அவதரித்துள்ளதை சிறுதும் சந்தேகம் இன்றி நினை. அவர் தீமை புரிந்தோரை அம்பினால் எய்தால் முத்தி பெறுவர் என்றால், வணங்கினோர் என்ன பெறுவார் என்பதைச் சொல்ல வொண்ணுமோ? தம்பி! குரங்குத் தன்மையை விடுத்து எம்பெருமான் செய்த உதவியை எண்ணி உற்றிடத்து உயிரையுந் தருவாய். உயர்ந்த பதவியை எவர்க்கும் வழங்கும் இப்பெருமான் ஏவலைச் செய்து பிறவித்துன்பந் தீர்வாய்''

மறைகளும் முனிவர் யாரும் மலர்மிசை அயனும் மற்றைத்
துறைகளின் முடிவுஞ்சொல்லுந்துனி பொருள்
அறைகழல் இராமனாகி அறநெறி நிறுத்த வந்த
இறையொரு சங்கை யின்றி எண்ணுதி எண்ணமிக்கோய்

பின்னர் வாலி தன் மகனை அழைத்துக் கூறுகின்றான். அந்தஅருமையான சொற்களையும் கூர்ந்து நினைமின்.

தோன்றலும் இறத்தல் தானும் துகளறத் துணிந்துநோக்கின்
மூன்றுல கத்தினோர்க்கு மூலத்தே முடிந்த தன்றே
யான்தவ முடைமையால் இவ்விறுதிவந் திசைந்த தியார்க்கும்
சான்றென நின்றவரன் தான்வந்து வீடு தந்தான்

பாலமை தவிர்நீ என்சொல் பற்றுதி எண்ணின்
மேலொரு பொருளும் இல்லாமெய்ப்பொருள் வில்லுந்தாங்கிக்
கால்நிலந்தோயநின்று கட்புலக் குற்ற தம்மா
மால்தரும் பிறவி நோய்க்கு மருந்தென வணங்குமைந்த!

''மகனே! அங்கதா! பிறப்பும் இறப்பும் எல்லாவுலகத்தினர்க்கும் முன்னமேயே முடிவு செய்யப்பட்டவை. யான் மிகுந்த தவம் புரிந்தவன்; ஆதலின் இப்படியான நல்ல முடிவு வந்தது. எல்லார்க்கும் சாட்சியாக விளங்கும் எம் பெருமான் தானே வந்து வீடு பேற்றினைத் தந்தருளினார். சிறு பிள்ளைமைத் தனத்தை விட்டுவிடு. என் மொழியை உறுதியாகக்கொள். மேல் ஒரு பொருளுமில்லாத மெய்ப்பொருள் வில்லை யேந்தி கால் நிலந்தோய நின்று கண்ணுக்குத் தெரியக் காட்சி தந்தது. மயக்கத்தைச் செய்யும் பிறவி நோய்க்கு இப்பெருமானே மருந்து என நினைந்து வணங்குவாய். ''

தேவர்கட்குக் கால் நிலந் தோயாது. இராமர் கால்நிலந்தோய வந்தார் என்றதனால் அவரைத் திருமாலாகக் கண்டு வாலி கூறுகின்றான் என்பதை உணர்க; மகனை இராமரிடம் அடைக்கலமாகத் தந்து, வீடுபேற்றினையடைந்தான்.

இந்திரன் இராவண வதத்தின் பொருட்டு வாலியாக வந்தான். வந்த செயலை மறந்து இராவணனுடன் உறவாகி நின்றான். இராமர் தவறாக நடித்த அவனை மறைந்துநின்று தண்டித்தார். அவன் வினாவிய வினாவுக்கு அவன் உணருமாறு உணர்த்தினார். உணர்த்த அவன் மன்னிப்புக் கேட்டு வானகம் புக்கான். இது தான் வாலிவத நியாயம்.

மாண்புமிகு அமைச்சர் ஆர்.எம்.வீ. அவர்களின்

புதிய சிந்தனைகள்

நூல் மதிப்புரை

—டாக்டர் த. அமிர்தலிங்கம்

மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் ''புதிய சிந்தனைகள்'' என்ற ஒப்பற்ற நூல், அண்மையில் ஏ.வி.எம். இராசேசுவரி கல்யாண மண்டபத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் வெளியிடப்பட்டுத் தமிழ் அன்னைக்குப் பெருமைமிகு மகுடமெனக் காணிக்கையாக்கப்பட்டது. இருபது பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கி, இருநூறு பக்க அளவில் வெளிவந்திருக்கும் இந்நூலை ஒருமுறை படித்தவர்களும், தொட்ட இடம் எல்லாம் துலங்கும் ஆசிரியரின் ஆராய்ச்சிமிக்க சிந்தனைக்கருத்துக்களில் மூழ்கி, மனமாரப்பாராட்டி மகிழ்வர் என்றால் அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

இந்நூலின் சிறப்பினைச் சுட்டும் விதத்தில், நூலை வெளியிட்ட மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களும், நூலாசிரியருக்கு டாக்டர் பட்டம் தருவதைப்போல் ''டாக்டர் ஆர்.எம்.வீ. அவர்களைப் பாராட்டுகிறேன்'' என விழா மேடையிலேயே கூறிப்பாராட்டியது இங்கே குறிப்பிடத்தக்கது. அதனை வழிமொழிந்த மாண்புமிகு டாக்டர் சிலம்புச் செல்வர் அவர்களும், தம்முடைய தலைமையுரையில் ''நூலாசிரியருக்கு டாக்டர் பட்டம் நிச்சயம் பெற்றுத் தரும் இந்நூல்'' என்று குறிப்பிட்டு ''மகாபாரதத்தில் கண்ணன் அருளிய கீதை, பாண்டவர், கௌரவர் என்ற இரு அணியினருக்கும் நடுவில் தேரினைக் கொண்டுசென்று நிறுத்தியபோது தோன்றிய பெருமை உடையது. அதைபோலவே நாத்திகர், ஆத்திகர் என்ற இரு அணியினருக்கும் நடுவில் நின்று ஆட்சி நடத்தும்போது, அமைச்சரால் அவ்விரு அணியினரையும் இணைக்கும் பாலம் போல் படைக்கப் பட்டிருப்பதே 'புதிய சிந்தனைகள்' என்ற இந் நூலுமாகும்.'' என்று பாராட்டினார். இந்நூல் வெளியீட்டு விழாவில் பேசிய மாண்புமிகு டாக்டர் காளிமுத்து அவர்களும் ''எழுத்தாளர்களுக்கெல்லாம் வழிகாட்டுகிற எழுத்தாளராகவும் பேச்சாளர்களுக்கெல்லாம் சிந்தனை தருகிற பேச்சாளராகவும் நூலாசிரியர் விளங்குகிறார்'' எனக் குறிப்பிட்டார்கள். இலக்கியச் சித்தர் டாக்டர் வலம்புரிஜான் அவர்களும், ''இந்த நூலின் சிறப்பைமுழுவதுமாய் எடுத்துச்சொல்ல என்னால் இயலாது. எந்த முல்லையை எடுப்பேன். எந்த முல்லையைத் தொடுப்பேன் என்று தெரியாமல் என்மனம் திகைக்கிறது'' என்று பாராட்டியதும் நூலின் பெருமையை ஓரளவிற்கு நமக்கு உணர்த்தும்.

இவ்வாறெல்லாம் அமைச்சர்களாலும், சட்டமேலவைத் தலைவராலும், நாடாளுமன்ற உறுப்பினராலும், மேலும் பல்கலைக் கழகங்களின் இணைவேந்தர், துணைவேந்தர், பேராசிரியப் பெருமக்களாலும் பாராட்டப் பட்ட ''புதிய சிந்தனைகள்'' நூலிலிருந்து, ஒரு பானைச்சோற்றிற்கு ஒரு சோற்றைப் பதம் பார்ப்பதுபோல் நாமும் ஒரு சில பகுதிகளைப் பதம் பார்ப்போம். நூலின் முதல் கட்டுரையாக அணிசெய்வது ''அண்ணாவின் இதயக்கனி'' என்னும் கட்டுரையாகும். அதிலே தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவரின் பண்பு நலன்களைப் பாரறிய எடுத்துக்காட்டும் நூலாசிரியர் ''மரத்திலே ஒரு கனி பழுத்துத் தொங்கிக்கொண்டு இருந்தது. அது யார்மடியில் விழுமோ என்று பார்த்துக் கொண்டிருந்தேன். நல்ல வேளையாக அந்தக்கனி என்னுடைய மடியிலே வந்து விழுந்தது. விழுந்த அந்தக் கனியைப் பத்திரமாக எடுத்து என்னுடைய இதயத்திலே வைத்துக்கொண்டேன்.'' (பக்.10) என்ற அண்ணாவின் வாசகத்தை எடுத்துக் காட்டி, அவருடைய பெருமைகளை விளக்கும் பாங்குச் சிறப்பாக உள்ளது.

இந்நூலில் ''தமிழ் எங்கள் உயிர்'' என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள தலைசிறந்த கட்டுரையைத் தமிழ்மொழியை நேசிக்கிற தமிழர்கள் மட்டுமல்ல. தம்தம், தாய்மொழியை நேசிக்கிற அனைத்து மொழியினருமே படித்துப்

அண்ணாவின் இதயக்கனியுடன் நூலாசிரியர்

பயன்பெறலாம். மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட முத்தமிழின் வரலாற்றை 25 பக்கங்களில் அவர் எடுத்துக்காட்டியிருக்கும் திறம், ஏட்டிலே விரிக்க இயலாததாய், தமிழ்மொழியின் வரலாறு பற்றிய சிறந்த ஆராய்ச்சியாக விரிகிறது. 1300 ஆண்டுகளுக்கு முன்பாகவே ''தமிழ் ஞான சம்பந்தர்'' எனத் 'தம்மை அழைத்துக்கொண்ட திருஞானசம்பந்தரை வியக்கும் நூலாசிரியர் ''அதற்கு முன்னாலேயும் எந்தப் புலவரும் சொல்லவில்லை. அவருக்குப் பின்னாலேயும் எந்தப் புலவரும் சொல்லவில்லை. ஏன்? நம்முடைய பாரதிதாசன் உட்பட; பாரதிதாசன், கனகசுப்புரத்தினம் என்கிறவர், பாரதிக்கு தாசன் என்று பெயர் வைத்தாரே தவிர தமிழுக்கு தாசன் என்று பெயர் வைக்கவில்லை'' (பக்கம் 65) என்று ஒப்பிட்டுக்காட்டுவது, அவருடைய ஒப்பாய்வுத் திறனுக்கு நல்ல சான்றாகும்.

இன்னும் ''விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்'' என்ற கட்டுரையில் வள்ளுவர் குறள் ஒன்றினோடு தந்தைப் பெரியாரின் சீர்திருத்தச் செயலை ஒப்பிட்டுக்காட்டி, தந்தைப் பெரியாரின் செயலை நியாயப்படுத்திக்காட்டும் நூலாசிரியரின் திறத்தையும் இங்கேசுட்டுதல் அவசியமாகும்.

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்துகெடுக உலகியற்றியான்'' என்று வள்ளுவர் சொன்னாரே, மனித சமுதாயத்திலே ஒருவன் பிச்சை எடுத்து வாழ்கிற தகுதி பெற்றிருக்கிறான். அவனை அதற்குத்தான் ஆண்டவன் படைத்தான் என்று யாராவது கூறினால், அங்ஙனம் படைத்த ஆண்டவனே எனக்குத் தேவையில்லை என்று வள்ளுவப் பெருந்தகை சொன்னாரே! அவரை நாம் வெறுக்கிறோமே? நீங்கள் தந்தைப் பெரியாரை முழுவதும் சரியாகக் கண்டுகொள்ளவில்லை. தந்தைப் பெரியார் யாரோ நாத்திகர்களுக்காக வாதாடினார் என்று எண்ணாதீர்கள். அவர் ஆத்திகர்களுக்கும் வாதாடினார். மனித சமுதாயத்திற்காகப் போராடினார். (பக். 126-127) என்ற இப்பகுதியில் ''வள்ளுவரை வெறுக்கிறோமா? அவரும் தான் ஆண்டவனை நிந்திப்பதைப்போல பாடியிருக்கிறார்'' என்று கேட்டு. சீர்திருத்தவாதிகள் நிந்தனைக்குரியவர்கள் அல்ல என்று ஆசிரியர் தெளிவு படுத்தியிருக்கும் விதம் எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

அவரே ''திராவிட இயக்கமும் ஆன்மீகமும்'' என்ற கட்டுரையில் ஆலயங்களுக்கு விரோதமானவர் அல்ல தந்தைப்பெரியார் என்பதை வலுவான ஆதாரங்களோடு விளக்குகிறார்.

''அவர்கள் இந்தச் சமுதாயத்திலே ஆன்மிகத்தை அழிக்க வேண்டும் என்று எண்ணியிருந்தால் அவருடைய மூதாதையர்கள், பாட்டனார், தகப்பனார் ஏற்படுத்திய ஆலயம் இன்றைக்கும் ஈரோட்டிலே நடந்துகொண்டிருக்கிறது. அதை முதலிலே மூடியிருப்பார். அவர்களுடைய தந்தையார் வெங்கட்ட நாயக்கர் ஏற்படுத்திய கட்டளைகள் - ஆலயங்கள் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கின்றன. அவர் தடுத்திருந்தால்-மூடியிருந்தால் யாரும் அவரை போய்க் கையைப் பிடித்து நிறுத்தி யிருக்க முடியாது. இன்னும் சொல்லப்போனால், பிள்ளையாரை உடைக்கவேண்டும் என்று சொன்னபோது கூட எங்கேயும் பாதுகாப்பற்று அரசமரத்தடியிலே பல்லாயிரக்கணக்கான பிள்ளையார்கள் இந்த நாட்டிலே வணங்குகின்ற உருவங்களாக இருக்கிற இந்தச் சமுதாயத்தில் ஒரு பிள்ளையாருக்கும் சேதம் விளைவிக்காமல் மண்ணாலே செய்துஉடைக்கச் சொன்னாரே தவிர, இருக்கிற பிள்ளையாரை உடைக்கச் சொல்லவில்லை. (பக்.114)

மாண்புமிகு சட்டமேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் அவர்கள் ''ஆத்திகர்களையும் நாத்திகர்களையும் இணைக்கும் பாலமாய் திகழ்கிறது ''புதிய சிந்தனைகள்'' என்று குறிப்பிட்ட பாராட்டுரை, முழுவதும் பொருந்தும் பொருளுரை என்பதை மேற்கண்ட பகுதிகளைப் படிப்பவர்கள் உணர்ந்துகொள் வார்கள்.

தந்தைப் பெரியாருடன் தம்முடைய 18 வயதிலிருந்தே பணியாற்றி வளர்ந்தவராகிய நூலாசிரியர், பெரியாருடைய கொள்கையை விளக்கியும், தெளிவுபடுத்தியும் பேசுவது ஒன்றும் விந்தையான செய்தியல்ல. 1978ஆம் ஆண்டிலே இருந்துதான் அறநிலையத்துறையின் அமைச்சராய்-இந்த ஏழாண்டுக் காலமாய்-சிறப்புறச் செயல்பட்டு வருகிறார். இந்த ஏழாண்டுக்காலத்திலே அவர் ஆன்மிக இலக்கியங்களை எல்லாம் கற்றுத்தேர்ந்து, ஆராய்ந்து அவற்றை மிக மிக நுட்பமாக பாமர மக்களுக்கும் புரிகிற விதத்தில் எடுத்துச்சொல்லி விளக்க எவ்வாறு கற்றுக்கொண்டார் என்ற உணர்வுதான் இந்தப் 'புதிய சிந்தனைகளை'ப் படிப்பவர்களுக்குத் தோன்றும். சேக்கிழாரை ஆராய்கிறார். கம்பரை ஆராய்கிறார். சமயக்குரவர்களை ஆராய்கிறார். தமிழ் இசையைத் தொல்காப்பியர் காலத்திலே இருந்து எடுத்துவைத்து எம்.எஸ். விசுவநாதன் வரைக்கும் கொண்டுவந்து காட்டுகிறார். நாட்டுப்புறப் பாடல்களை ஆராய்கிறார். புதுக்கவிதை-மரபுக்கவிதை ஆராய்ச்சியிலேயும் ஒருதெளிவான முடிவைச் சொல்கிறார்; மெய்ஞ்ஞானத்தை விஞ்ஞானத்தோடு ஒப்பிட்டும் காட்டுகிறார். இவையத்தனையும் இந்த நூலிலே கண்டு ''சிந்தனைச் செம்மலின் '' சிந்தனையாற்றலின் சிறப்பைக்கண்டு வியந்து போகிறோம். அவருடைய சிந்தனைச் சிறப்புக்கு மேலும் சில சான்றுகள் பார்ப்போம்.

''இன்றைக்குத் தொண்டுக்காக ஒருவர் நோபல் பரிசுபெற்றால் பாராட்டிக்கொண்டிருக்கிறோம். தொண்டர்களுக்காகவே காப்பியம் படைத்த சேக்கிழாரை மறந்து விட்டுப் பாராட்டிக்கொண்டிருக்கிறோம்'' (பக்.40).

''ஐம்பெருங்காப்பியம் என்கிறார்களே! ஏன் ஆறாவது பெருங்காப்பியமாகப் பெரியபுராணம் சேர்க்கப்படவில்லை? என்ன காரணம்? கீழ்த்தளத்திலே அடிமட்டத்திலே இருந்த தொண்டர்களைப் பாடியதனாலா?'' (பக். 42)

''தமிழகத்தினுடைய இசைதான் மிகப் பழமையான இசை. தமிழ்மண்தான் உலகிற்கு எல்லாக்கலைகளையும் தந்தது. சீவக சிந்தாமணியில் சீவகன் யாழுக்கு உரிய மரத்தைச் சுண்டிப்பார்த்து அறிந்து கொண்டான் என்று இலக்கியத்தில் கலையைப்பற்றிக் கூறியிருக்கின்ற தமிழ்மண் அல்லவா இது... இந்த அளவிற்குத் தெரிந்துகொண்டிருக்கிற எங்களை இன்னும் கொஞ்சம் தெரிந்தவர்களாக மாற்றுங்கள். நீங்களும் கொஞ்சம் கீழே இறங்கி வாருங்கள். எங்களையும் கொஞ்சம்மேலே உயர்த்துங்கள்'' (பக். 85-86)

''மரபுக்கவிதை வேண்டாம் என்று சொன்னால் நம்முடைய திருவள்ளுவர் யாத்த திருக்குறள் மரபுக்கவிதையே. அது வேண்டுமா - வேண்டாமா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். மரபுக்கவிதை என்பது அழிக்கப்படவேண்டிய ஒழிக்கப் படவேண்டிய ஒருமுறை என்று நீங்கள் எடுத்துக் கொண்டால் கம்ப இராமாயணம் இன்றைக்கு இருக்காது. திருக்குறள் இன்றைக்கு இருக்காது. சிலப்பதிகாரம் இன்றைக்கு இருக்காது''(பக்.88.)

இவைகள் மட்டுமல்ல. இந்நூலில் ''சிந்தனை மலர்கள்'' என்ற தனி ஒருப்பகுதியும் கூட வாசகர்களின் ஆய்வுக்காக-தோய்வுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இனிப் ''பெருமைமிகு பெண்கள்'' என்ற மிகச் சிறந்த கட்டுரையொன்றும் இந்நூலில் இடம் பெற்றிருப்பதை அவசியம் இங்கே சுட்டியாக வேண்டும். ''பெண்கள் இவ்வளவு பெருமைக்குரியவர்களா? அறியாமல் இருந்தோமே'' என அவரவர் தம் அறியாமைக்கு வருந்தும் வண்ணம் பெண்களின் பெருமையை ஒரு காவியம் போலவே படைத்திருக்கிறார் ஆசிரியர். ''பெண்கள் பேதையர்கள் அல்ல மேதைகள்'' எனப்புதுமொழி படைத்துள்ள ஆசிரியர், பெண் ஆணைக்காட்டிலும் அறிவினிற் சிறந்தவளே என்பதை ''இருபது வயதுப் பெண்ணுக்கு 25 வயது இளைஞரைத்திருமணம் முடிக்கிறோம்! அதிலிருந்தே 25 வயது ஆண்மகனின் அறிவாற்றலுக்கு நிகர் 20 வயது பெண்ணின் அறிவு என்று தானே நமது முன்னோர்கள் நினைத்திருக்கிறார்கள்'' (பக். 167)எனக்காட்டி விளக்குகிறார். மேலும் அவர் ''பெண்கள் பிறக்கும்போது தியாக வடிவங்களாகப் பிறக்கின்றனர். தியாகத்திருவிளக்குகளாகவே வளர்கின்றனர். மறந்து மழலை மொழிபேசும் பருவம் தொடங்கி சிறுமியாகி, பருவக்குமரியாகி, காதல் மனைவியாகி, அன்புத்தாயாகி, குடும்பத்தலைவியாகி, நரை முதிர்ந்த மூதாட்டியாகி, வாழும் ஒரு பெண்ணின் வாழ்வு, மாசற்ற, தனக்கென வாழாத, ஒரு தியாக வாழ்வாகத்தான் திகழ்கிறது. ஆண்டவன், தான் எங்கும்இருக்கமுடியாது என்

பதற்காகவே வீட்டுக்கு ஓர் அன்னையைப் படைத்தான் என்று டால்ஸ்டாய் கூறிய துண்டு''(பக். 168)

''படிக்கும்போது வாலிபனாகிய முனிசாமியும், வேலை பார்க்கும்போது நடுத்தர வயதான கந்தசாமியும் குடும்பத் தலைவர்களான பிறகு முனிசாமி முதலியாராகவும், கந்தசாமி பிள்ளையாகவும் மாறிவிடுகின்றனர். ஆனால் செல்வி விமலா திருமதியானதும் விமலா தானே தவிர, விமலா நாயுடுவாகவோ விமலா பிள்ளையாகவோ மாறிவிடுவதில்லை. இவ்வாறு சாதியை ஒட்டவைத்துக் கொள்ளாத உயர்ந்த இனமாக நம்முடைய பெண்ணினம் உள்ளது'' (பக். 168-169)

என்று பெண்களின் பெருமையைப் போற்றுவதைப் படிப்பவர்கள் எல்லோருமே பாராட்டுவர். பெண்களின் பெருமையைத் தொல்காப்பியரிலிருந்து பாரதிதாசன் வரையில் பாராட்டிப் பாடியிருப்பதை ஓரிடத்தில் (பக்.165) நூலாசிரியர் தொகுத்துக்காட்டியிருக்கும் விதம் தனிச் சிறப்புடையது. அந்தப்பெண்களின் ஏற்றத்துக்காகத் திருஞான சம்பந்தர் 16 வயதும் நிறையாத பாலகராய் இருந்து பாடுபட்ட திறத்தையும் ''தமிழிசையின் பெருமை'' என்ற கட்டுரையில்

''அன்றைக்குப் புயல்போன்று புகுந்த சமண மதம், பெண்களை வெறுத்து ஒதுக்க வேண்டும் என்று சொன்னது. பெண்களே கூடாது என்று சொன்னது. பெண்களே இல்லாதிருந்தால் இன்றைக்குப் பூமி புல், பூண்டு இவைகளோடு தான் இருந்திருக்கும். அந்த மதத்தை எதிர்த்துத்தான் ஆர்ப்பரித்தெழுந்தார் ஒரு பத்துப்பதினைந்து வயதுப் பாலகர்; அப்படிப்பட்டவர் திருஞானசம்பந்தர்'' (பக். 137) என்று எடுத்துக்காட்டியிருக்கிறார்.

பெண்களுடைய வாழ்விற்காகத் திருஞானசம்பந்தர் பாடுபட்டதையும் மிகச்சிறப்பாக விவரித்திருக்கிறார். தாமும் பெண்களின் பெருமையை மிகச்சிறந்த கவிதையைப்போல-காவியத்தைப்போல வடித்தும் காட்டியிருக்கிறார். இந்த இரண்டையும் இணைத்துப்பார்க்கும்போது திருஞான சம்பந்தர்மேல் நம் அறநிலையத்துறை அமைச்சர் கொண்டுள்ள மதிப்பு நமக்கு விளங்குவதோடு ''நாளும் நற்சிந்தனையால் தமிழ் வளர்க்கும்''அமைச்சரின் அருஞ் சிறப்பும் புலனாகும்.. இவ்வாறான பல சிந்தனைகளுக்கும் காரணமாக விளங்கும் ''புதிய சிந்தனைகள்-புனித சிந்தனைகள்'' நூல், டாக்டர் நாவலர் அவர்கள் வாழ்த்தியபடியும், டாக்டர் சிலம்புச்செல்வர் அவர்கள் வழிமொழிந்தபடியும், தன்னைப் படைத்த நூலாசிரியர் அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு ஆர்.எம்.வீ. அவர்களுக்கு ''டாக்டர்'' பட்டம் தரவல்ல சிறப்புடையது என்பது மட்டும் அல்ல, இந்நூலை ஆய்ந்து ஆய்வேடுகள் தரக்கூடிய அறிஞர் பெருமக்கள் பலருக்கும் கூட டாக்டர் பட்டம் தரவல்ல சிறப்புடையதே.

ரூபாய் 15 விலையுள்ள இப்பயன்மிகு நூலை வெளியிட்டு பாராட்டினைப் பெற்றவர்கள் பேராசிரியர் டாக்டர் நா. பாண்டுரங்கம் அவர்களும், பதிப்பாளர் அருணன் அவர்களும்.

இந்நூல் கிடைக்குமிடம்:

அருணோதயம்,
3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை.600 014.

அஞ்சாதே; எதிர்த்து நில்

ஒரு சமயம் நான் காசியில் இருந்தபோது ஒரு பாதை வழியாகச் சென்று கொண்டிருந்தேன். அந்தப்பாதையின் ஒரு புறம் நீர் நிறைந்த ஒரு பெரிய குளமும், மறுபுறம் உயர்ந்த சுவரும் எழுப்பப்பட்டிருந்தன. அந்த இடத்தில் பல குரங்குகள் இருந்தன.

காசியைச்சேர்ந்த குரங்குகள் மிகவும் பொல்லாதவை. சில சமயங்களில் முரட்டுத்தனமாக நடந்துகொள்ளக்கூடியவை. அவை தங்கள் பாதையில் என்னைச் செல்லவிடக்கூடாது என்று நினைத்தனபோலும்; எனவே நான் செல்லச்செல்ல அவை கிரீச்சிட்டுப் பெரும் சப்தமிட்டபடி என்கால்களைப் பற்றின. அவை நெருங்க நெருங்க நான் ஓட ஆரம்பித்தேன். ஆனால் நான் ஓட ஓட அவையும் பின்தொடர்ந்து ஓடிவந்து என்னைக் கடித்தன. அந்தக் குரங்குகளிடமிருந்து தப்பவே வழியில்லை என்று எனக்குப்பட்டது. ஆனால் அப்போது முன்பின் அறிமுகமில்லாத ஒருவரை வழியில் சந்தித்தேன். அவர் என்னை நோக்கி, 'குரங்குகளை எதிர்த்து நில்' என்று கூறினார். நான் திரும்பிக் குரங்குகளை எதிர்த்து நின்றேன். அவை பின்வாங்கி முடிவில் ஓடியே மறைந்தன. இதுவே வாழ்க்கை முழுவதற்கும் படிப்பினையாகும். பயங்கரத்தை எதிர்த்து நில். அஞ்சாமல் அதை எதிர்த்து நில்.

— சுவாமி விவேகானந்தர்

சிலம்பில் சமத்துவம்

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி

தலைவர் — தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்.

பல்வேறு தமிழ்க்காப்பியங்களிலும் பொதுமை கருத்துக்கள் அவற்றை அணி செய்யும் ஆபரணங்களாக மட்டுமே விளங்கும். ஆனால், சிலப்பதிகாரத்திலோ, சமரசக்கொள்கை அப்பேரிலக்கியத்திற்கு அழகளிக்கும் பொருளாக மட்டுமன்றி-உயிரளிக்கும் ஊற்றாகவும் அமைந்துள்ளது.

ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன் நம் அருமைத் தமிழகத்தில் சமய நெறிகள் தழைத்து இருந்தன. ஆனால், சமய வெறி சற்றும் தலை காட்டவில்லை. இவ்வுண்மையைத் தமிழ்நாட்டின் ஒப்புயர்வற்ற வரலாற்றுக் காப்பியமாகிய சிலப்பதிகாரம் பல்லாற்றானும் சுட்டிக்காட்டுகிறது. தமிழர் விழாக்களுக்கெல்லாம் தொன்மை சான்றது இந்திர விழா. சிலப்பதிகாரக் காலத்தில் அதுவே தமிழினத்தின் தேசியத் திருவிழாவாய்த் திகழ்ந்தது. காவிரிப்பூம்பட்டினத்தில் 28 நாட்கள் கலையும் சமயமும் கைகோத்துக் களிநடம் புரிய நடைபெற்ற அப்பெருவிழாக் காட்சிகளை எல்லாம் பெருமிதத்தோடு பாடுகின்றார் இளங்கோஅடிகள். அப்போது பூம்புகாரில் 'பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவன் கோவிலும்', 'வால்வளை மேனி வலியோனாகிய பலராமன் கோயிலும்', 'நீலமேனி நெடியோனா'கிய திருமால் கோயிலும், 'மாலை வெண்குடை மன்னவனாகிய இந்திரன் கோயிலும்' மாண்புற்று விளங்கின. விண்ணவர்கோன் விழாவின்போது 'வேறு வேறு கடவுளர்க்கும் சாறு சிறந்தது ஒரு பால்' என்று பல்வகைத் தெய்வங்கட்கும் நல்விழாக்கள் மல்கிநின்ற செய்தியைக் குறிப்பிடும் இளங்கோவடிகள் வாக்கில் அவர் இதயத்தின் எக்களிப்பும் புலனாகின்றதன்றோ?

ஒரு சமுதாயத்தின் சிறப்பெல்லாம் அச்சமுதாயத்தை உருவாக்கும் மக்களையே பொறுத்தது. அவ்வகையில் பழந்தமிழ்நாட்டுக்கோவேந்தர் முதலாகக் குறவர் குடிமக்கள் ஈறாக எல்லோரும் சமரச நெறியில் வாழ்வைச் செலுத்துவதிலேயே வேட்கை கொண்டிருந்தனர். சிலப்பதிகாரக் காவியத்துள் வரும் ஆய்ச்சியர் குரவையும், வேட்டுவ வரியும், குன்றக்குரவையும், முத்தமிழ்ச் சிறப்பும் ஒருங்கே பொருந்தியவை. ஆய்ச்சியர் குரவையில் வைணவர் நெஞ்சையெல்லாம் உருக்கும் கண்ணன்-மணிவண்ணன் பாடல்களைக் கேட்கலாம். வேட்டுவ வரியிலே 'இறைவன் இல்லை' என்பாரும் வியக்கப் பாலைவனத்து மக்கள் நெஞ்சிலும் கடவுள் பத்தி ஊற்றெடுத்துக் கவிதையாய் உருக்கொண்டு கொற்றவை வழிபாடாய் மலர்வதைக் காணலாம். குன்றக் குரவையிலே முருகன் அடியாரெல்லாம் மனங்கரைய அறுமுகவேள் திருப்புகழ் இசைபாடக் கேட்கலாம்.

ஆயினும், பிற்காலத்தில் சமயவெறியே நெறியாகக் கொண்டு தோன்றிய சிலநூல்களில் இருப்பது போன்று ஓர் இடத்திலாவது பிற தெய்வ சமய நிந்தனையைக் காண இயலாது. ஆய்ச்சியர்-வேடுவர்-குறவர் நிலை இதுவாக, சிலப்பதிகாரத்தில் சமரச நெறிக்குச் சான்றாக விளங்கும் பாத்திரங்கள் பல்லோருள்ளும் இருவரை மட்டும் இங்கே நினைவு கூரலாம். ஒருவர் முற்றுந்துறந்த கவுந்தி அடிகள், இன்னொருவர் முதுபெருவேந்தன் சேரன் செங்குட்டுவன். கவுந்தி அடிகள் சமண சமயத்தில் அசைக்கமுடியாத பற்றுக்கொண்டவர்.

'மலர்மிசை நடந்தான் மலரடி அல்லதுஎன்
தலைமிசை உச்சி தான்அணிப் பெறாஅது.''

(நாடுகாண் காதை)

என்று கூறும் சமயப்பற்று நிரம்பியவர் கவுந்தியடிகள். அத்தகையோரைத் 'திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும், செங்கண் நெடியோன்நின்ற வண்ணமும் என் கண் காட்டென்று என் உள்ளம் கவற்ற, குடமலைநாட்டினின்றும் கோயில்கள் சிறந்த தமிழகம் போந்தேன்' என்று தன்னைப் பற்றிக் கூறிக்கொள்வதில் பெருமை கொண்ட வைணவ பக்தன் ஒருவன் சந்திக்கின்றான். மதுரை நகருக்கு வழி அறிய விரும்பிய கவுந்தி அடிகட்கு அவன் கூறிய கருத்துக்கள் சில ஏற்புடையனவாய் இல்லை. கருத்து வேறுபாடு கொண்ட அந்நிலையிலும் சமணத்துறவியாகிய கவுந்தியடிகள் சிறிதும் சமயக்காழ்ப்பு இன்றிக் கூறிய வாசகம் அவரது பரந்த பொதுமை உள்ளத்தைக் காட்டுகின்றது.

'நலம்புரி கொள்கை நான்மறை யாள.'

வாய்மையின் வழாது மன்னுயி ரோம்புநர்க்
கியாவது முண்டோ எய்தா அரும்பொருள்?
காமுறு தெய்வங்கண்டடி பணிய
நீபோ யாங்களும் நீள்நெறிப்படர்குதும்

(காடுகாண் காதை).

இதுவே அருள்நெஞ்சு படைத்த அவ்வன்னையார் திருவாக்கு.

செந்தமிழ் நாட்டு வேந்தனாகிய சேரன் செங்குட்டுவனோ, சிவனருளாலேயே தோன்றிய

வன் என்று போற்றப்படுபவன். அவன் 'காவா நாவின் கனகவிசயர்' ஆணவத்தை அழித்து அவர் தலையில் கற்புத் தெய்வமாகிய கண்ணகிக்குச் சிலையேற்றி வரத் திட்டமிட்டு போர்க்கோலம் பூண்டான். அப்போது ஆடகமாடத்தில் அறிதுயில் கொண்ட திருமாலின் வழிபாட்டுப் பொருளைச் சிலர்கொண்டு வந்தனர். சிவபெருமானுக்கன்றி வேறெவர்க்கும் சிரம் தாழ்த்தாத சிந்தைபடைத்த செங்குட்டுவன், அப்பொருளை விருப்போடு வாங்கித் தன் அழகிய திருக்கரத்தில் உவகையோடு அணிந்து கொண்டானாம், இப்பொருவரு காட்சியைச் சிலப்பதிகார ஆசிரியர் சொற் சித்திரமாக் கிக் காட்டுகின்றார்.

''தெண்ணீர் கரந்த செஞ்சடைக்கடவுள்

வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்

ஆங்கது வாங்கி அணிமணிப்புயத்துத்

தாங்கினன்..........

(கால்கோள் காதை)

என்று அச்சேரன் தம்பியாராகிய சிலப்பதிகார ஆசிரியர் நயனொடு பயனும் நல்கும் வகையில் குறிப்பிடும் திறம் அழகுடையதன்றோ?

வள்ளுவர்போல் இளங்கோ அடிகள் சைவ ராயினும், சமணராயினும் தம் நெறி இதுவென அறிஞரும் உய்த்து உணர்தற்கு அரிதாகும் வகையில் தம்காவியக் கோவிலைப் படைத்துள்ளார். வைணவ சமயத்தையும் பௌத்த மதத்தையும் பிற சமயங்களையும் பற்றிப் பாத்திரங்கள் வாயிலாகப் பேசும் போதுமட்டுமின்றிக் கவிகூற்றாகக் கூறுமிடங்களிலும் மிகவும் பக்தியோடு அவர் குறிப்பிடும் பான்மை வியந்து போற்றற்குரியது.

அரசியல் துறையிலும் இலக்கியத்துறையிலும் ஆன்மீகத் துறையிலும் தமிழ் மக்கள், ஒற்றுமையையே உயிர்நாடியாகக் கொண்டு உய்யவேண்டும் என்பது இளங்கோ அடிகள் கண்ட பெருங்கனவு. பண்சுமந்த பல்வகைப் பாடல்களும் தமிழன்னையின் திருவடியில் உதிர்ந்த மலர்களாய் கிடக்கும் நிலைமாறி, அவை காவிய மாலையாய்த் தொடுக்கப்படல் வேண்டும் என்று ஆசைகொண்டார் இளங்கோ. அதற்குத் தாமே வித்திட்டார்; வெற்றியும் கண்டார். அரசியல் துறையில் முடியாட்சியால் மூன்றாகப் பிளவுபட்டுக்கிடந்த தமிழகத்தைக் கண்ணகியின் காற்சிலம்பால் ஒன்றாக்கி, அவ்வொற்றுமை என்றும் வாழ ஆசி கூறினார். அவ்வாசியின் வாசியை இன்று தமிழ்நாடுஉணர்ந்து போற்றி இன்பப் பொங்கல் வைக்க முந்துகின்றது.

ஆன்மீகத்துறையிலோ தமிழகம் மட்டுமின்றி, வையகமே ஒன்றுபட வேண்டுமென்று விரும்பிய இளங்கோ அடிகள் 'யாதும் ஊரே யாவருங்கேளிர்' என்ற பழந்தமிழ் நெறிவழி, பாருலகம் அமையும் நாள் எந்நாளோ என்று ஏங்கினார். அந்நாள் தோன்ற வழி ஒன்றே என்பதைத் தமிழ்த்தாயின் திருவடிகளில் தலைதாழ்த்தி, குணவாயிற்கோட்டத்துத் தவம் கிடந்த அப்பெருந்தகை ஊன்றி உணர்ந்து தெளிந்தார். 'சடங்குகளே சமயம்' என்ற பொய்ம்மை நிலை மாறி 'ஒழுக்க வாழ்வே சமயம்' என்ற உயர்நிலை வந்தால், மடமைகள் மறையும்; மெய்யறிவு பிறக்கும் இவ்வுண்மைக்கு ஒரு விளக்கம் அளிப்பது போன்றே அவர் கண்ணகி கடவுளை நமக்குகாட்டுகின்றார். வீரஞ்சான்ற ஒழுக்கத்தால் இமயத்திலும் மேலாக உயர்ந்த உத்தமி கண்ணகி; அவளிடமிருந்த ஒரு பேராற்றல் ஒழுக்கந்தான், அதன்பயனோ முத்தமிழ்வேந்தர் முதலாகக் குறவர் - வேடர் ஈறாக, கனகவிசயர் முதலாக இலங்கைக்கயவாகு ஈறாக அத்தனை பேரும்'அன்னையே, நீயே எங்கள் தெய்வம்' என்று சொற்கோயிலிலும் கற்கோயிலிலும் மனக்கோயிலிலும்பத்தினிக் கடவுளை வைத்து வழிபட்டனர்.

சமயப்பொதுமை உணர்வு அறிவுசான்ற பெருமக்களிடம் ஏற்படுவதே அரிது. ஆனால் இளங்கோ அடிகட்கு அப்பொதுமை உணர்வில் இருந்த ஆர்வமும் 'வித்தகம் பேசி' வாணாளை வீணாக்கும் வழியறியாத—கள்ளம் கபடம் அற்ற மக்கள் மீது கொண்ட பற்றும் சேர்ந்து சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களைக் கொண்ட, கண்ணகித் தெய்வத்தைக் காசினி முழுவதற்கும் உரிய பொதுமைத் தெய்வமாக அறிமுகம் செய்து வைக்கத் தூண்டுகின்றது.

'எம்மதமும் சம்மதம்' எனக்கொண்ட இளங்கோ அடிகள் பொதுமை நெறியிலே கொண்டிருந்த தணியா வேட்கைக்கு அவர் பாடிய சிலப்பதிகாரக் காவியத்தின் முதலும் முடிவுமே சான்றுகள். பகலவனையும் பால் மதியத்தையும் மாமழையையுமே முன்னர் வாழ்த்திப் பின்னர்ச் சோழநாட்டின் தலைநகரை வாழ்த்திப் பின் காவியத்தைத் தொடங்குகின்றார் இளங்கோ அடிகள். ஞாயிறு, திங்கள், மாமழையாவும் இவ்வுலகின் பொதுமைச் செல்வங்களன்றோ? அவ்வாறே காவியத்தை முடிக்கும் பொழுதும் தமிழகத்தை மட்டும் பார்த்துப் பேசாது தாரணி முழுவதையுமே பார்த்துப் பேசுகின்றார்; ஒரு சமய நெறி நின்று உரையாது உலக சமயங்களெல்லாம் தலைவணங்கி ஏற்றுக்கொள்ளத்தகுந்த பண்பாட்டு நெறிகளையே பறை சாற்றுகின்றார்.

'தெரிவுறக்கேட்ட திருத்தகு நல்லீர்!
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வந்தெளிமின்; தெளிந்தோர்பேணுமின்;
பொய்யுரை அஞ்சுமின்;புறஞ்சொற் போற்றுமின்;
ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானஞ்செய்ம்மின்; தவம்பல தாங்குமின்,
செய்தநன்றி கொல்லன்மின்; தீநட் பிகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருண்மொழி
நீங்கன்மின்

அறவோ ரவைக்களம் அகலா தணுகுமின்;
பிறவோரவைக்களம் பிழைத்துப்பெயர்மின்;
பிறர்மனை அஞ்சுமின்; பிழையுயிர் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளும் களவுங்காமமும் பொய்யும்
வெள்ளைக்கோட்டியும் விரகினில் ஒழிமின்;
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா;
உளநாள் வரையாது; ஒல்லுவ தொழியாது;
செல்லுந்தேயத்துக்குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர்!

இதுவே இளங்கோ அடிகளின் இதயகீதம்; பொதுமை அறத்தின் புலமை ஒளி; சமயந்தோறும் நின்ற தையலாம் தமிழ்த்தாய் மன்பதைக்கு வழங்கும் தனிப்பெருஞ்செய்தி. வாழ்க பொதுமை கண்ட தமிழ்! வெல்க தமிழ் கண்ட பொதுமை!

— — — — — — — —

செத்த நாயும்-சித்தாந்தமும்

பேராசிரியர் டாக்டர் P. சௌரிராஜன்
தலைவர்-தமிழ்த் துறை, திருவேங்கடவன் பல்கலைக் கழகம்.

சித்து என்பதன் பொருள் அறிவு, ஞானம் என்பதாகும். சித்தின்-அறிவின் முடிந்த முடிவே சித்தாந்தமாகும்.

முல்லை மலர் வெண்மையாக இருக்கிறது என்பது கண்வழியே பெறும் அறிவு. மாலையில் முல்லை மலரும்போது மணங்கமழ்கிறது என்பது மூக்கால் பெரும் அறிவு. மலர் மிக மென்மையாக, வழவழப்பாக குளிர்ச்சியாக இருக்கிறது என்பதெல்லாம் தொடுபொறியால் பெறும் அறிவு. தனித்தனியே காணும் இந்த அறிவு குறை அறிவு. முல்லை மலரைக் கண், கை, மூக்கு முதலிய பொறிகளால் துய்த்த துய்ப்பு மனதுள் சென்று முல்லை பற்றிய ஒரு பொதுவான, ஒரு முழுமையான கருத்தைத் தருகிறதே அதனை முல்லை மலரைப்பொறுத்த நிறை அறிவு எனலாம்.

முல்லையின் அமைப்பு, வகை, இனம், இனவளர்ச்சி, உரிய எரு, மண் முதலியனபற்றியெல்லாம் அறியும் அறிவு அறிவியல் அறிவு, அதாவது விஞ்ஞான அறிவு.

அதற்கு அப்பாலும், ஓர் அறிவு நிலை உண்டு. முல்லை மலர் மாலையில் மலர்கிறது. மணங்கமழ்கிறது. தாமரை காலையில் விரிகிறது. குறிஞ்சி பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறையே மலர்கிறது. சில மலர்கள் வண்ணம் நிறைந்து கண்ணுக்கு இனிய காட்சி தருகின்றன. சில மலர்கள் மணங்கமழ்ந்து மூக்கிற்கு விருந்தளிக்கின்றன. குறிஞ்சி, வேம்பு முதலிய மலர்கள் நிறைந்த தேன் தருகின்றன.

சில மலர்கள் ஏன் வண்ணத்தால் சிறந்தன? சில ஏன் பெரிதும் மணங்கமழ வல்லனவாக உள? தேன் நிறைந்துள்ள மலர்களுள் குறிஞ்சி சிறந்துள்ளது. எதனால்? ஆலுக்கு ஏன் விழுது? அரசுக்கு ஏன் அது இல்லை? இவற்றுக்கு அடிப்படையில் அமைந்துள்ள படைப்பின் நுட்பம், அருள்நோக்கு; இறைக்காட்சி யாது? எனக் கண்டறிவதே சித்தாந்தமாகும்.

இத்தகு சித்தாந்த அறிவு மின்னொளி போல அவ்வப்போது நம் வாழ்வில் குறுக்கும் நெடுக்குமாகக் கணப்போது தோன்றி மறைகின்றது. அந்த ஒள்யைப்பற்றிக் கொண்டு, பிறவற்றையெல்லாம் சிறிதுபோது மறந்து அதனையே தொடரும்போது அது ஒரு சித்தாந்தத்தைக் காட்டி நிற்கக் காணலாம்.

அப்படித்தான் அன்று காலையில் வயல் வெளி நோக்கி நடந்து செல்கையில் கொடிய நாற்றம் ஒன்று வந்து என் மூக்கைத்துளைத்தது. கைத்துண்டால் மூக்கை மூடிக்கொண்டு விரைந்து அந்தப்பகுதியைக் கடந்தேன். கடக்கும்போதே சாலை ஓரமாகச் செத்த நாய் ஒன்றன் உடல் உப்பியிருப்பதையும், அதன் உடல் அங்குமிங்கும் புண்பட்டுச் சிதைந்திருப்பதையும் அவ்வாறு சிதைந்த இடங்களைச்சுற்றி ஈ மொய்த்துக்கொண்டிருப்பதையும் கண்டேன். கண்டு கொண்டே, மூக்கைப் பொற்றிக் கொண்டே விரைவாக அந்தப் பகுதியைக் கடந்து அப்பால் போனேன்.

அங்கே ஒரு மதகடி. அதன்மேல் அமர்ந்தேன். 'அப்பா! என்ன கொடிய நாற்றம்! எனக்குள் முணுமுணுத்துக்கொண்டேன். திடீரென என்னையும் அறியாமல் என்னுள் ஒரு கேள்வி எழுந்தது. ஏன் இந்த நாற்றம் உண்டாகிறது? அறிவியல் வழி ஏதோ விடை கிடைத்தது. ஆனால் மனம் அமைதி அடையவில்லை. மரம் பட்டுப்போகிறது. பலநாள் இலை இழந்து கிளை ஒடிந்து அப்படியே நிற்கிறது. நாற்றம் ஒன்றும் இல்லையே! பின் இறந்துபோன நாய், நரி, ஆடு, மாடு முதலியவற்றின் உடலுக்கு மட்டும் ஏன் இந்தக் கொடிய நாற்றம் என்று மேலும் மனம் உளைந்தது.

இத்தகு மாண்ட உயிர்கள் மண்ணுக்கு நல்ல உரமாகும். ஒருமுறை இறந்துபோன பூனையை என் பாட்டி நாரத்தை மரத்தின் கீழே புதைத்தாள். அந்த ஆண்டு நிறைய நாரத்தங்காய் கிடைத்தன. எனவே உரமாகும் இந்தப்பொருள்களைப் புதைத்தல் வேண்டும் என உலகிற்கு உணர்த்தத்தான், மனிதனுக்கு அறிவுறுத்தத் தான் இப்படி இவற்றில் நாற்றம் தோற்றுவிக்கப் பெறுகிறதோ என்று நினைத்தேன்.

அப்போது காக்கை, கரையும் குரல்கேட்டு திரும்பிப்பார்த்தேன். காக்கைகள், பருந்துகள், சில அந்த செத்த நாயைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன. ஓகோ இப்படிப்பட்ட வேறு உயிரினங்களுக்கு உணவாவதையும் நோக்கமாகக் கொண்டது தானோ இந்த நாற்றம் என்ற நினைவு வந்தது.

அப்போது என் பேராசிரியர் ஒருநாள் விலங்குக்காட்சி சாலையில் என்னோடு பேசிக் கொண்டிருந்தபோது கூறியன நினைவுக்கு வந்தன. ''சௌரி! புலி, சிங்கம் முதலிய கொடிய விலங்குகளைக் கடவுள் ஏன் படைத்து உலவ விட்டிருக்கிறார் என்று நினைத்துப்பார்த்திருக்கிறாயா?''

''இல்லை அய்யா! ஏன்? எளிய மான்களையெல்லாம் அடித்துக்கிழித்து அவை உண்கின்றன. ஏனோ இப்படிக் கொடிய விலங்குகளை இறைவன் படைத்திருக்கிறான்?''

''நான் இப்படி எண்ணுகிறேன் சௌரி! நாட்டில் தோட்டிகள் உண்டு; காட்டில் தோட்டிகள் இல்லையல்லவா? மாண்டு மடிந்துபோன உயிரினங்களால் காடெல்லாம் நாறிப்போகாதிருக்கத்தான் கடவுள் புலி, சிங்கம், முதலிய இந்தக் கொடிய தோட்டிகளைப் படைத்திருப்பார்'' என்று இன்னும் என்னவோ சொல்லத் தயங்கி நிறுத்தினார்.

''அப்படியானால், உயிரோடு வாழ்கின்ற மான், மாடு முதலியவற்றை அவை ஏன்கொன்று தின்கின்றன?'' என்றவாறு அவரை ஏறிட்டுப் பார்த்தேன்.

''ம்....... ம்.......எண்ணினேன். இப்படி ஒரு விடை கிடைத்தது. வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் ஏற்பட்டது போல இயற்கைச்சாவு குறைந்தபோது உணவில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கும். சாவு குறைந்து புலியும் சிங்கமும் மிகுந்துவிட்டதாலும் இப்படிப்பட்ட நெருக்கடி ஏற்பட்டிருக்கலாம்'' என்றார்.

''என்னவோ இதில் நியாயம், அறம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை'' என்று வானத்தைப் பார்த்தவாறு எனக்குள் கூறிக்கொண்டேன்.

அவர் சிரித்தார். தொடர்ந்தார். ''காட்டில் மருத்துவ மனை இல்லை. நாட்டில் நோய் நொடி வந்தவரைக் கவனித்து மருத்துவம் செய்து துன்பமின்றிக் காப்பற்ற எத்தனையோ வசதிகள் உள்ளன. ஆனால் காட்டில் நோய் நொடியால், முதுமையாக, நீண்டகாலம் வாடி வருந்தாமலிருக்கவும் இந்தத்தோட்டிகள் பயன்படுகிறார்கள். ஏனெனில் முதிர்ந்த, மெலிந்த, நோயுற்ற விலங்குகள்தானே இவற்றின் வாயில் அகப்படுகின்றன'' என்றார் என்னைஊடுருவிப் பார்த்தவாறே.

எனக்கென்னவோ இன்னும் திருப்தி ஏற்படவில்லை. அவர் அதனை உணர்ந்துகொண்டவர் போல ''இப்படியும் நினைக்கிறேன் சௌரி! இறைவன் வாழ்விற்கெனச் சில அடிப்படை அறங்களை வகுத்துள்ளான். அவற்றுள் ஒன்று விழிப்புணர்வு. (ஜாக்கிரதை உணர்வு) அந்த விழிப்புணர்வில் எப்போது தவறுகிறோமோ அப்போதெல்லாம் தண்டனை ஏற்படுகிறது. இந்த விலங்குகள் தங்கட்குள் பகையால், காமத்தால், உணவுப்போராட்டத்தால், கால, இடச்சூழ்நிலையை மறந்து போராடும் போதே பெரிதும் அகப்பட்டுக்கொள்கின்றன'' என்று கூறியதை நினைத்தபோது படைப்பின் நுட்பம் ஓரளவு புலப்படுவது போலத் தோன்றியது. காலைக் கதிரின் செவ்வொளிச் சிதறல்களும் கிழக்கே கிழித்துக்கொண்டு அதனை உறுதி செய்வனபோலும் பொலிந்தன. "ஆடலையே காட்டி எனது ஆடல் ஒழித்து ஆண்டு கொண்டான்'' என்ற தாயுமானவர் பாடல் எங்கிருந்தோ காற்றில் மிதந்து வந்தது.

நாம் உயர்ந்தவர்களாக இல்லை!

இப்போது நாம் விலங்குகளைவிட அதிகஅளவில் ஒழுக்கமானவர்களாக இல்லை. சமுதாயத்தின் கட்டுப்பாடு என்னும் சாட்டையடிகளால் தான் நாம் அழுத்தி அடக்கி வைக்கப்பட்டிருக்கிறோம். இன்று சமூகம் ''நீ திருடினால் நான் உன்னைத் தண்டிக்கப்போவதில்லை'' என்று சொல்லி விடுவோமானால், உடனே நாம் விரைந்து ஒருவர் மற்றொருவருடைய சொத்துக்களைப் பறிப்பதற்காகப் பாய்ந்து ஓடுவோம். போலீஸ்காரர்கள் தாம் நம்மை நல்ல ஒழுக்கம் உடையவர்களாக வைத்திருக்கிறார்கள். சமுதாயத்தின் பொது அபிப்ராயம் தான் நம்மை ஒழுக்கமுள்ளவர்களாக வைத்திருக்கிறது. உண்மையில் மிருகங்களைவிட நாம் சிறிதும் உயர்ந்தவர்களாக இல்லை.

—சுவாமி விவேகானந்தர்.

அருள்வாரி வழங்கும்

சமயபுரம் மாரியம்மன்

டாக்டர் இரா. கலைக்கோவன்

திருச்சி

தமிழகம் திருக்கோயில்களின் தாயகம், திரும்பிய திக்கெல்லாம் விண்ணைமுட்டும் கோபுரங்களும் வானாளாவும் விமானங்களுமாய் இந்த மண்ணையாண்ட பேரரசர்கள் இறைப் பற்றுக்கும் கலைத்திறனுக்கும் இலக்கியமாக்கிச் சென்ற இத்திருக்கோயில்களைச் சக்தி பீடங்களாகவும், சிவத்தலங்களாகவும் வைணவத் தலங்களாகவும் இன்னபிற இனங்களுக்குரிய கோயில்களாகவும் வகைப்படுத்தலாம். தமிழகத்திலுள்ள சக்தி தலங்களில் சமயபுரம் கருமாரியம்மன் கோயில் குறிப்பிடத்தக்கதாகும்.

திருச்சியிலிருந்து, கொள்ளிட நதிக்கு வடக்கில் பதினோரு கிலோமீட்டர் தொலைவில், திருச்சி சென்னை நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது, வரலாற்றுப் புகழ்பெற்ற கண்ணனூர். விக்கிரமபுரம் என்றும், கண்ணபுரம் என்றும் அழைக்கப்படும் இவ்வூர் எழுநூறு ஆண்டுகளுக்கு முன் ஈடும் இணையுமில்லாததொரு ஒப்பற்ற தலைநகராய்த் திகழ்ந்த பெருமையை உடையது. மைசூரைச்சேர்ந்த ஹொய்சள மன்னர்களில் ஒருவரான வீரநரசிம்மனின் மகனான வீர சோமேசுவரன், தமிழகத்து அரசியலில் தலையிட்டதன் விளைவாய் சோழமண்டலத்தில் ஹொய்சள பேராட்சி உருவாகியது. வீர சோமேசுவரனின் வெற்றிப்பெருமிதம் மூன்றாம் இராசராசனையும், அவன் மகன் இராசேந்திரனையும் இருந்த இடம் தெரியாமல் ஒதுக்கியது. கண்ணனூர் ஹொய்சளர் தலைநகரமாகியது. இவ்வூரில் ஊன் கோயிலை வீர சோமேசுவரன் எடுப்பித்து மகிழ்ந்தான். இந்தக் கண்ணனூர் பாண்டியர்களாலும், முகமதியர்களாலும் அழிக்கப்பட்டது. இன்றும் இவ்விடத்தில் பூமி மட்டத்தில் மாடமாளிகைகளின் அழிபாடுகளைப் பரக்கக் காணலாம்.

இத்தனைப் பெருமைக்குரிய கண்ணனூரில் தான் அருள்மிகு மாரியம்மன் கோயில் புகழோடு விளங்குகிறது. சமயபுரம் மகமாயியென்று பொதுமக்களால் விருப்போடு அழைக்கப்படும் இறைவியின் கோயில் எப்போது எடுக்கப்பட்டது, எப்படி எடுக்கப்பட்டது என்பது போன்ற விபரங்கள் செவிவழி செய்தியாகவே நிலவி வருகின்றன. கல்வெட்டுகள் எதுவுமில்லாத நிலையில், இவ்வம்மனின் உருவச்சிலை ஹொய்சள மன்னனால் நிறுவப்பட்டதென்றும், விஜயநகர மன்னர்களால் போற்றப்பட்டு வந்ததென்றும், விஜயநகரப் பேரரசு வீழ்ச்சியுற்ற போது இவ்வம்மன் தந்தப்பல்லக்கொன்றில் இவ்விடத்துக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் சொல்லப்படும் தலவரலாற்றுச் செய்திகளையே ஏற்கவேண்டியுள்ளது. கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த காலத்தில் கி.பி.1752 இல் இக்கோயில் வளாகத்தை இராபர்ட் கிளைவும், அவரது படையினரும் பாசறையாகப் பயன்படுத்திக் கொண்டதாகவும், இங்குப் பிரெஞ்சுப்படைக்கும், பிரிட்டிஷ் படைக்கும் போர் நடந்ததாகவும் திருச்சி கெசட்டியர் கூறுகிறது.

ஊருக்கு நடுவில் அம்மன் கோயில் அமைந்துள்ளது. விநாயகர் சந்நிதியும், அம்மன் மூலத்தானமும் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. உற்சவமூர்த்தியும், கருப்பண்ணசாமியும் தெற்கு நோக்கி அமைந்துள்ளன. இத்தலத்தின் சிறப்புக்குரிய மரம் வேம்பு ஆகும். மூன்று திருச்சுற்றுக்களை உடைய இக்கோயிலில் பல மண்டபங்கள் உள்ளன. இரண்டாம் திருச்சுற்றில் பௌர்ணமி மண்டபம், நவராத்திரி மண்டபம் வசந்தமண்டபம், பக்தியுலா மண்டபம் முதலிய பல மண்டபங்கள் புதிதாய்க் கட்டப்பட்டுள்ளன. மூன்றாம் திருச்சுற்றில் நான்கு சந்நிதிகள் உள்ளன. கிழக்கில் விநாயகர்சந்நிதியும், தெற்கில் முருகன் சந்நிதியும் மேற்கில் ராஜகோபாலசாமி சந்நிதியும், வடக்கில் போசளீசுவரர் கோயிலும் உள்ளன.

கோயிலின் முன் மண்டபத்தில் இறைவியின் அருள்பெற வரும் மக்கள் தங்கவும், இளைப்பாறவும் வசதிகள் உள்ளன. இக்கோயிலுக்குக்

காணிக்கையாக இவர்கள் கொண்டுவரும் ஆடு, கோழி, சேவல் போன்ற உயிரினங்களை, விடவும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாவிளக்கு மண்டபத்தில், வேண்டுதல்கள் நிறைவேறிய பொதுமக்கள் திரளாய் நின்று, மாவிளக்கு ஏற்றி இறைவியை வழிபடும் அழகைக்காணலாம். இந்த மாவிளக்குமண்டபத்தில் முகப்பில் தான் உப்புகொட்டுவதற்கான பெரிய பாத்திரங்கள் உள்ளன. இறைவிக்காகக் கொண்டு வரும் உப்பை மக்கள் இங்கே கொட்டுவார்கள். நேர்த்திக்கடன் கழிக்கக்கொண்டுவரும் வெள்ளியுருவங்களை இங்குள்ள உண்டியலில் இடுகிறார்கள். மாவிளக்கு மண்டபத்தின் மையத்தில் நாயக்க வேந்தர்களின் உருவச் சிலைகள் காணப்படுகின்றன. இதையடுத்து முகமண்டபம் உள்ளது. இங்கு தான் மகமாயியின் அருள்பெற வரும் ஆர்வலர்கள் திரள்கின்றனர். உள் மண்டபத்தையடுத்தஎடுப்பான கருவறையில் இறைவி. எண்கரத்தாளாய்க் கருணைபொங்கும் விழிகளோடு வீற்றிருக்கிறார். தேவியின் வலக்கரங்களில் உடுக்கை, அம்பு, திரிசூலம், வாள் முதலியனவும், இடக்கரங்களில் கொம்பு, வில், மணி, கேடயம் முதலியவையும் காணப்படுகின்றன. இறைவியின் வடிவம் சுதையால் செய்யப்பட்டிருப்பதால் அபிஷேகம் உற்சவமூர்த்தத்திற்கே செய்யப்படுகின்றன. இறைவியின் கருவறை விமானச் சிகரம் சாலையமைப்பில் உள்ளது. உள் திருச்சுற்றை ஒட்டி திருச்சுற்று மண்டபம் பொதுமக்கள் ஓய்வெடுக்க வாய்ப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

செவ்வாய், வெள்ளி, ஞாயிறு முதலிய மூன்று நாட்களிலும் இக்கோயிலில் கூடும் மக்கள் கூட்டத்தைச் சொல்லி முடியாது. திருச்சி நகர்ப்புறத்திலிருந்தும், திருச்சியைச் சூழ்ந்த ஊர்ப்புறங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கில் பொது மக்கள் கூடி வழிபடும் பெருமைக்குரிய தலமாக இருந்து வரும் சமயபுரத்தில் நடைபெறும் தை, மாசி மாத விழாக்கள் சரித்திரச் சிறப்புடையவையாம்.

தைப்பூசத் திருநாளில் அம்மன் சமயபுரத்திலிருந்து புறப்பட்டுத் திருவீதி உலா வந்து கொள்ளிட நதியின் தென்கரை வரை சென்று தீர்த்தமாடித் திரும்பும் அன்று ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலில்இருந்து ஆடைகள், மாலை, தளிகை முதலியன சீர் வரிசையாக அனுப்பப்படும். இதற்கு முதல் நாள் சமயபுரத்தில் தெப்பத்திருவிழா நடைபெறும். இது கண்கொள்ளாக் காட்சியாக அமையும்.

மாசிமாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை பூச்சொரியல் உற்சவம் நடைபெறும், அன்று விடியவிடிய நகர்ப்புறத்திலிருந்தும், ஊர்ப்புறங்களிலிருந்தும் மக்கள் அலங்கார ரதங்களிலும், வண்டிகளிலும் வந்து இறைவிக்குப் பல வண்ணப் பூக்களைச் சொரிந்து மகிழ்வர். பார்க்கப்பார்க்கக் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கும் இத்திருநாள் முதலாக நான்கு வாரம் வரையில் அம்மனுக்கு நைவேத்தியம் இல்லை. பச்சைப்பட்டினி விரதம் எனப்படும். நீர்மோர், பானகம் மட்டுமே நைவேத்தியமாகும்.

பங்குனி மாதத்துக் கடைசி ஞாயிற்றுக்கிழமை கொடி ஏற்றம் ஆரம்பம். அன்று தொடங்கிப் பத்துநாள் உற்சவம் நிகழும். எட்டாம் நாளில் தேவியை இளநீர் வடிவத்தில் அமைத்து ஊரார் தங்கள் இல்லங்களில் வழிபடுவர். சித்திரை மாதம் முதல் செவ்வாய்க்கிழமை தேரோட்டமும், அடுத்த வெள்ளிக்கிழமையில் தெப்பவிழாவும் நடைபெறும். பக்தர்கள் அக்கினிச் சட்டியேந்திக் கொண்டு ஆடிவரும் அழகை சித்திரை விழாவில் காணலாம். உடலெல்லாம் அலகு குத்திக்கொண்டு பக்திப்பரவசத்தில் பொதுமக்கள் இறைவியின் அருள் பார்வை வேண்டி 'மகமாயி மகமாயி' என்று கூவிக்கொண்டு வெறியாட்டு ஆடிவரும் காட்சி நெஞ்சை நெகிழ்விக்கும்.

சித்திரை மாதக்கடைசியில் வசந்தவிழா தொடங்கி வைகாசி முதல் பஞ்சப்பிரகார உற்சவம் மிக விமரிசையாக நடக்கும். அன்று பகலில் அம்மனுக்கு மகாபிஷேகமும், இரவில் கண்ணைக்கவரும் அலங்காரத்துடன் வீதியுலாவும் உண்டு. இது தவிர ஆடிப்பூர உற்சவமும், நவராத்திரி உற்சவமும் உண்டு.

பக்தர்களின் நீண்டகால ஆசையை நிறைவேற்றும் விதத்தில் இக்கோயிலில் தங்கரதமொன்று பல லட்ச ரூபாய் செலவில் அழகுபட செய்யப்பட்டுள்ளது. தங்க ரதத்தில் புறப்படும் இறைவியின் உற்சவத்திருமேனிக்கு அணிவிக்க தங்கக் கவசம் செய்யப்பட்டுள்ளது. இறைவியின் தங்கத்தேருலா கண்கொள்ளாக் காட்சியாகும்.

1980இல் குடமுழுக்கு நடைபெற்ற இத்திருக்கோயில் இப்போது தனிப்பெருங்கோயிலாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்துச் சக்தித் தலங்களிலொரு ஒப்பற்ற பீடமாக விளங்கிவரும் இத்திருக்கோயிலின் படிகளில் ஏறாத கால்களில்லை. இத்தேவியின் திருமுன் நின்று வேண்டியழாத நெஞ்சில்லை. எப்போதும் கூப்பிய கைகளும், மகமாயி என்று முணுமுணுக்கும் வாயுமாய், பக்திப் பரவசத்துடன் கண்ணீர் ததும்பும் விழிகளுமாய் ஆயிரமாயிரம் பக்தப்பெருமக்கள் சூழ்ந்து நின்று போற்றும் சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் அளப்பரிய பெருஞ்சக்திக்கு ஈடிணையே இல்லையெனலாம்.

கிருட்டிணன் தூதுச் சருக்கம்

டாக்டர் த. அமிர்தலிங்கம்

பன்னிரெண்டு ஆண்டுக்காலம் வனவாழ்வு முடிந்து ஓராண்டுக்கால கரந்துறை வாழ்வும் முடிந்து, பாரோர் அறிய வெளிப்பட்ட பஞ்ச பாண்டவர்கள் தாம் இழந்த குரு நாட்டின் உரிமையை மீளப் பெறுவதற்காக உபப்பிலாவியம் என்ற இடத்தில் பாடிவீடு அமைத்துத் தங்கியிருக்கிறார்கள். அரவக்கொடியோன் துரியோதனன் அறம் மறந்து, முன்தான் உரைத்த வாக்கும் பிழைத்து, பஞ்சபாண்டவர்களுக்கு வீரம் இருந்தால் போர்புரிந்து அவர்களுக்கு உரிய நாட்டைப் பெற்றுக் கொள்ளட்டும் என தருமருக்குத் தூதாக நந்த உலூகன் என்ற முனிவரிடம் சொல்லி யனுப்பிவிடுகிறான். இங்கே ''தருமருக்குத் தூதாக நடந்த உலூகன்'' என்று ஏன் குறிப்பிடப்படுகின்றது என்றால் ''போரினை நாடாமல் சமாதான முறையிலேயே கேட்டு நாட்டுரிமைபெற வேண்டும்'' என்பது பஞ்சபாண்டவர்களில் அவர் ஒருவருக்கு மட்டுமே கருத்தாக இருப்பதனால்தான்.

வீமன் தன்னுடைய 'சத்துருகாதினி' என்ற கதாயுதத்தால் தான் முன்னம் செய்த வஞ்சினப்படி, துரியோதனனின் தொடையை பிளந்து உயிர் குடித்தும், பாஞ்சாலியின் ஆடையைக் களைந்து அவமானப்படுத்திய துச்சாதனனின் உயிர்குடித்தும், நாட்டை அடைவதையே விரும்புகிறான். அர்ச்சுனனும் அவ்வாறே தன்னுடைய காண்டீபம் எனும் வில்லின் ஆற்றலால் கர்ணனுடைய உயிரையும், மற்ற கௌரவர்களுடைய உயிரையும் உண்டு, நாட்டை அடைவதையே விரும்புகிறான். பாஞ்சாலியும் அவ்வாறே முன்னாளில் வஞ்சினம் உரைத்திருந்தாள் அல்லவா! ''கௌரவர்களின் இரத்தத்தால் கூந்தலை நீவி, அவர்களின் என்புகளால் தலைச்சிக்கெடுத்த பின்பே கூந்தலை முடிவேன்'' என்று, அவ்விதமே போரினால் நாட்டின் உரிமையை அடைய அவளும் விரும்புகின்றாள். நகுல சகாதேவர்களும் அவ்வாறே தோள்வலியினால் நாடடைவதையே விரும்புகிறார்கள். இவர்கள் அனைவருக்கும் மாறாகத் தருமர் ஒருவர் மட்டுமே சமாதான முறைகளால் தாம் இழந்த குருநாட்டின் உரிமையை அடைய விரும்புகிறார். அதனால் தான் அவர் பொருட்டுத் தூதுசென்று வந்த உலூக முனிவர், தருமரின் தூதுவர் என்று முன் குறிப்பிடப்பட்டார்.

தூதுசென்று வந்த உலூகர் ''வலுவிருந்தால் அமர்புரிந்து நாட்டினைப் பெற்றுக்கொள்ளட்டும்'' எனத் துரியோதனன் கூறியதைத் தருமரிடம் எடுத்துக் கூறிவிட்ட பிறகும்கூட அவருக்குப் போரினால் நாட்டினை அடைவது விருப்பமாக இல்லை; ஆகவே தான் தம் பொருட்டுத் துரியோதனனிடம் மீண்டும் தூது சென்று, இழந்த நாட்டுரிமையைச் சமாதான முறையிலேயே பெற்றுக் தரவேண்டும் எனக் கண்ண பெருமானிடம் கேட்டுக்கொள்கிறார். பஞ்சபாண்டவரில் நால்வர் போரினால் நாடு கொள்வதை விரும்ப, தருமர் மட்டும் ஏன் சமாதான முறையால் நாடு கொள்வதை விரும்புகிறார்? அவர் ஒரு கோழையோ? என்ற ஐயம் பலருக்கு உண்டாகக் கூடும். அவர் கோழையல்ல. பீமனுக்கும் அர்ச்சுனனுக்கும் எவ்விதத்திலும் சளைத்ததல்ல அவருடைய வீரம் என்பது, பாரதப்போர் நடைபெறும் சமயத்தில் அனைவருமே காணப்போவதுதான். அவர் பொறுமையின் மறுவடிவமானவர்; அருளே வடிவமானவர், ஆகவேதான் அவர் மதித்து வணங்கும் வீடுமர், திருதராட்டிரர், விதுரர், துரோணர் முதலான பெரியவர்களையும், உறவினர்களையும், தம்குலத்தில் பிறந்த துரியோதனர் முதலான தம்பிகளையும் கொன்று அரசுரிமை கொள்வதை அவர் விரும்பவில்லை, ஆகவேதான் அருள் வெள்ளம் பெருகக் கண்ணனிடம்கேட்டு கொள்கிறார்.

''முந்தூர் வெம்பணிக் கொடியோன்
மூதூரில் நடந்துழவர் முன்றில்தோறும்
நந்தூரும் புனல்நாட்டின் திறம்வேண்டு
நாடொன்று நல்கான் ஆகில்
ஐந்தூர்வேண்டு, அவையிலெனில் ஐந்திலம் வேண்டு
அவைமறுத்தால் அடுபோர் வேண்டு
சிந்தூரத் திலகநுதற் சிந்துரத்தின்
மருப்பொசித்த செங்கண்மாலே''

(கிருட்டிணன் தூது., 11)

''அன்றைக்குக் கம்சன் ஏவிய குவலயாபீட மென்னும் யானையின் தந்தத்தை ஒடித்து வென்றவர் ஆகியதிருமாலே! சிந்தூரப் பொட்டு எப்போதும் திகழும் நெற்றியை யுடையவரா கிய திருமாலே!'' என்பதாக அவரை அழைத்து பெருமைப் படுத்தும் தருமர், கண்ணபெரு மானைத் துரியோதனனிடத்தில் தூதாகப் போய் தமக்கு உரிமையுடைய நாட்டைத் தரு மாறு கேட்கச் சொல்லுகிறார், துரியோதனன் நாடு தர மறுத்து விட்டால், ஐவருக்கும் ஆளுக் கொரு ஊராக ஐந்து ஊர்களையேனும் தர வேண்டுகிறார். துரியோதனன் அவைகூட தரா விட்டால் ஐவருக்கு ஐந்து வீடுகளையேனும் தரவேண்டுகிறார்., ''அதுவும் தராவிட்டால் போரை வேண்டு! கண்ணா! ''என்று போரைத் தருமர் அரைகுறையாக வேண்ட, அதுவரை யிலும் அடக்கமுடியாத கோபத்தை அடக்கிக் கொண்டிருந்த வீமன், அதற்குமேல் பொறுக்க முடியாமல் பொங்கி எழுகிறான்.

கோபத்தில் வீமனின் உதடுகள் துடிக்கின் றன! கண்ணபெருமானை நோக்கி ''ஞாலமெல் லாம் பூத்தோனே! பூந்தவிசிற் பூவைபுணர் மணிமார்பா! புன்மையாவும் தீர்த்தோனே'' என்பதாகப் புகழ்ந்து'' ஊனமிலான் மானமிலா துரைப்பதற் கென் செய்வேன்'' என்று ஆத்திர மாகச் சொல்லுகிறான். அண்ணன் தருமன் மேல் வீமனுக்கும் மற்ற தம்பிகளுக்கும் மதிப்பு மிகுதி. அவருடைய கட்டளையின்படிதான் பாஞ்சாலியின் துகிலை உரிந்து துரியோதனன் கேவலப்படுத்தியபோதும் கூட பொறுமை காட்டி, தருமருக்கு வாய்த்த தம்பிகள்போல் தாரணியில் பிறருக்கு வாய்க்குமோ என்று பலரும் புகழுமாறு தருமருக்குப் பெருமைகூட்டி னார்கள். ஆனால் இப்போது இனியும் பொறுக்க முடியாது என்ற நிலைக்கு வந்து, தம்பிகளில் வீமன் முதலில் எழுந்து ''ஊனமி லான் மானமிலா துரைப்பதற்கென் செய் வேன்'' என்று ஆத்திரமாகக் கூறுகின்றான். அப்போதும் அண்ணன் தருமன் குற்றமற்றவன் தான் என்பதாக 'ஊனமிலான்' என்று வீமன் உரைப்பது குறிப்பிடத்தக்கது.

கண்ணனை நோக்கிப் பேசிய வீமன் இப் போது தம் அண்ணனையே நோக்கிப் பேசு கிறான். ''அன்றைக்குப் பாஞ்சாலியின் துகிலைப் பலரறிய பாவி துச்சாதனன் களைந்து அவ மானப்படுத்திய போது ''வேண்டாம் கோபம்! பொறுமை பொறுமை'' என்றுகூறி எங்களை எல்லாம் தடுத்து உலகுள்ளளவும் மாறாத பழியை உனக்கும், எங்களுக்கும் உண்டு பண்ணி விட்டாய்! 13 ஆண்டுக் காலம் கொடிய வன வாழ்க்கை வாழ்ந்துவிட்ட பிறகும்கூட வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நினைவே இல்லை உனக்கு! நமக்கு உரிமை உடைய நாடு மட்டுமல்ல., துரியோதனனுடைய நாட்டை யும் நொடியில் வென்று நானுனக்குத் தருகி றேன். பாவம் 'துரியோதனன்! நாடின்றி என் செய்வான் என்று வருத்தப்படுகிறாயா? வருத் தம் கொள்ளாதே! அவனைக் கொன்று வானு லகத்தை அவன் ஆளுமாறு அவனை அனுப்பி வைத்து விடுகிறேன்! சொல் ஒரு வார்த்தை'' என்று வீமன் தருமனை வேண்ட, அப்போதும் தருமன் பொறுமையே பூண்டவனாகி, ''குற்ற மது பார்க்குங்கால் சுற்றமில்லை., கண்மலரில் கைபடாதோ., அன்றைக்கு ஏதோ கோபத்தில் சொன்னதை வஞ்சினம் என்பதாக நெஞ்சத் தில் வைத்துக் கொள்ளலாமா?'' என்று வீம னுக்கு அறிவுரைகள் கூறுகின்றான்., அப்போது வீமன், ''அரவுயர்த்தோன் கொடுமையினும் முரசுயர்த்தோய் உனதருளுக்கு அஞ்சினேன்'' என்பதாகக் கூறுகிறான்., பாம்புக் கொடி கொண்டவன் துரியோதனன். முரசத்தைக் கொடியாகக் கொண்டவன் தருமன், துரியோத தன் புரிந்த கொடுமைகளை எல்லாம் கூட பொறுத்துக் கொண்டு விடலாம். ஆனால் தரு மனே! உன்னுடைய எல்லை கடந்த பொறு மையைப் பொறுத்துக்கொள்வது ஆகாது என் பதே வீமன் வாக்கில் உள்ள கருத்தாகும்.

அப்பொழுது கண்ணபெருமான் ''முன் பிறந்த அண்ணன், அரச தருமத்தை எடுத் துரைத்தால் அது கேளாமல் அடம் பிடித்தல் ஆகாது'' என்பதாகக் கூறி, வீமனைக் கோபம் கொள்ள வேண்டாமென வேண்டி, அமரச்செய் கிறார். அப்போது அர்ச்சுனன் எழுந்து தன் கருத்தைக் கூறுகிறான். ''கண்ணா! நீ தூது போனாலும், அண்ணன் தருமன் கருத்தின்படி நீ நாடு கேட்டுப் பின் ஊர்கேட்டு, வீடுகேட்டா லும் கூட அறிவற்றவனாகிய துரியோதனன் இணங்கமாட்டான். உவர் நிலத்தில் நெல் விளையாது. நாகப் பாம்பிற்கு அமிர்தத்தை அருந்தக் கொடுத்தாலும் அது நஞ்சைக் கொடுக் குமே தவிர, நல்லதைச் செய்யாது! தேவர்கள் ஆனாலும், அசுரர்கள் ஆனாலும், இன்னும் சொல்லப்படுகிற எவரானாலும் எதிர்த்து வரட்டும். என்கையில் காண்டீபம் இருக்கிறது. தொலைத்துவிடுகிறேன்.''

அர்ச்சுனன் இப்படி கூறி முடித்தவுடன் நகுலனும் எழுந்து, ''தருமம் தருமம் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார் தருமர் ஆகிய எங்கள் அண்ணா! அரச தருமத்திலே ஆண்மையும் ஒன்றல்லவா! நாம் துரியோதன னிடத்தில் நாடும், ஊரும், வீடுமாகக் கெஞ்சி வீணே காலத்தைக் கடத்தி உலகத்தார் பழிச் சொல்லுக்குஆளாவதைவிட தோள்வலிமையால் வென்று நாடாள்வதேசரி, 13 ஆண்டுக்காலம் கஷ்டப்பட்டுவிட்ட தம் உடன்பிறந்தார்களா கிய பாண்டவர்களுக்கு அவர்களுடைய நாட் டைக் கொடுத்து விடுவோம் என்று,தானே உண ராத துரியோதனன், கண்ணா! நீ தூதுபோய் உரைப்பதனாலா உணரப்போகிறான்'' என்ற

தன் கருத்தைத் தெரிவித்து அமர, கண்ண பெருமான் சகாதேவனுடைய கருத்தைக் கூறு மாறு கேட்கிறார்.

எல்லோரையும் போலத் தன் கருத்தை எளிதாகச் சொல்லிமுடித்து விடவில்லை சகா தேவன். ஆரூடக்கலையோடு ஆண்டவனின் தத்துவ உண்மைகளையும் தெளிந்தவனாகிய சகாதேவன் எழுந்து 'கண்ணா! தருமன் உரைத்தவாறு நீ தூது போனாலும் போகாமல் இருந்தாலும் என்ன? துரியோதனன் நாடு கொடுத்தாலும் கொடுக்காமல் போனாலும் என்ன? பாஞ்சாலி கூந்தல் முடித்தாலும் முடிக் காவிட்டாலும் எனக்கென்ன! நான் கருத்து சொல்ல, அந்தக் கருத்தின்படிதான் எல்லாம் நடக்க இருக்கிறதா என்ன? உன் திருவுளத்தில் நீ என்ன நினைத்திருக்கிறாய் என்பது எனக் குத் தெரியும். அந்தக் கருத்தே எனக்கும் கருத்துமாகும்.''

இப்படி சகாதேவன் சூழ்ச்சி வல்ல கண்ண னிடம் சூழ்ச்சியாகவே தன் கருத்தையும் சொல்ல கண்ணனும் அவனைமட்டும் தனி யொரு இடத்திற்கு அழைத்துப் போய் ''என்ன நான் திருவுளத்தில் நினைத்திருக்கிறேன்! எல் லாம் எனக்குத் தெரியும் என்கிறாயே! சொல்'' என சகாதேவன், கண்ணனின் மனக்கருத்தை

''நீபா ரதஅமரில் யாவரையும் நீறாக்கிப்
பூபாரம் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா
கோபாலா! போரேறே! கோவிந்தா! நீயன்றி
மாபா ரதமகற்ற மற்றார்கொல்
வல்லாரே''

என்று கூறுகின்றான். ''பாரதப் போரை நடத் துவதற்கென்றே நீ அவதரித்திருக்க, நடக்க இருக்கும் போரைத் தடுக்க வல்லவர் யார்? அர்ச்சுனனைக் கொன்று, பாஞ்சாலியின் கூந் தலையும் அரிந்து, உன்னையும் அங்கிங்கு நக ராதபடி கட்டிப்போட்டுவிட்டால், நடக்க இருக்கும் போரைத் தடுத்துவிடலாம்'' என்று மேலும் சகாதேவன் வினயமாகக் கூறக் கண்ண னும் ''சகாதேவா! நீ சொல்லியதைப் போல் போருக்குக் காரணமாக இருக்கின்ற அர்ச்சுன னைக் கொல்வதும், பாஞ்சாலியின் கூந்தலை அரிந்து விடுவதும் கூட சாத்தியமாகலாம். ஆனால் என்னைக் கட்டுவது உனக்குச் சாத் தியம் ஆகுமோ?'' என்று கேட்டபடியே பதினாறாயிரம் உருவங்கள் எடுத்து, அங்கிங் கெனாதபடி எல்லா இடத்திலும் வியாபித்து நிற்கிறான். ஆண்டவன் அன்பெனும் பிடியில் அகப்படுவன் தானே! சகாதேவனும் அன்பால் திருமாலை வணங்கி அப்பதினாயிரம் உருவங் களுக்கும் மூலமான உருவத்தை அன்பினால் தியானித்து தன்மனமாகிய கயிற்றினால் கட்டி விட, பூதேவரும் மாதேவரும் தேடிக் காணா மலரடியோனாகிய கண்ணன் ''சகாதேவா! நின் ஆற்றலை நான் அறிவேன், உலகத்தவர்க் கும் உன் ஆற்றலைத் தெரிவிக்கவே, என்னைக் கட்டுதல் உனக்கு ஆமோ என்று கேட்டுக் கட்ட வைத்தேன், கட்டினை அவிழ்த்துவிடு'' என்று கேட்டுக் கொள்கிறார்.

அப்போது சகாதேவனும் நான்வேண்டும் இந்த வரத்தைத் தந்தால்தான் கட்டவிழ்த்து விடுவேன் என்று கூறி, ''பாரதப் போரில் பாண் டவர் ஐவரையும் கண்ணா நீ உன் அருட்பார் வையால் ஒரு ஊறும் நேராவண்ணம் காக்க வேண்டும்'' என வேண்டிக் கொள்கிறான்.

''அன்பாலின் றென்னை யறிந்தே பிணித்
தனை நன்று
என்பா தந்தன்னை இனிவிடுக என்று
உரைப்ப
வன்பார தப்போரில் வந்தடைந்தேம்
ஐவரையும்
நின்பார்வை யாற்காக்க வேண்டும் நெடு
மாலே

(கிருட்டிணன் தூது, 39)

என்ற இப்பாடல் சகாதேவன் தம் அண்ணன் மார்கள் மேல் கொண்டுள்ள பாசத்தைப் புலப் படுத்தி நம் கண்ணில் நீரை வரவழைக்கும். கண்ணனும் அவ்வாறே காப்பதாக வரம் அளித் துச் சகாதேவனிடம் அங்கு அந்தத்தனியிடத் தில் அவர்கள் பேசிக் கொண்டதையும், நடந்த நிகழ்ச்சிகளையும் பிறருக்கு அறிவிக்க வேண்டா மென ஆணையிட்டு ஆலோசனை நடக்கும் இடத்திற்கு அழைத்துவந்து இப்போது உன் கருத்தைக் கூறு எனக் கேட்டுக் கொள்கி றான். அப்போது தருமருடன் அமர்ந்திருந்த பாஞ்சாலியை நோக்கிச் சகாதேவன் ''எனக்கும் சமாதானமாகப் போவதுதான் சரியெனப்படு கிறது'' என்கிறான்.

கண்ணனிடத்தில் தனியாகப் பேசிய போது, போரே கண்ணனின் எண்ணமாவதைத் தெரிவித்து போரில் ஐவரையும் காத்தல் வேண் டும் எனக் கேட்டுக்கொண்டவனாகிய சகா தேவன் பாஞ்சாலி யிடத்தில் ''நான் சமா தானமே விரும்புகிறேன்'' என்று கூறுவது வேடிக்கை அல்லவா! கண்ணபெருமானும் உடனே ''தருமருக்கு சமாதானம் விருப்பம். சகாதேவனுக்கும் அதுவே விருப்பம். எனக்கும் சமாதானமாகப் போவதுதான் சரி என்று ப்டு கிறது.'' என்று கூறுவது வேடிக்கையிலும் வேடிக்கை அல்லவா! கண்ணனின் மனமாயை அறிய வல்லார் யார்? அதனால் தான் மாயை வல்லானின் மாயை அறியாத பாஞ்சாலி அழத் தொடங்குகிறாள்.

சாலக்கனகன் தனிமைந்தனை முனிந்த
காலத்தவனறைந்த கற்றூணிடை வந்தாய்

மூலப்பேரிட்டழைத்த மும்மதமால்
யானைக்கு
நீலக்கிரிபோல் முன்நின்ற நெடுமாலே
(கிருட்டிணன் தூது.,43)

சுற்றைக் குழல்பிடித்துக் கண்ணிலான்
பெற்றெடுத்தோன்
பற்றித் துகிலுரியப் பாண்டவரும் பார்த்
திருந்தார்
கொற்றத் தனித்திகிரி கோவிந்தா நீயன்றி
அற்றைக்கு என்மானம் ஆர்வேறு
காத்தாரே!
(கிருட்டிணன் தூது,44)

மன்றில் அழைத்தெனக்கு மாசளித்த
மன்னன்பாற்
சென்று தமக்கைந்தூர் திறல்வீரர் பெற்றி
ருந்தால்
அன்று விரித்த வருங்கூந்தல் வல்வினை
யேன்
என்று முடிப்பதினி எம்பெருமான்
என்று அழுதாள்
(கிருட்டிணன் தூது45)

'பிரகலாதனுக்கு அருள் புரிந்தாய், ஆதிமூலமே என்று அலறிய யானைக்கு அருள்புரிந்தாய்! அன்றைக்கு எனக்கு அவையறிய ஏற்பட்ட அவமானத்தின் போதும் கூட நீ தான் அருள்புரிந்து என்மானம் காத்தாய்! ஐந்து ஊரைக் கெஞ்சிக் கேட்டு அதுபோதும் என இவர்கள் எல்லாரும் இருந்துவிட்டால், என்றைக்கு என்னுடைய கூந்தலை நான் முடிப்பேன்?'' என்று பாஞ்சாலி கண்ணனைக் கேட்டு அழ, கண்ணனின் தம்பியாகிய சாத்தகி ''இது பொறுக்க முடியாது, இனி போர் ஒன்றே வழி'' என்று கூறுகிறான். ''திரௌபதியின் கூந்தலை அரிந்துவிட்டால் போர் நடக்காமல் தடுத்துவிடலாம். அவிழ்ந்த அவள் கூந்தல் இருக்கும் வரை போரைத்தடுக்க முடியாது'' எனச் சகாதேவன் முன்னம் கண்ணனிடம் தனி இடத்தில் உரைத்ததன் காரணம் இப்பொழுது புரிகிறதல்லவா!

ஆகவேதான் பாஞ்சாலியின் அவிழ்ந்த கூந்தலே காரணமாகப் போர் நடப்பதை இனி யாராலும் தடுக்க முடியாது என்பதனாலும், பாஞ்சாலி அழுவதை இனியும் பார்த்துக்கொண்டிருத்தல் ஆகாது என்பதாலும் கண்ணபெருமான்.

''தொல்லாண்மைப் பாண்டவர்க்குத் தூது
போய் மீண்டதற்பின்
நல்லாயுன் பைங்கூந்தல் நானே முடிக்கின்
றேன்
எல்லாரும் காணஇனி விரிப்ப தெண்ணரிய
புல்லார்தம் அந்தப்புர மாதர் பூங்குழலே''
(கிருட்டிணன் தூது, 49)

என்று கூறி, அழாதே எனத் தேற்றுகிறார்.

போர்தான் வழி என்று கண்ணனேமுடிவு செய்துவிட்ட பிறகு, துரியோதனன் இடத்தில் ஏன் கால்கள் நோகத் தூதுபோகவேண்டும்? இளங்கோவடிகள் தம் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் கண்ணன் தூது போகிய சிறப்பினை ஆய்ச்சியர் குரவையிலே அமைத்து

''மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார்
வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால்நாற்றிசை
யும் போற்றப்
படர்ந்து ஆரணம் முழங்கப் பஞ்சவர்க்குத்
தூது
நடந்தானை ஏத்தாதா நாளென்ன நாவே
நாராயணா என்னா நாளென்ன நாவே''

என்று போற்றவா கண்ணன் தூதுபோகிறார்? கண்ணன் தூது தருமரின் விருப்பப்படி சமாதானத்தால் நாடு பெறுவதற்காக அல்ல. கண்ணனின் எண்ணப்படி யாவரையும் நீறாக்கிப் பூபாரத்தைத் தீர்க்கும் பொருட்டுத்தான்! பாஞ்சாலியின் அவிழ்ந்த கூந்தலை அழகுபடுத்தி முடிந்து வைப்பதற்குத்தான். அதற்குக் கண்ண பெருமானின் தூது எப்படியெல்லாம் பயன் பட்டது என்பதைஅடுத்த இதழில் காண்போம்.

குசேலோபாக்கியானத்தில் குடும்பக் கட்டுப்பாடு

வருவாய்மிக் குடையவராய் அளவிறந்த
செல்வத்தின் வளமுள் ளார்க்கும்
ஒருவா அன்பொரு மகவை எண்ணியவா
றளித்தோம்பல் ஒவ்வாதாகும்
பொருவாவெங் கடுங்கூற்றாய்க் கொடுவிடமாய்
வடவையாய் புகுந்து வாட்டத்(து)
இருவாநின் றிடும் மிடியிற் பன்மகவுள்
ளாள் செய்கை எற்றே எற்றே.

(குசேலோபாக்கியானம். 79)

பராசக்திப் பாமாலை

எதிரொலி விஸ்வநாதன்
சென்னை

(1)

தேடி உன்னைச் சரணடைந்தேன் அம்பிகையே!
சிந்தனையில் இனிப்பவளே அம்பிகையே!
பாடி உன்னைப் பரவுகின்றேன் அம்பிகையே!
பாட்டில்மனம் களிப்பவளே அம்பிகையே!
கோடிமலர் தூவுகிறேன் அம்பிகையே!
கும்பிடுவோர் குறைதீர்ப்பாய் அம்பிகையே!
வீடு நன்கு விளங்கிடவே அம்பிகையே!
விளக்கேற்றி வைத்திடுவாய் அம்பிகையே!

(2)

அமரர்க்கும் முனிவர்க்கும் ஆதியம்மா!
அகிலாண்ட நாயகியே சோதியம்மா!
சமயபுரம் தனில் நீயே மாரியம்மா!
சங்கடங்கள் தீர்க்கும் உப காரியம்மா!
குமரனுக்கு வேல்தந்தாய் சூலியம்மா!
கும்பிடவே நாள்தந்தாய் காளியம்மா!
இமயமலை தவமிருக்கும் அன்னையம்மா!
என்றும்நீ குமரியிலே கன்னியம்மா!

(3)

காளி சிவகாமி அபி ராமவல்லி!
காசிவிசா லாட்சி அலங்காரவல்லி!
சூலினியே சுந்தரியே சூரவல்லி!
சுமங்கலியே அந்தரியே வீரவல்லி!
நீலி பரா சக்தி உமை வேதவல்லி!
நீலாஞ்சனீயே கௌரி கீதவல்லி,
மாலினியே பகவதியே நாகவல்லி!
மங்களத்தைத் தந்திடுவாய் ஏகவல்லி!

(4)

மின்னாயிரம் கோடி வடிவேந்தியே!
மீனாயிரம் கோடி அணியேந்தியே!
பண்ணாயிரம் கோடி புகழேந்தியே!
பாசங்கு சம்பூங் கணை ஏந்தியே!
கண்ணாயிரம் பெற்ற கரும்பேந்தியே!
கவினாயிரம் பெற்ற உருவேந்தியே!
எண்ணாயிரம் கோடி பெயரேந்தியே!
எலுமிச்சம் கனிபோல எனை ஏந்துவாய்!

(5)

கார்கொண்ட கூந்தலில் மல்லிகையும்
கண்கொண்ட நெற்றியில் குங்குமமும்-
தார்கொண்ட மேனியில் பூமஞ்சளும்-
தங்கத்தில் மாணிக்க மூக்குத்தியும்-
சீர்கொண்ட வதனத்தில் புன்னகையும்-
செங்கையில் மணிநாகக் கங்கணமும்-
போர்கொண்டு வந்தாலும் உனைக்காணும்
புண்ணியம் நான்பெறவே வேண்டுமம்மா!

(6)

அருள்வெளியில் ஆனந்த உருவாகினாய்!
அகிலநிலை முழுதாகிக் கருவாகினாய்!
இருள்வெளியே அறியாத ஒளியாகினாய்!
எத்திக்கும் நிறைகின்ற வெளியாகினாய்!
கருணையிலே களங்கமிலா மழையாகினாய்!
கற்றவர்க்கும் விளங்காத இழையாகினாய்!
மருள்நெறியே சேராமல் எனை ஆக்குவாய்!
மாதாவே உன்பாத மலராக்குவாய்!

(7)

கலியுகத்தில் கண்கண்ட கருணாம்பிகே!
கல்யாண குணங்கொண்ட கமலாம்பிகே!
நலிகின்றோம் கவலையினால் புவனாம்பிகே!
நயனங்கள் மூன்றுடைய வடிவாம்பிகே!
புலிவாழா வேற்காட்டு சுகுணாம்பிகே!
பூரணியே நாரணியே சொர்ணாம்பிகே!
துளிப்பார்வை ஒளிபோதும் துர்க்காம்பிகே!
துயரங்கள் தூளாகும் சௌடாம்பிகே!

(8)

அருங்கலைகள் பல அறிந்தும் ஆரணியே!
ஆரணங்கள் பல படித்தும் பூரணியே!
வருந்துமனம் ஓயவில்லை வாரணியே!
வாழும்நெறி புரியவில்லை தாரணியே!
விரும்பி உனை நினைப்பவர்க்கே நாரணியே!
வேண்டியதைத் தருபவளே காரணியே!
மருந்தாகி இனிப்பவளேமாமணியே!
மனக்கவலை தீர்த்திடுவாய் தூமணியே!

(9)

அருந்திவிட்ட நஞ்சினையே அமுதாக்கினாய்!
அழுதுநின்ற பாலனுக்கே அன்னையாகினாய்!
துறந்துநின்ற வள்ளலாரின் பசி போக்கினாய்!
தோடெடுத்து விண்வெளியில் மதியாக்கியாய்!
பிறந்த ஊமைச் சிறுவனையே கவியாக்கினாய்!
பெய்என்றே நவமணியை மழையாக்கினாய்!
மறந்துவிட்ட அடியவனை ஆட்கொள்ளவே
மாதாவே இன்றைக்கு மனம் கொள்ளுவாய்!

(10)

எண்ணமெல்லாம் உன்னிடத்தில் காமாட்சியே!
எல்லாமே நீதானே மீனாட்சியே!
கண்ணிழந்த குழந்தை கமலாட்சியே!
கதறுவதைப் பாராயோ கருணாட்சியே!
இன்னமும் கண் பாராமல் இந்திராட்சியே!
இருந்திடுதல் உனக்கழகோ மந்திராட்சியே!
என்னுயிரை இயக்குகின்ற நீலாட்சியே!
இவ்வுலகம் உனதாணை அரசாட்சியே!

கச்சபேஸ்வரர் கோயில்

எனப்படும்

ஆலக்கோயில்

பி. டி. பாலாஜி,
சென்னை

தற்போது திருக்கச்சூர் என வழங்கப்படும் இச் சிறிய கிராமமானது சென்னைக்குத் தென் மேற்கே 48 கி.மீ. தூரத்தில் செங்கற்பட்டு தாலுக்காவில் அமைந்துள்ளது. இவ்விடத்திலிருந்து 2 கி.மீ. தூரத்தில் தான் புகழ்பெற்ற பல்லவர்களது சிங்கபெருமாள் குகைக் கோவில் அமைந்துள்ளது.

வாதனப் போக்குவரத்து ஏதும் இல்லாத இந்த கிராமத்தைப் பச்சை நிறவயல் விளை நிலங்கள் சூழ்ந்துள்ளது. இவற்றிற்கு தண்ணீரானது திருக்கச்சூர் ஏரியிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்த ஏரிக்கு எதிரில் தான் கச்சபேஸ்வரர் கோவிலானது 260’ x 255’ அடி பரப்பளவில் கிழக்கு திசையை நோக்கிஅமைந்துள்ளது. கிராமத்துக்கு வடக்கு திசையில் 200 அடி உயரமுள்ள ‘அவுடதகிரி’ என்னும் மலையுள்ளது. இந்தமலையில் மூலிகை செடிகள் இருந்ததால் இதை ‘அவுடதகிரி’ என வழங்கியுள்ளனர். இதனால் தான் இந்த மலையில் அமைந்துள்ள மற்றொரு சிவன் கோவிலுக்கு மருதீஸ்வரர் எனப்பெயர் வழங்கப்படுகிறது. இந்த கோவிலுக்கும் கச்சபேஸ்வரர் கோவிலுக்கும் இடையே உள்ள தூரம் ஒரு கிலோ மீட்டர் ஆகும். இக் கச்சபேஸ்வரர் கோவிலானது சுந்தரால் பாடல் பெற்றது ஆகும்.

பழங்கால மரபுக்கு ஏற்ப இக்கிராம மக்களின் வாழ்க்கை, பொருளாதாரம் முதலியன யாவும் இந்த இரண்டு கோவில்களில் கச்சபேஸ்வரர் கோவிலையே சார்ந்து இருந்தது. ஆகவே தான் இவ்விடத்தில் கிடைக்கும் மொத்தம் 88 கல்வெட்டுகளில், 85 கல்வெட்டுக்கள் கச்சபேஸ்வரர் கோவிலில் காணப்படுகிறது. இவையாவும் பலவிதமான முக்கிய நிகழ்ச்சிகளையும் அல்லாது இக் கோயிலுக்கு அளிக்கப்பட்ட பலவகையான தானங்களையும் விரிவாகக் கூறுகிறது. மொத்தமாக எடுத்துக் கொண்டால் செங்கற்பட்டு தாலுக்காவிலேயே அதிகக் கல்வெட்டுக்கள் உள்ள இடம் திருக்கழுக்குன்றம். அதற்கு அடுத்தபடியாக அதிகக் கல்வெட்டுக்கள் உள்ள இடம் இந்த திருக்கச்சூர் கிராமமாகும். இதிலிருந்து நன்கு புரிந்து கொள்ளலாம் இந்த கிராமமானது சோழர்களது காலம் முதற் கொண்டே ஒரு ஸ்தலமாக மட்டும் அல்லாது ஒரு முக்கிய அரசியல் பீடமாகவும் இருந்தது என்பதை.



திருக்கச்சபேஸ்வரர் ஆலயத்தின் முன்னுள்ள 16 கால் மண்டபம்.

இக்கோவிலில் கிடைக்கும் கல்வெட்டுக்களின் விவரம்:

	கல்வெட்டுக்கள்
சோழர்	43
பாண்டியர்	26
தெலுங்குச் சோழர்	7
சம்புவராயர்	3
விஜயநகரர்	3
காடவராயர்	1
மற்றவை	2
மொத்தம்	85

தற்போது இக்கோவிலிலுள்ள சுவாமி, அம்மன் முறையே கச்சபேஸ்வரர், ஆஞ்சனாட்சி என்று அழைக்கப்பட்டாலும், பல்லவர் காலத்தை சார்ந்த தேவாரத்தில் சுவாமியின் பெயர் விருந்திட்டநாதர், அம்மை பெயர் உமையம்மை என்றே குறிக்கப்பட்டுள்ளது. அதேபோல இக்கிராமத்தின் பெயரை ‘கச்சூர்’ என்றே இந்நூல் அழைக்கிறது.

சேக்கிழாரின் திருதொண்டர் புராணத்திற்குஉரை எழுதிய சி.கே.சுப்பிரமணிய முதலி

யார், இவ்வூரில் (திருக்கச்சூர்) தான், விஷ்ணு கச்சபமாக (ஆமை) உருவெடுத்து சிவனை வணங்கினார் என்றும், அதனால் இந்த இடம் கச்சப ஊர் என போற்றப்பட்டு பிற்காலத்தில் கச்சூர் என மருவலாயிற்று எனவும் கூறியுள்ளார். இதை உறுதி படுத்தும் வகையில் விஷ்ணு ஆமை வடிவத்தில் சிவனை வணங்கும் காட்சியினை கதை போன்று சிற்பங்களாக விநாயகர் சன்னதி மண்டபத்தில் செதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்லவர்கள் காலத்தில் கச்சூர் என்று வழங்கப்பட்ட இவ்விடத்தை பிற்காலத்தில் நித்தவிநோத நல்லூர் (கச்சூரான நித்த விநோதநல்லூர்) என்றும், அழைக்கப்பட்டதை சோழர்கள் காலம் முதற் கொண்டு விஜயநகர பேரரசர்கள் காலம் வரை கிடைக்கும் அனைத்துக் கற்சாசனங்களும் உறுதி படுத்துகின்றன. இவ்வாறு இந்தகிராமத்திற்கு மற்றொரு சிறப்பு பெயர் வைத்ததற்கான காரணம்என்னவென்று தெரியவில்லை. தற்போது திருக்கச்சூர் என்று அழைக்கப்பட்டாலும் இதில் 'திரு' என்பது மரியாதை நிமித்தம் எல்லா தெய்வ ஸ்தலங்களின் பெயர்களோடும்இணைந்து வருவதாகும்.

இதே போன்று கோவிலின் பெயரிலும் மாற்றம் பிற்காலத்தில் ஏற்பட்டுள்ளது. தேவாரம் இவ்விடத்தைப் பற்றி கூறுகையில் 'ஆலக் கழனிப் பழன கச்சூர்' என்கிறது. இதிலிருந்து நன்கு விளங்கும் இவ்விடத்தில் அதிக அளவில் ஆலமரங்கள் இருந்தனஎன்பது. அதனால் தான் ஆலமரம் ஸ்தல விருட்சமாகியது. அது போலவே கோவிலும் ஆலக் கோவில் என வழங்கப்பட்டது. எல்லா கல்வெட்டுக்களிலும் இக்கோவில், ஆலக்கோவில் என்றே குறிப்பிடப் பட்டுள்ளது.

இக்கோவிலின் பெருமையினை கீழ்காணும் சுந்தரர் தேவாரத்தின் வரிகள் சிறப்பிப் பதாக உள்ளன.

''கோலக் கோயில் குறையா கோயில் குளிர்
பூங்கச்சூர் வடபாலை
ஆலக்கோயில் கல்லால நிழற்கீ ழறங்க
ளுரைத்தவம்மானே

—தேவாரம்.

அதாவது வேதத்தின் உட்பொருள் புரியாது மயங்கிய நிலையில் சைவ மத முனிவர்கள் (சனகர், சனந்தனர், சனாதனர், சனர்குமாரர்) இருந்த போது, சிவபெருமான் அவர்களுக்கு ஆல மரநிழலில் வேதத்தின் உட்பொருள் கூறி அவர்களின் மயக்கத்தை தீர்த்தார். இந்நிகழ்ச்சியானது இத் திருக்கச்சூரிலேயே நடந்ததாக கொள்ளலாம். ஏனென்றால் முன்னரே கூறியவாறு, தேவாரமே சொல்கிறது ஆலமரங்கள் நிறைந்தது திருக்கச்சூர். அது மட்டும் அல்லாது ஸ்தல விருட்ஷமும் ஆலமரமே ஆகும். இதற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காகவே இக்கோயிலில் இந்நான்கு முனிவர்களுக்கும் தனித்தனியே நான்கு வெண்கலச் சிலைகள் உள்ளன. அம் முனிவர்களுக்கென்று தனியாக ஒரு நாள் சிறப்பு விழா கொண்டாடப் படுகிறது. இந்த ஸ்தலம் இப்புனித அரிய சிறப்புகள் பெற்றிருப்பதனாலேயே சுந்தரர் இங்கு வந்திருக்கலாம்.

சுந்தரரது திருக்கச்சூர் விஜயத்தை ஏயர்கோன் கலிகாமநாயனார் புராணத்தில் சேக்கிழார் தெளிவாக விவரித்து இருக்கிறார். சுந்தர மூர்த்தி நாயனார் தன்னுடைய தொண்டர்களுடன் திருக்கச்சூர் வந்தடைந்தனர். அது பகல் பொழுது ஆதலால் அவர்கள் மதிய உணவு கிடைக்காமல் பசியால் வாடினர். தனது தொண்டர்களின் துயரத்தை காணப் பொறாமல் சிவபெருமான், அந்தணர் உருவில் இவ்வூரிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் பிச்சை எடுத்து, அதை சுந்தரருக்கும் அவருடைய தொண்டர்களுக்கும் இக்கோவிலில் அளித்து அவர்களின் பசித்துயரத்தை நீக்கி மறைந்தார். தனக்கு உணவு அளித்தவர் சிவ பெருமான் என்பதை அறிந்த சுந்தரர் இக் கோவிலுள்ள சிவனை புகழ்ந்து பாடினார். இதனால் தான் இங்கு சுவாமி 'விருந்திட்ட நாதர்' என்றும், உற்சவ மூர்த்தி 'அமுத தியாகராஜர்' என்றும் அழைக்கப்பட்டார். ஆனால், இக்கோயிலிலுள்ள அனைத்துக்கல் வெட்டுக்களும் சுவாமியை 'ஆலக் கோயிலுடைய நாயனார்' என்றே அழைக்கின்றன.

கி.பி.1535 (கடைசியாக கிடைக்கும் கல்வெட்டின் தேதி)க்குப் பிறகே சிவன் கச்சப வடிவில் சிவனை வழிபட்ட நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் சுவாமியின் பெயரானது கச்சபேஸ்வரர் என்றும் கோவிலின் பெயர் ஆலக்கோவிலிருந்து கச்சபேஸ்வரர் கோயில் என்றும் மாறி வழங்கப்பட்டது என்பது தெள்ளத் தெளிவாகிறது.

இச்சிறப்பினை பெற்ற இக் கச்சபேஸ்வரர் கோயிலானது மூலவர் சன்னிதியும், அம்மன் சன்னதியும் அல்லாது பிள்ளையார், முருகர், நடராசர், பைரவர், விருந்திட்டஈசர் ஆகியோருக்கு தனித்தனி சன்னதிகளும் மற்றும் மகாமண்டபம், உற்சவ மண்டபம் ஆகியவைகளும் கொண்டுள்ளது. இக்கோவிலுக்கு இந்திர தீர்த்தம், கூர்ம தீர்த்தம் என இரு குளங்கள் உள்ளன.

தற்போதுள்ள இக்கோவிலின் சிற்பக் கலையை வைத்து பார்க்கும்போது, பல்லவர்களது காலத்தில் கட்டிடக் கோவில் இங்கு இருந்ததற்கான சான்றுகள் எதுவும் இல்லை. இருந்தாலும் சேக்கிழார் கூறுகையில் இக்கோயிலை வேலைப்பாடுகளுடன் கூடிய உயரமான மதில் சுவர்கள் நான்கு புறமும் சூழ்ந்திருந்ததாகப் புராணத்தில் கூறியுள்ளார்.

('ஆடகமா மதில்சூழ் ஆலக்கோயில்'). பல்லவர் காலத்தில் ஒரு வகையான கோயில் இருந்தது என்பதை யாராலும் மறுக்க முடியாததாகும். ஆனால் முழுமையான வகையில் இப்போதுள்ள இக் கட்டிடக் கோயிலானது சோழர்கள் காலத்தில் தான் எழுப்பப் பட்டது என்பதை சதுரவடிவிலுள்ள கர்ப்ப கிரகத்தின் சுவர்களில் இருக்கும் அவர்களது கல்வெட்டுக்களும், சிற்பக்கலை பாணியும் உறுதிப்படுத்துகிறது.

சதுரக் கல்லால் கட்டப்பட்ட சுவாமி கர்ப்பகிரஹ அடிதளத்தின் மேல் எழுப்பப் பட்டுள்ள கஜபிரஸ்தம் வடிவிலான விமானமானது சுண்ணாம்பினாலும், செங்கற்களினாலும் ஆனது. ஏற்கனவே இருந்த விமானத்தை மேல் பகுதி வரை அகற்றி விட்டோ அல்லது மேல்பகுதி விமானமே இல்லாத அடித்தளத்தின் மீதோ இப்போது இருக்கும் இந்த விமானம் கட்டப்பட்டிருக்கலாம். இந்த மூலவர் சன்னதியை சுற்றிவர உள்ள பிரகாரமானது ராஜ ராஜ நீலங்கங்கரையனால் மூன்றாம் குலோத்துங்கனின் 17வது ஆட்சி காலத்தில் கட்டப்பட்டதாக இக்கோவிலிலுள்ள கற்சாசனமானது கூறுகிறது. இந்த பிரகாரத்தை ஒட்டித்தான் நடராஜர் சன்னதி ஒன்றும் உள்ளது.

இதற்கு பிறகே அம்மன் சன்னதி அதை சுற்றியுள்ள பிரகாரம் மற்றும் மகா மண்டபம் ஆகியவை கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதை இங்குள்ள கல்வெட்டுக்கள் மற்றும் சிற்பக் கலைகள் உறுதிப்படுத்துகின்றன.

இந்த மகா மண்டபத்தின் மேல் தளத்தில் அஸ்டதிக்கு பாலகர்கள் (எட்டு திசைக்குரிய காவலர்கள்) அழகாக செதுக்கப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு பெரிய சதுர கட்டத்தில் ஒன்பது சிறிய சதுர கட்டங்களை அமைத்து, அதில் நடுவிலுள்ள கட்டத்தில் தாமரையை செதுக்கி, மற்ற எட்டுக் கட்டங்களில் அந்தந்த திசைக் குரிய காவலர்களை அமைப்பது வழக்கமாகும். ஆனால் இக்கோவிலில் ஒரு தாமரையை ஒரு பெரிய சதுர கட்டத்தின் நடுவில் அமைத்து, அந்த பெரிய கட்டத்தின் நான்கு மூலையிலும் ஒவ்வொரு மூலைக்கும் இரண்டு திக்பாலர்கள் செதுக்கப்பட்டுள்ளது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சோழர்கள் ஆட்சி முடிந்து விஜயநகர பேரரசர்கள் ஆட்சிக்கு வந்தபோது மண்டபத்தோடு கூடிய ஒரு வினாயகர் சன்னதி, நந்தி மண்டபம், பலிபீடம் ஆகியவைகள் இக் கோவிலினுள் கட்டப்பட்டுள்ளது. இந்த பிள்ளையார் சன்னதி மண்டபத்தின் மேல் தளத்தில் பிள்ளையார் அசுரர்களுடன் சண்டையிடும் காட்சி; விஷ்ணு கச்சப அவதாரம்எடுத்து சிவனை வணங்கியது, மற்றும் சுந்தரரது திருக் கச்சூர் விஜயம் ஆகியவைகள் தனித்தனியாக மூன்று வரிசைகளில் மண்டபத்தை சுற்றியும் அழகாக செதுக்சப்பட்டுள்ளது. இவ்விஜய நகரக் காலத்தில்தான், இக்கோவிலைச் சுற்றி மதில் சுவர்கள் நான்கு புறத்திலும் எழுப்பப் பட்டு, கிழக்குப் புறத்தில் வாயில் அமைக்கப் பட்டது. இவ்வாயிலில் கோபுரம் எழுப்பப்படாமல் அடித்தளத்தோடு இருக்கிறது. இதே போன்று மற்றொரு வாயிலானது தெற்கு திசையில் இருந்ததற்கான தடயங்கள் உள்ளன. ஆனால் இவ்வாயிலானது பிற்காலத்தில் தகர்க் கப்பட்டு மூடப்பட்டு விட்டது.

சோழர்கள், பாண்டியர்களைகுறிக்கும் கல்வெட்டுக்கள் முறையே 43, 27 இருப்பதை கொண்டு விஜயநகர பேரரசர்களை குறிக்கும் கல்வெட்டுக்கள் 3 மட்டும் இக்கச்சபேஸ்வரர் கோவிலில் கிடைப்பதிலிருந்து, மருதீஸ்வரர் கோவிலில் மொத்தம் உள்ள 2 கல்வெட்டுகளில் ஒன்றுமட்டும் விஜயநகர பேரரசர்களை சார்ந்ததாக கிடைப்பதிலிருந்தும், நன்கு விளங்கும், இத்திருக்கச்சூருக்கும் அங்குள்ள கோவில்களுக் கும் விஜயநகர பேரரசர்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பது. ஒரு வேளை இவ் ஊரானது பரந்த விஜயநகர பேரரசில் மறைவாக உட்புறமாக அமைந்திருப்பது ஒரு காரணமாகவும் இருந்திருக்கலாம்.

இருந்தாலும் கி.பி.1600க்கு பிறகும், இக் கோவிலில் முன்னேற்றங்கள் ஏற்பட்டன என்பதை இக்காலத்தில் கட்டப்பட்ட உற்சவ மண்டபம், முருகர், பைரவர், விருந்திட்டஈசர் சன்னதிகள் மற்றும் கோவிலுக்கு எதிரே இருக்கும் 16 கால் மண்டபம் உணர்த்தும்.

இருக்கும் இடத்திலே அமைதி காணலாம்.

இப்போது நாம் வாழும் வாழ்க்கையில்
தூய்மையை எப்படிப் பெறுவது?
நாம் அனைவரும் காட்டிலுள்ள குகைகளுக்குப்
போய்விடலாமா? அதனால் என்ன நன்மை வந்துவிடும்?
மனம் கட்டுப்பட்டு அடங்காவிட்டால், குகையில் வாழ்வதனால்
மட்டும் எந்தவிதப் பயனும்கிடைக்காது. ஏனென்றால், இதே மனம்
எல்லாத் தொந்தரவுகளையும் அங்கேயும் கொண்டு வந்து சேர்த்துவிடும்.
குகையில்தான் இருபது பேய்களை நாம் பார்ப்போம். ஏனென்றால் எல்லாப்
பேய்களும் நமது மனத்திலேயே இருக்கின்றன. கட்டுப்பட்டு மனம் அடங்கியிருந்தால்
நாம் எந்த இடத்தில் இருந்தாலும், எங்கே இருந்தாலும் அந்த இடம் குகையாக ஆகிவிடும்.

—சுவாமி விவேகானந்தர்.

திருக்கோயில்கள்— ஓர் ஆய்வு

டாக்டர் ஏ. என். பெருமாள்
இணைப் பேராசிரியர், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை

முன்னுரை:

இறையிருப்பை உணரும் கருவிகளாய் அமையும் இடங்களையும் அரசனின் மனைகளையும் கோயில் என்ற சொல் சுட்டுகிறது. இறையிருப்பு உணர் கருவிகளைப் பிரித்துக் காட்டுவதற்காகத் திருக்கோயில் என்று சிறப்பு அடையுடன் தரப்பெற்றுள்ளது. கோயில் என்ற சொல்லுக்கு அரசன் மனை, இலிங்க சம்புடம், சிதம்பரம், சீரங்கம், தேவாலயம், விபூதிப்பை, கடவுளிருக்குமிடம், வீரசைவர் அணியும் இலிங்க சம்புடம் என்ற எட்டு பொருள்கள் உள்ளன. இவற்றுள் பல இறையிருப்புத் தொடர்பானவை என்பது சிந்திப்பதற்கு உரியது. கோயில் என்றதும் நினைவுக்கு வருவது இறைவனை வழிபடும் இடம் என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழ்நாடு திருக்கோயில்கள் நிறைந்த இடமாகும். இங்குப் பல்வேறு சமயங்கள் இருந்தாலும் சைவமும் வைணவமும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. இந்த சமயங்களைச் சேர்ந்த கோயில்கள் பல்லாயிரக் கணக்காகத் தமிழ் நாட்டில் காணப்படுகின்றன. சமய நிலையில் மாத்திரமன்றி கலை போன்ற பல்வேறு நிலைகளிலும் அவைகள் சிறப்பிடம் பெற்றுள்



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமிகள் ஆலயம்

ளன. தமிழ்நாட்டில் கோயில்கள் பற்றிய ஆய்வு இன்னும் அரும்பிய நிலையில்தான் உள்ளது. மிக ஆழமாகப் பல நிலையில் ஆய்வு செய்ய வேண்டிய சாதனங்களாகக் கோயில்கள் காணப் படுகின்றன.

பல்வேறு நம்பிக்கைகளையும் புனிதத் தன்மைகளையும் மனத்தில் கொண்டு ஆய்வதை விடவும் அறிவியலையும் சிந்தனை அறிவையும் சிறப்பாகக் கொண்டு கோயில்களை ஆராய வேண்டியது தேவையாகும். சமய உணர்வைச் சிறப்பாகவும் உறுதியாகவும் உணர்த்துவதற்கு உரிய இடமாகக் கோயில்கள் அமைந்தாலும் சீரிய சிந்தனைக்குச் சிறந்த முறையில் அறி வாக்கக்கருத்துக்களை அள்ளித் தரும் அருங் கலைக் கூடங்களாகவும் வரலாற்று உண்மைகள் கனிந்து உருகும் கால உணர்வு ஊற்றுக் கண் களாகவும் சமுதாயச் சிந்தனைகளை வழங்கும் சமூக அறிவுக் களங்களாகவும் அவை காணப் படுகின்றன.

உலகியலையும் வாழ்வியலையும் உள்ளத் தில் கருதிக் கோயில்கள் பற்றிய ஆய்வினை மேற்கொள்வது மிகவும் பயனுடையதாக அமை யும். சமய நூல்கள் உணர்த்தும் கருத்துக்களை விடவும் கோயில்கள் உதிர்க்கும் உன்னதக் கருத்துக்கள் மிகப் பலவாக உள்ளன. கோயில் பற்றிய ஆய்வினை எவ்வாறு பகுத்துக் கொள்ள லாம் என்ற எண்ணத் தூண்டலின் விளைவைக் காண முயலலாம்.

கோயில் அறிமுகம்:

முதன் முதலில் 'கோயில்' என்ற சொல்லை ஆராய்ந்து பார்ப்பது நலம். கோ இல் எனப் பிரிப்பதாயின் அரசனின் இல்லம் என்று பொருள் தரும் கோவில் உருவாகும். 'கோ' என்ற ஓரெழுத்து ஒரு மொழிக்கு அம்பு, அரசன், வானம், ஆண்மகன், எருது, கண், சந்திரன், சூரியன், திசை, தேவர் உலகம், நீர், பசு, பூமி, தாய், மேன்மை, தகப்பன், தலைமை, மலை, இரசம், சுவர்க்கம், இரங்கல், ஒழுங்காக்கு முதலிய 44 பொருள்கள் இருப்பதாக அறிய முடிகிறது. ஆனால் இறைவன் என்ற பொருள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும், கோயில் என்ற சொல்லால் இறைவனின் இருப்பி டத்தைச் சுட்டுகின்ற இலக்கியங்கள் பண்டைக் காலத்திலிருந்து இந்தப் பொருளைக் கைக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக இந்து சமயம் இச் சொல்லுக்குச் சிறப்பிடம் கொடுத்தாலும் பிற சமயங்களும் பயன்படுத்துகின்றன. ஆகை யினால் இறையிருப்பைக் குறிப்பிடும் பொதுச் சொல்லாகக் கோயிலைக் கருதுவது தவறில்லை.

வழிபாட்டு உணர்வு, வழிபாட்டிடம் தெரிந்து எடுத்தல், வழிபாட்டு முறைகள் ஆகிய வற்றைப் பற்றி நன்கு சிந்திக்க வேண்டும். மனிதனின் இயல்பான உணர்வுப் போக்கில் வழிபாட்டு உணர்வு எவ்வாறு தோன்றி இருக் கும் என்பதை உளநூல் அடிப்படையில் காண் பது முறை. அத்தகைய உணர்வுக்கு வாய்ப்பாக உதவும் முறையில் வழிபாட்டு இடத்தை எவ் வாறு மனிதன் தெரிந்தெடுத்திருப்பான் என் பதையும் வழிபடும் முறைகளை எவ்வாறு அமைத்திருப்பான் என்பதையும் நன்கு அறிய வேண்டும். இவற்றைப் பற்றிய ஆய்வு முடிவு கள் கோயில்களின் தொடக்கத்தைத் தெரிந்து கொள்ளப் பெரிதும் உதவும்.

கோயில் வரலாறு:

மனிதனுக்கு இறையுணர்வு தோன்றிய காலம் தொட்டு ஏதோ ஒரு முறையில் அவன் இறைவழிபாடு செய்திருக்க வேண்டும். அத் தகைய வழிபாடுகள் செய்த இடங்களைத் திருக் கோயில்களின் தொடக்கமாகக் கருதலாம். தமிழ் நாட்டின் கோயில்களின் வரலாற்றை முறையாகவும் விளக்கமாகவும் அறிய இலக்கிய குறிப்புக்கள் மிக உதவும் என்பது உண்மை.

சங்கப் பாடல்களில் 'கோயில்' என்ற சொல் பெருநராற்றுப்படை *(வரி. 90)*, நெடு நல்வாடை *(100)*, பட்டினப்பாலை*(50,286)*, கலித்தொகை *(94-39)*, புறநானூறு *(67-10, 127-6, 241-3, 378-5)*, ஆகியவற்றில் வந்துள்ளது. பரிபாடல் திரட்டில் *(8-4)* ஓரிடத் திலும், சிலப்பதிகாரத்தில் *(3-118, 5-169-173, 13-127, 137, 138, 14-7, 12, 16-139, 17-1-5, 18-25; 19-75, 20-46, 47, 22-10, 14, 23-107, 27-17, 157, 28-83, 29-1-35, 29-10-1)* பல இடங்களிலும், மணி மேகலையில் *(5-118, 7-64, 20-5 ,96, 22-12, 23-38, 28-214)* ஏழு இடங்களில் 'கோயில்' என்ற சொல் வந்துள்ளது.

சங்க இலக்கியங்களில், கோயில் பெரும் பாலும் அரண்மனையைக் குறிப்பிடுகிறது. பட்டினப் பாலையில் 'திருக்கோயில்' *(286)* என்பது சோழமன்னன் உறையூரை விரிவுறச் செய்து திருக்கோயில்களுடன் குடிமக்களைக் குடியமரச் செய்த சூழ்நிலையைக் காட்டுகிறது. இறையிருப்பாகிய திருக்கோயிலுக்கு மக்கள் இருப்பில் எவ்வளவு சிறப்பான இடத்தை அர சன் கொடுத்திருக்கிறான் என்பதனை இது காட்டுகிறது. சமூகத்தில் கோயில்களுக்குத் தரப் பெற்றுள்ள மதிப்பு இதனால் விளங்கும்.

சிலப்பதிகாரத்தில் 'பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்' *(5-169)*, முருகன் கோயில், பலதேவன் கோயில், திருமால் கோயில் இந்திரன் கோயில் ஆகியவை பற்றிய செய்தி யும், 'வேறு வேறு கடவுளர் சாறு சிறந் தொரு பால்' *(5-178)* என்பதன் வாயிலாக பல கடவு ளருக்கு வேறு வேறு இடங்களில் திருவிழாக்கள் நடைபெற்ற செய்தியும் தரப்படுகின்றன. வேட்டுவ வரியில் கொற்றவைக்குக் கோயிலும்

விழாவும் சிறப்பாக எடுக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

'அருந்தெறற் கடவுள் அகன்பெருங்
கோயிலும்,
பெரும்பெயர் மன்னன்பேரிசைகோயிலும்
(13-137, 138)

என்ற பாடலடிகள் திருக்கோயிலையும் மன்னவன் மனையையும் பிரித்துக் காட்டுவதைப் பார்க்கலாம்.

மணிமேகலை பல இடங்களில் அரண்மனையைக் கோயில் என்று குறிப்பிட்டாலும்,

'பொருள் புரிநெஞ்சிற் புலவோன்கோயில்'
(20-5)

என்று கூறுமிடத்தில் புத்தக் கோயிலைக் குறிப்பிடுகிறது. சங்க காலத்திலும் அதனைச் சார்ந்த காலத்திலும் திருக்கோயில்கள் தமிழ்நாட்டில் பலவாக இருந்துள்ளன. மக்கள் அவற்றைப் புனிதமாகக் கருதி வழிபாடு நடத்தியுள்ளனர். மன்னனின் ஆதரவும் கோயில்களுக்கு இருந்துள்ளது. பல தெய்வங்களைப் பல்வேறு முறைகளில் வழிபட்டு விழாக்கள் நடத்தி மக்கள் மகிழ்ந்துள்ளனர். ஆனால் அக்காலத்தில் கோயில்களை எவ்வாறு அமைத்து வழிபட்டனர் என்பதை அறிய முடியவில்லை. கோயில்கள் அழிந்துவிட்டமையால் பரந்த வெளிகளில் பீடமாக அமைத்திருக்கலாம் என்றோ அல்லது மண்ணால் கட்டப்பட்டிருக்கலாம் என்றோ கருதுவதற்கு இடமுள்ளது. செங்கற்களால் கட்டப்பெற்ற கோயில்கள் சில இடங்களில் காணப்படுகின்றன.

பிற்கால இலக்கியங்கள் கோயில்கள் பற்றிய செய்திகளை மிகுதியாகத் தருகின்றன. பல்லவர் காலத்தில் பாறைகளைக் குடைந்து செய்யப்பட்ட குடைவரைக் கோயில்களும் கற்களை அடுக்கிக் கட்டப்பட்ட கற்றளிகளும் முதன்முதலில் எழுப்பப்பெற்றதாக அறியமுடிகிறது. கோயில்கள் அக்காலத்திலிருந்து அளவிலும் அழகிலும் வளர்ந்தன. கலை அமைப்பு சிறந்து விளங்கின. இத்தகைய உயர்நிலையைப் பல்லவர் காலம், சோழர் காலம், பாண்டியர் காலம், விஜயநகரக் காலம், நாயக்கர் காலம் என்று பலவாறு பிரித்து ஆராயலாம்.

தமிழ்நாட்டுக் கோயில் கலையுடன் இராஷ்டிரகூடர், காகத்தியர், தெலுங்குசோடர், ஹொய்சலர், விஜயநகரப்பேரரசர் முதலியோரின் கலைத் தாக்கம் எத்தகைய மாற்றங்களைக் கொண்டு வந்தன என்பதைச் சிந்திக்கலாம். கல்வெட்டுக்களைக் கொண்டு கோயில் வரலாற்றை அறிவது சிறந்த பயனைத் தரும். செவிவழிக் கதைகள், தலபுராணங்கள் ஆகியவை கோயில் வரலாற்றை அறிய ஓரளவு துணைபுரியும். இவ்வாறு பலமுறைகளில் திருக்கோயில்களின் வளர்ச்சிவரலாற்றைக் கண்டறிய முயலுவது முறையாகும். தக்க சான்றுகள் இன்றி முற்ற முடிந்த முடிவுகளைக் கூற இயலாது. மரபுவழிக் கதைகள் மயக்கக் கருத்துகளுக்கு இடம் தந்து விடாதவாறு அறிவியல் சிந்தனையால் காத்துக்கொள்ள வேண்டும்.



ஓம் கணபதி

ஆய்வுப்பகுப்பு

திருக்கோயில் ஆய்வை எவ்வாறு அமைக்க வேண்டும் என்பது சிறிது சிக்கலைத் தருவதாகவே காணப்படும். ஆன்மீகம், அறிவியல், சமூகவியல் போன்ற பலவற்றின் கூட்டியல்களாகக் கோயிலைக் கருதலாம். இதன் கூறுகள் அறிவிற்கு அப்பாற்பட்டும், அறிவிற்கு அடங்கியும்வேறுவேறு விதமாக அமைவதினால் ஆய்வுப் பகுப்பு சிக்கலுக்கு உரியதாகத் தோன்றலாம். இருப்பினும் மனித அறிவுக்கு எட்டும் அளவில் ஆய்வுப் பொருளைப் பகுத்துக் கொள்வது முறையாகும். முடியா முடிவுக்கு வழியாகும் சிக்கல்களை ஆய்வுப் பொருளாக ஏற்றுக்கொள்வதைத் தவிர்ப்பது தவறாகாது. அறிவியல் நோக்கையும் போக்கையும் ஏற்றுக்கொள்வதையே சிறந்த ஆய்வாகக் கருதவேண்டும்.

கோயில் ஆய்வை சமயம், வரலாறு, சமுதாயம், கலை என நான்கு பெரும் தலைப்புக்களாகப் பகுத்துச் சிறப்பான கருத்துக்களைக் கண்டு உணர முயலலாம். பகுப்பை வேறு வகையாக அமைக்கக் கூடாது என்பது இல்லை. பகுப்பு முறை பொருத்தமாகவும் தொடர்புடைய அனைத்துப் பொருள்களையும் உள்ளடக்கும் தன்மையுடையதாகவும் இருக்க வேண்டும்.

பகுத்துக் கொண்ட தலைப்புக்களைத் தனித் தனியாக எடுத்து அவற்றை ஆய்வுக்கு உட் படுத்தி முடிவுகள் காண முயல்வது முறை. தக்க சான்றுகளும் தகுந்த விளக்கங்களும் தேவை கருதி தருவது நல்ல ஆய்வாக அமையும். தேவையற்றவற்றை இடை நுழைப்பது மிகை யாகமாறி ஆய்வின் சிறப்பைக் குறைத்துவிடும்.

சமயச் சிந்தனைகள்

சமயக் கொள்கைகள் பற்றிய காழ்ப்பற்ற முறையில் இப்பகுதி ஆய்வு அமைதல் வேண் டும். பல்வேறு கொள்கைகள் கொண்ட சமயங் களைச் சார்ந்த கோயில்கள் பலவாக உள் ளதை மனத்தில் கொண்டு அவற்றுக்குத் தக்க வாறு சிந்திப்பது முறையாகும். கோயில் என்ப தற்குச் சிறப்புப் பொருளாகச் சிதம்பரம், சீரங் கம் ஆகியவற்றைத் தந்துள்ளது குறிப்பிடத் தக்கது. அவை முறையே சைவம், வைணவம் ஆகிய தத்துவங்களுக்கு உறைவிடமான கோயில் களைக் குறிப்பிடுகின்றன. சமயக் கொள்கை கள் மாறினாலும் கோயில் என்பது பொதுவான ஒன்றாக உள்ளது. ஒவ்வொரு கோயிலிலும் எத் தகைய சமயக் கொள்கைகள் அமைந்துள்ளன என்பதையே சிந்திக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் இந்து சமயக் கோயில்களே சிறப்பிடம் பெற்றுள்ளன. அவற்றுள் சைவக் கொள்கையுடைய கோயில்களும் வைணவக் கொள்கை உடைய கோயில்களும் மிகச்சிறப் புடன் காணப்படுகின்றன. சைவத்தின் உட் பிரிவுகளாக முருக தத்துவம், கணபதி தத்துவம், சக்தி தத்துவம் போன்றவற்றைக் கருதலாம். கொள்கை வேறுபாட்டுக்குத் தக்கவாறு வழி பாட்டு முறை, விழா எடுக்கும் முறை, கோயில் அமைப்பு முறை, படையல் செய்யும் முறை ஆகியவை மாறுபடும். சமயக் கொள்கைகளை நன்கு அறிந்து கோயில் நடைமுறைகளுடன் பொருத்திப் பார்த்துக் அறிவாக்க உண்மை களைக் காண முயலவேண்டும். ஒரே கொள்கை யைக் கொண்ட இரண்டு கோயில்களில் நடை முறை வேறுபாடுகள் இருப்பதைக் காணலாம். அவற்றின் காரணம் என்ன என்பதை ஆராய் வது நல்ல பயனைத் தரும்.

பொதுவாகச் சைவக் கோயில்களில் 27 ஆகம முறைகளில் பூசனை நடைபெறுகின்றன. வைணவக் கோயில்களில் பாஞ்சராத்ரம், வை காநசம் ஆகிய ஆகம முறைகள் கையாளப்படு கின்றன. சித்த ஆகம முறைப்படி மயிலாப்பூர் போன்ற சிவன் கோயில்களில் பூசனை நடத்தப் படுகின்றது. இவ்வாறு மாற்றமுடன் வழிபாடு நடைபெறுவதின் காரணங்கள் ஆராய வேண் டிய ஒன்றாகும். பல கோயில்களில் வைதீக முறையிலும் காஞ்சி காமாட்சி அம்மன்கோயில் போன்றவற்றில் சாஸ்திரிகள் பூசனையும் நடத் தப்படுவது ஏன் என்று சிந்திக்க வேண்டியதா கும். சோடச உபசாரம் அல்லது 16 வகை பூசனை முறைகளை விளக்கி ஆராய்வது தக்க தாகும்.

அஷ்டோத்திரம் அல்லது 108 நாமாவளி, திரிசதி அல்லது 300 நாமாவளி, சகஸ்ரநாமம் அல்லது 1000 போற்றி முதலிய கூற்றுவழி வணக்க முறைகளைக் காரணத்துடன் விளக்க முயலலாம். கோயில்களில் குறிப்பிட்ட சமய நூல் விளக்கம் தருவதைக்காணலாம். எடுத்துக் காட்டாகக் குருவாயூரில் பாகவத பாராயண மும், ஆழ்வார் திருநகரியில் நாலாயிர திவ்விய பிரபந்த விளக்கமும் ஆண்டுதோறும் நடை பெறுகின்றன. இவ்வாறு நடத்தப்படுவதினால் ஏற்படும் பயன்களைப் பற்றிச் சிந்திக்கவேண் டும்.

கோயில்களில் பலவிதமான ஆராதனை முறைகள் கையாளப்படுகின்றன. அவற்றுள் முக்கியமாகத் தீப ஆராதனையைக் கருதலாம். தீபத்தட்டுக்கள் நந்தி, பாம்பு போன்ற பல உருவங்களைத் தாங்கியுள்ளன. தீபக் கண்களின் எண்களும் வேறுபட்டுள்ளன. தீபம் காட்டும் முறைகளும் வேறுபடுகின்றன. இவ்வாறு நடை பெறும் ஆராதனை முறைகளைப் பற்றி விரி வாகவும் ஆழமாகவும் சிந்தித்து அவற்றில் அடங்கியுள்ள தத்துவப் பொருளைக் கண்டு உணர்வது நலம்.

பொதுவாகப் படையல் பொருள்கள் ஒத் துக் காணப்பட்டாலும் சில கோயில்களில் குறிப்பிட்ட பொருள்கள் சிறப்பாகப் படைக் கப்படுவதன் நோக்கத்தை அறியலாம். பழனி யில் பஞ்சாமிர்தம், திருப்பதியில் லட்டு, சிவ காசி காச்சக்கார அம்மன் கோவிலில் மிளகு ரசம், வைத்தீஸ்வரன் கோவிலில் மண் உருண்டை போன்றவற்றைப் பற்றிச் சிந்திக்க லாம். சில கோவில்களில் படையல் பொருள் களை மருந்துகளாக மக்கள் மதிப்பதைக் காணலாம். ஆழ்வார் திருநகரியில் தரப்படும் அர வணை, உட்காரை முதலியவற்றைத் தீராத வயிற்றுக் கடுப்பைத் தீர்க்கும் மருந்தாகக் கருது கிறார்கள். இத்தகைய நம்பிக்கையின் அடிப் படையை அறிய முயலலாம். மழையற்ற காலங் களில் சிறப்பு பூசனைகளும் நந்திக்கு மிளகு அல்லது நீர் முழுக்காட்டுவதில் அடங்கியிருக் கும் தத்துவத்தையும் அறிவியல் பொருத்தத் தையும் சிந்திக்கலாம்.

சிவன் கோயில்களில் அமாவாசை, பூர் ணிமை ஆகியவற்றுக்கு முந்திய நாள் நந்தியின் வாயிலாக இறையருளைப் பெறுவதற்காக நடத்தப்படும் பிரதோஷ விழா, நிமித்தம் கார ணமாக ஏற்படும் மார்கழி திருவாதிரைவிழா, பெருமாள் கோயில் தாயாருக்கு நடத்தப்படும் ஆடிப்பூரம் விழா, முருகன் கோயில் கந்தசஷ்டி விழா, பிள்ளையார் கோயில் சதுர்த்தி விழா, அம்மன் கோயில் பங்குனி உத்திர விழா, பிர

மோத்ச விழாக்கள் போன்ற வற்றைத் தத்துவ அடிப்படையில் ஆராய்வது நலம். தினப் பூசனை முறையிலுள்ள மாற்றங்களையும், நடப்புக்களையும் அறிய முயலலாம். இத்தகைய விழாக்களின் நோக்கங்களைத் தெரிந்து நடைமுறைப் பொருத்தங்கள் பற்றிச் சிந்திக்கவேண்டும்.



ஸ்ரீ வராக மூர்த்தி

தனிப்பட்ட கோயில்களில் பல விழாக்கள் நடத்தப்படுவதைப் பார்க்கலாம். ஆழ்வார் திரு நகரியில் சித்திரையில் பெருமாளுக்குப் பிரம்ம உத்சவமும், வைகாசியில் ஆழ்வாருக்குப் பிரம்ம உத்சவமும், ஆடியில் கருடாழ்வாருக்குப் பத்துநாள் உத்சவமும், ஆவணியில் திருபவித்ர உத்சவமும், புரட்டாசியில் நவராத்திரி உத்சவமும், ஐப்பசியில் ஊஞ்சல் உத்சவமும், மார்கழியில் திருஅத்யன உத்சவமும் மாசியில் தெப்ப உத்சவமும் பங்குனியில் தாயார் உத்சவமும் நடைபெறுகின்றன. இவ்வாறு வெவ்வேறு விதமாகப் பல கோயில்களில் விழாக்கள் நடக்கின்றன. அவற்றை நன்கு அறிந்து அவற்றுள் அடங்கிக் கிடக்கும் தத்துவ உள்ளீட்டை வெளிப்படுத்த வேண்டும்.

கோயில்களுக்குத் தலவிருட்சம் இருப்பதைக்காணலாம். பாதிரி (திருப்பாதிரிப்புலியூர்) தில்லை (சிதம்பரம்) ஆல் (திருவாலங்காடு), வேணு அல்லது மூங்கில் (திருநெல்வேலி) புன்னை (மயிலாப்பூர்), ஹங்காப்புளி (ஆழ்வார் திருநகரி), பலா (திருக்குற்றாலம்) என்று பல மரங்கள் கோயில்களுடன் தொடர்புற்று விளங்குவதன் காரணத்தை அறிய வேண்டும். இதற்குள் வரலாறு, தத்துவம், அறிவியல் உண்மைகள் அடங்கி இருப்பதைக் கண்டுணர்ந்து கூறுவது முறை.

கோயில் அமைப்பு, சிலை அமைப்பு, போன்ற பலவற்றுள் மனித வாழ்வுடன் தொடர்பு கொண்ட சமயத்தத்துவ சிந்தனைகள் அடங்கி இருப்பதைக் காண முயலவேண்டும். கோயில்களையும் சிலைகளையும் ஆகமம் அல்லது தத்துவ அடிப்படையில் அமைத்துள்ளனர். இரண்டு அடிப்படைக்கும் உள்ள வேறுபாடுகளைத் தெரிந்து நுட்பமாக மேலாய்வு செய்வது முறை. பொதுவாகக் கோயில்கள் கருவறை, கொடிமரம், கோபுரம், பலிபீடம், நந்தி போன்ற வாகனங்கள் என்ற ஒழுங்கில் இருப்பதைக் காணலாம். இவ்வமைப்பில் ஆழமான தத்துவம் அடங்கியுள்ளன. உருவுடன் இதைப் பொருத்திக் காண்பது ஒரு நிலை. ஓர் உயிர் தன்னுடைய ஆணவத்தைப் போக்கிய பின்னர் இறைவனை நோக்கிச் சென்று அவனுடைய அருளைப் பெறுவது இன்னொரு நிலை. தொல்காப்பியர் கூறியுள்ள கொடிநிலை, கந்தழி, வள்ளி ஆகியவற்றைக் கோவில் அமைப்புடன் பொருத்திக் கண்டு சில உண்மைகளைக் கண்டுணர முயலலாம்.

கோயில்களில் மரபுவழியாகப் பின்பற்றப்படும் முறைகள், நம்பிக்கைகள், நடைமுறை வழக்கங்கள், சார்புடைய கதைகள் ஆகியவற்றையும் ஆய்வுச் சிந்தனைக்கு உட்படுத்த வேண்டும். கன்னியாகுமரி அம்மனைப் பற்றி எட்டு கதைகளும், சுசீந்திரத்தைப் பற்றி ஒரு கதையும் தத்துவ விளக்கங்களாக இருப்பதை பார்க்கலாம். அவற்றுள் வரலாற்று உண்மைகளும் அடங்கிக் கிடக்கும்.

சமய உணர்வைச் சரியான முறையில் மக்களுக்கு உணர்த்தி உய்வழிவகுக்கும் உன்னத சாதனமாகக் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. இந்த அடிப்படை நோக்கத்தைப் பலவழிகளில் நிறைவேற்ற அவை முயல்வதை நன்கு சிந்தித்து காண வேண்டும். வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் சமயக் கொள்கைகள் புலப்படுத்தப்படுவதை நன்றாக அறிந்து கூறுதல் வேண்டும். காலக் கடப்பால் ஏற்பட்ட சமூக மாற்றமும் சிந்தனை வளர்ச்சியும் சில கொள்கைக் குறியீடுகளைத் தவறாகக் கருத இடம் வகுத்திருக்கலாம். அவற்றை அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தி சீர்மை சிதையாதவாறு சிந்திக்க வேண்டும். மனித வாழ்வின் ஈடேற்றம் கருதிய சிந்தனைக்குச் சிறப்பிடம் கொடுப்பதே முறையாகும்.

வரலாற்று உண்மைகள்

உண்மை நிகழ்ச்சிகளைக் கொண்ட வரலாற்றுக்குத் தக்க சான்றுகளை வழங்கும் அறிவு நிலைக் கூடங்களாகக் கோயில்கள் விளங்கு

கின்றன. கோயில்கள் மன்னர், சமய ஆர்வலர், வள்ளல்கள், மக்கள் ஆகியோரின் தொடர்புகளைப் பறைசாற்றும் நிலையங்கள் ஆகும். முதலாம் இராஜ ராஜனைப் பற்றிய செய்திகளுக்குத் தஞ்சைப் பெரிய கோயில் சான்று பகரும். பல்லவ மன்னர்களைப் பற்றி மாமல்லபுரம் கோயில்கள் விளக்கம் தரும். சோழர், பாண்டியர், ஹொய்சலர், காகத்தியர், விஜயநகர மன்னர், தெலுங்குச் சோடர், கர்டவராயர், சம்புவராயர் போன்ற பலரைப் பற்றிய வரலாற்று உண்மைகளைக் காஞ்சிபுரம் கோயில்கள் வாயிலாக நன்கு அறியலாம். மாங்கரை அம்மன் கோயில் பன்னிரண்டாம் செட்டியார் வரலாற்றை விளக்கும் தரமுடையது. இவ்வாறு ஒவ்வொரு கோயிலும் வரலாற்று சின்னமாக விளங்குவதைக் காணலாம்.

கோயில்களின் அமைப்பு, கலைத் தன்மை, சிலை அமைப்பு போன்றவற்றைக் கொண்டு ஆட்சியாளரின் செய்திகளையும் காலத்தையும் கணக்கிட்டுக் காண முயலலாம். ஒரு கோயிலை முழுமையாக எடுத்துக்கொண்டால் அது ஒரு குறிப்பிட்ட காலத்து கட்டுமானமாக இருக்காது. மதுரைக் கோயில் பல மன்னர்களால் படிப்படியாகக் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு கோபுரமும் ஒவ்வொருவருடைய திருப்பணியாகக் காணப்படுகிறது. அவை அளவாலும் கலைத்திறனாலும் வேறுபட்டுள்ளதை வரலாற்று பார்வையில் கண்டு அவற்றுள் அடங்கியுள்ள உண்மைகளை அறிய முயலலாம்.

கோபுரங்கள் மண்டபங்கள் மதில்கள் ஆகியவற்றின் பெயர்களைக் கொண்டு பல வரலாற்று உண்மைகளைக் காண்பதற்கு இடம் உண்டு. மதுரையில் வேம்பத்தூரார் கோபுரம், சுந்தரபாண்டியன் கோபுரம், வீரப்ப மண்டபம், பேச்சக்காள் மண்டபம்,வீரவசந்தராயர் மண்டபம், மங்கையர்க்கரசி மண்டபம், சேர்வைக்காரர் மண்டபம், சுந்தர பாண்டியன் மதில் போன்று பலருடைய பெயர்களைத் தாங்கிய திருப்பணிகள் உள்ளன. இவை யாரால் எதற்காக எந்தக் காலத்தில் கட்டப் பெற்றன என்பதைச் சிந்திக்கலாம். இந்தப் பெயர்களின் காரணங்களை அறிய முயலலாம்.

கலைகளின் தன்மை பல உண்மைகளைப் புலப்படுத்தும். குமரி மாவட்டத்திலுள்ள சுசீந்திரம் கோயிலில் சோழர்களுடைய கலையும் நெல்லை மாவட்டத்திலுள்ள ஆழ்வார் திருநகரி கோயிலில் மலையாள எழுத்துக்கள் தெலுங்குக் கல்வெட்டுக்கள் காணப்படுவதன் காரணத்தை ஆராய்ந்தால் உறுதியாகச் சில வரலாற்று உண்மைகள் தோன்றாமல்போகாது. மேலும் இந்தக் கோயில் வெளிமண்டபத்தில் ஒன்றரை அடி சிலை காணப்படுவதின் காரணத்தை அறிந்து வரலாற்று மறைவுகளுக்கு ஒளிகாட்ட முயலலாம்.

கோயில்களின் சேவை வரலாறு மிகவும் முக்கியமாகக் கருத வேண்டிய ஒன்றாகும். காஞ்சிபுரம் கோயில் சேவை வழியைக் காணின் திருக்கச்சி நம்பி, இராமானுஜர், வேதாந்த தேசிகர், நாயன வரதாசாரியார், பிரம்மதந்திர சுந்தரசாமி, பிரதிவாதி பயங்கர அண்ணன், மணவாள மாமுனி, அழகிய மணவாள ஜீயர் போன்றவர்களின் தனி வரலாற்றையும் சக்கரவர்த்தி குடும்பம், தல்லாப் பாக்கம் குடும்பம், கோமடம் குடும்பம் போன்ற குடும்ப வரலாற்றையும் தெரிந்து கொள்ளலாம். சமயத்துக்கு இவர்கள் ஆற்றியதொண்டு, மக்களுக்கும் இவர்களுக்கும் உள்ள தொடர்பு, காலச் சூழலில் இவர்கள் பிடித்துக் கொண்ட இடம் ஆகியவற்றை அறிவது சமயத்தையும் சமுதாயத்தையும் வரலாற்றுக் கண்கொண்டு பார்ப்பதற்கு ஒப்பாகும்.

சின்லகள், சிற்பங்கள் போன்றவற்றின் உருவ அமைப்பு காலத்தைக் காட்டும் சிறப்புத் தன்மையுடன் காணப்படுகிறது. கோயில்களில் துவாரபாலகர்களை அமைக்கும் நோக்கம் ஒன்றாயினும் அவர்களின் உருவ அமைப்பு காலத்துக்குக் காலமும் இடத்துக்கு இடமும் மாறுபட்டிருப்பதைக் காணலாம். சிலைகளின் ஆடைஅணிகளைக் கொண்டு அவற்றை அமைத்த அரச மரபினரை அறியலாம். காலத்தைத் தெரிந்து கொள்ளவும் அவை துணைபுரிகின்றன. சிலைகள், தூண்கள் போன்றவற்றை அமைப்பதில் பல்லவர், சோழர், பாண்டியர் தெளிவான மாற்றங்களைக் காட்டியுள்ளனர். சில கோயில்களில் கலைக் கலப்புஏற்பட்டிருப்பதையும் காணலாம்.

கோயில்களில் ஏற்பட்டிருக்கும் அழிவு அல்லது சிதைவு கொண்டு சில வரலாற்று நிகழ்ச்சிகளைக்கண்டு உணரலாம். மதுரைக் கோயிலில் பல சிற்பங்கள் சிதைவுற்றிருப்பது மகமதியருடைய படையெடுப்பைக் காட்டும். திருச்செந்தூர்மூலவரின்சிலை கடலரிப்பால் சிதைவுற்றுக் காணப்படுவது உலாந்தார்கள் அல்லது டச்சுக்காரர்கள் சிலையை அகற்றிக் கடலில் எறிந்த நிகழ்ச்சியைக் குறிக்கும். அங்கு 1649 ஆம் ஆண்டு முதல் 1651ஆம் ஆண்டு வரை வழிபாடு தடைப்பட்டிருந்த காரணத்தையும் விளக்கும்.

கோயில்களின் தலபுராணம், மரபு வழிக் கதைகள், தொடர்புடைய கதைப் பாடல்கள், பற்றுடையோர் பாடியுள்ள பக்திப்பாடல்கள், இணைந்த பிரபந்தங்கள் ஆகியவையும் பல உண்மைகளை மண்ணிலிருந்து பொன்னைப் பிரித்து எடுப்பது போல் காண உதவும். கற்பனைக் கலவைமிகுந்தவை எவை என்பதை நன்கு உணர்ந்து அவற்றைப் பற்றியுள்ள ஆய்வில் ஈடுபடவேண்டும். கன்னியாகுமரி பகவதியம்மனைப் பற்றி சுமார் எட்டு கதைகள் கூறப்படு

கின்றன. அவற்றிலிருந்து கோயிலை அன்னியர் கொள்ளையிட முயன்றது. கோயில் நகைகள் களவாடப்பட்ட செய்தி ஆகியவற்றை அறிய முடியும். சில கதைகள் சிக்கலுக்கு உரியதாக உள்ளன. திருச்செந்தூர் தூண்டுகை விநாயகரைப் பற்றிய கதை அவற்றுள் ஒன்று. அவ்வாறான கதைகளைப் பற்றி நன்கு ஆய்ந்து உண்மை காண்பது பயனுடையதாகும்.

கோயில் நடைமுறைகளில் சில விலக்குகள் இருப்பதின் காரணத்தை அறிந்து அவற்றால் விளங்கும் உண்மைகளைக் காணவேண்டும். கன்னியாகுமரியில் கிழக்கு வாயிலும் சுசீந்திரத்தில் மேற்கு வாயிலும் பெரும்பாலும் அடைக்கப்பட்டே இருக்கும். மக்கள் அவ்வழிகளில் செல்வது விலக்கப்பட்டுள்ளது. திருவிடைமருதூரில் சென்ற வாயில் வழியாகத் திரும்பக் கூடாது என்ற வழக்கம் உள்ளது. அதை விளக்க ஒரு சோழ மன்னனின் கதையும் கூறப்படுகிறது. இவ்வாறுள்ள விலக்குகள் வரலாற்று உண்மைகளின் மறைவிடங்களாக இருப்பதை உணர்ந்து சிந்திக்க வேண்டும்.

கோயில்களில் கல்வெட்டுக்கள் வரலாற்று மூலங்களாக உள்ளன. அரிய செய்திகளைத் தாங்கிக் காணப்படுகின்றன. செய்திக் குறிப்புகளையும் மொழி வளர்ச்சி நிலைகளையும் அறிய அவை மிகவும் துணைபுரியும். காலகட்ட எழுத்தமைப்பு, மொழியமைப்பு முதலியவற்றை அவற்றைக் கொண்டு அறியலாம். அரசியல், சமயம், சமூகம், பழக்கவழக்கம் போன்ற பல செய்திகள் கல்வெட்டுக்களிலிருந்து கிடைக்கும்.

சமூகச் சிந்தனைகள்

கோயில்கள் மக்களின் வழிபாட்டிற்கு உரிய இடமாக விளங்குவதினால், சமூகச் சிறப்பு வாய்ந்ததாகவும் தான் இருக்க முடியும். சாதிப் பிரிவுகள் சிலவகைச் சிக்கல்களுக்குஇடம் வகுத்துள்ளமையும் சிந்திக்கவேண்டும். இத்தகைய பிரிவுகளுக்கும் கோயில்களுக்கும் இடையே நிலவியுள்ள அணுக்க பிணக்க நிலைகளை நன்கு கண்டு தெளிவு காண்பது முறை. அறிவு மலர்ச்சியால் ஏற்பட்ட சிந்தனை முகிழ்ப்பால் எத்தகைய நடைமுறை மாற்றங்கள் ஏற்பட்டன என்பதை வரலாற்று வழி நின்று விளக்க வேண்டும். இறைச் சிந்தனையாலும், மானிட உரிமை என்பதை மனத்தில் கொண்டு இந்தப் பிரச்சினையை அணுகுவது முறையான ஆய்வாக மலரும். சமூக ஏற்றத் தாழ்வு உணர்வுகளுக்குக் கோயில்கள் இடம் வகுத்தனவா என்பதை நடைமுறை வழக்கங்களைக் கொண்டு ஆய்ந்து முடிவு காண்பது சிறப்பாக அமையும்.

கோயில்களால் மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகளை நன்கு சிந்திக்க வேண்டும். கோயிலை சார்ந்து சத்திரம், சாவடி, ஊட்டுப்புரை, திருமண மண்டபம், விசாரணை மன்றம், கலையரங்கம், கல்விப் பயிலிடம் ஆகியவை இருப்பதைக் கொண்டு சமூகம் அடையும் பயனை எடுத்துக்கூறி விளக்கலாம். மன்னரும் வள்ளல்களும் கோயில்களுக்கு நிலங்கள் கொடுத்துள்ளதினால் ஏற்பட்டுள்ள பயன்களைக் கூறலாம். மடங்கள் கோயில்களுக்குச் செய்தப் பணிகளை ஆதாரமாகக் கொண்டு சமூக நிலையை அறிய முயலலாம்.

பஞ்ச காலங்களில் கோயில்கள் மக்களுக்கு உணவூட்டியதைச் சான்றுகளுடன் கூறலாம். கோயில்களில் தெப்பக் குளம் இருப்பதைக் குறிப்பிட்டு அவை ஏன் அமைக்கப்பட்டுள்ளன என்று சிந்திக்க வேண்டும். பொதுவாகக் கோடை காலத்து வறட்சியும் சூடும் தணிக்கப்பட வேண்டும் என்பது நோக்கமாக இருக்க வேண்டும். மயிலத்தில் ஏற்றத் தாழ்வுடன் பல குளங்களும் இராமேஸ்வரத்தில் பலவகைத் தீர்த்தங்களும் இருப்பதன் காரணங்களைச் சிந்திக்கலாம். எல்லாக் கோயில்களிலும் வடக்கு அல்லது கிழக்குத் திக்குகளில் குளங்கள் இருக்கும். ஆனால் மயிலாப்பூரில் மேற்கில் இருக்கிறது. இவற்றைப் பற்றி ஆய்ந்து சமுதாய நோக்கில் சிந்திக்கலாம். குளங்களில் வெல்லம், உப்பு, மிளகு ஆகியவற்றைக் கொட்டும் பழக்கம் உள்ளது. அவை கிருமி நாசினி என்பதை அறிந்து அறிவியல் முறையில் சிந்திக்கலாம்.

இராஜராஜசோழன்

இயற்கையழிவு, போர் முதலிய ஆபத்துக் காலங்களில், கோயில்கள் பாதுகாப்பு இடங்களாக விளங்கி உள்ளன. 1952-ஆம் ஆண்டில் வேதாரண்யத்தில் ஏற்பட்ட புயலழிவிலிருந்து மக்களுக்கு அங்குள்ள கோயில் பாதுகாப்பு அளித்ததைக் குறிப்பிடலாம். பல படையல் பொருள்கள் நோய்களுக்குத் தக்க தடுப்புகளாகவும் மருந்துகளாகவும் இருப்பதை மருத்துவ முறையில் சிந்திக்கலாம். துளசி நீர் கப நோய் வராது தடுக்கும் மருந்து என்பதை அறியலாம். கற்பூரம், சாம்பிராணி போன்றவை கிருமிகளை அழிக்கும் ஆற்றலுடையன.

கோயில்களில் நடத்தப்படும் இசை, கூத்து போன்ற கலைகள் மக்களுக்கு இன்பப் பொழுது போக்குகளாக அமைகின்ற சில நிகழ்ச்சிகள் இறைஉணர்வை ஊட்டுவதுடன் சமூக சீர் திருத்த உணர்வைக் கொடுப்பதாகவும் உள்ளன. இவ்வாறு பல நிலைகளில் கோயில்களுக்கும் சமூகத்துக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றிச் சிந்திக்கலாம்.

கலைச் சிறப்புக்கள்

கோயில்கள் அரிய கலைகளின் இருப்பாக விளங்குகின்றன. கட்டிடக் கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை ஆகியவை கோயிலமைப்புடன் இணைந்த கலைகளாகவும் ஆடல், பாடல், இசைச் சொற்பொழிவு போன்றவை சார்ந்த கலைகளாகவும் உள்ளன. இவற்றுள் முற்பிரிவைச் சிறப்பாய்வாகவும் பின்னதைப் பொது ஆய்வாகவும் செய்யலாம். இவற்றுடன் தேர், வாகனம், அணிகலன்கள், பூசனைத் தட்டுகள், இறை விருதுப் பொருட்கள் போன்றவற்றுள் அமைந்துள்ள கலைச் சிறப்புக்களை விளக்கலாம். கோயில் கலைகளுக்குத் தனித்தனித் தலைப்புகள் கொடுத்து விளக்குவது சிறப்பாக அமையும்.

கட்டிடக்கலை

தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்கள் பொது அமைப்பில் தனித் தன்மையுடன் விளங்குவதை நிறுவிக் காட்ட வேண்டும். பொதுவாக அவை எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன என்பதை விளக்கி அவற்றிலுள்ள முக்கியப் பகுதிகளைக் குறிப்பிடலாம். இத்தகைய அமைப்பின் காரணங்களை நன்கு சிந்தித்துக் கூறுவது தேவை. தத்துவ அடிப்படை, அறிவியல் அடிப்படை என இரு கூறாகக் காரணங்களை விளக்க முயலலாம்.

கட்டிடத்தின் உள்ளமைப்பு, புறவமைப்பு ஆகியவற்றைத் தனித்தனியாகப் பிரித்து விளக்குவது சிறப்பாக அமையும். மூலவர் இருப்பிடம், இணைந்த தெய்வங்களின் இருப்பிடங்கள், பிரகாரங்கள், மண்டபங்கள், விமானங்கள், கோபுரங்கள், மதில்கள், தெப்பக் குளம் ஆகியவற்றைப் பிரித்து அவற்றின் அமைப்பு முறையைச் சிந்திப்பது நலம். இவை எவ்வாறு கட்டப்பட்டுள்ளன என்பதைப் பொறியியல் துணையுடன் ஆராய வேண்டும். பெரிய கல் தூண்களையும் அவற்றின் மேல் இணைத்திருக்கும் உத்திரக் கற்களையும் மண்டபத்திலுள்ள மூடு கற்களையும் எவ்வாறு நிலைபெறச் செய்துள்ளனர் என்பதைக் கண்டறிதல் தேவை. கற்களுக்கு இடையில் சந்தடைத்துள்ள முறையை நன்கு அறியவேண்டும். இயற்கைச் சூழலை மனதில் கொண்டு இத்தகைய கட்டிடங்களை எவ்வாறு கட்டியுள்ளனர் என்பதையும் காண முயலலாம்.

கோயில்களில் தலைதூக்கி நிற்பது நெடிது உயர்ந்த கோபுரங்கள். அவைகள் மாடங்களாகக் கட்டப் பெற்றுள்ளன. ஒரு பக்கத்திலிருந்து காற்று மறுபக்கம் கடந்து செல்லும் முறையில் பல திறப்புகளுடன் காணப்படுகின்றன. அடிநிலை பரந்து முடிநிலை சுருங்கியுள்ளன. இவ்வாறுள்ள பல வகையான அமைப்பு முறைகளையும் கருத்தில் கொண்டு சிந்தனை செலுத்துவது அறிவியல் அணுகுமுறைக்கு வழிவகுக்கும். கோபுர முடியில் கலசங்களும் பக்கங்களில் பலவகைச் சிற்பங்களும் பொருத்தப்பட்டு கலையுணர்வையும் இறையுணர்வையும் இணையாகத் தோற்றுவிக்கும் பாங்கினை விளக்கலாம்.

கோபுரத்துக்கும் விமானத்துக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் நன்கு சிந்திப்பதற்கு உரியன. பொதுவாக விமானங்கள் உயரம் குறைந்து காணப்படும். ஆனால் தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம் போன்ற கோயில் விமானங்கள் கோபுரங்கள் போலவே உயரமாக உள்ளன. கோயிலின் முன்புறம் கோபுரமும் கருவறைக்கு மேலே விமானமும் எழுப்பப்படுவதைக் காணலாம். அமைப்பு முறையில் இரண்டும் வேறுபாடுகளுடன் தோன்றுகின்றன. விமானத்தின் மேல் ஒரு கலசமும் கோபுரத்துக்கு மேல் ஒற்றைப்படை எண்ணுடைய பல கலசங்களும் இருப்பதைப் பற்றிச் சிந்திக்கலாம். கோபுரங்கள் ஏழு நிலை, ஒன்பது நிலை என்று பலவாறு கட்டப்பட்டுள்ளது. மதுரை, திருவண்ணாமலை, சிதம்பரம் போன்ற கோயில் கோபுரங்களின் உட்பகுதி, அறைகள் போல் இடைவெளி கொண்டுள்ளன. தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம் விமானங்களின் உட்புறம் வட்டமான இடைவெளிகளுடன் அமைந்துள்ளன. இவற்றின் அமைப்பு வேறுபாட்டின் காரணங்களைக் காண முயல்வது நல்ல ஆய்வாக அமையும்.

நூற்று எட்டுத் திருப்பதி அந்தாதியில் விமான அமைப்பு பற்றிய விளக்கம் உள்ளது. அதையும் துணையாகக் கொண்டு விமானம் பற்றிய ஆய்வில் ஈடுபடுவது நன்று. தந்திவனப் புராணம் வாயிலாகக் கோச்செங்கணானின் களிறு ஏறாத் திருப்பணிகளான மாடக் கோயில்களை ஆராயலாம்.

திருவொற்றியூர், பாடி போன்ற பல இடங்களில் தூங்கானை மாடம் போன்ற அமைப்பு உள்ளது. மாறுபட்ட அமைப்புகளுக்கான காரணத்தை அறியலாம்.

கோயில்களிலுள்ள மண்டபங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவைகளாக உள்ளன. ஒரே கோயிலில் பல மண்டபங்கள் பல நோக்கங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. மதுரைக் கோயிலில் குறிப்பிட்டுக் கூறும் அளவில் 21 மண்டபங்கள் இருக்கின்றன. (அட்டசித்தி மண்டபம், இணைப்பு மண்டபம், மீனாட்சி நாயக்கர் மண்டபம், முதலில் பிள்ளை மண்டபம், ஊஞ்சல் மண்டபம், கிளிக் கூண்டு மண்டபம், ஆயிரம்கால் மண்டபம், புது மண்டபம், கம்பத்தடி மண்டபம், ஆறுகால் மண்டபம், நந்தி மண்டபம், வீரப்ப மண்டபம், பேச்சக்காள் மண்டபம், வீரவசந்தராயர் மண்டபம், மங்கையர்க்கரசி மண்டபம், சேர்வைக்காரர் மண்டபம், கூட்டு வழிபாட்டு மண்டபம், பதினாறு கால் மண்டபம், தட்டுச் சுற்று மண்டபம், வசந்த மண்டபம், திருப்புகழ் மண்டபம்). இவற்றின் அமைப்பு முறை, சிற்பச் செல்வங்கள், பயன்கள் ஆகியவை ஆய்வுக்கு உரியன. பயன்களைக் கருத்தில் கொண்டு அமைப்பைச் சிந்தித்து கலைத் தன்மையை மதிப்பீடு செய்தல் வேண்டும். கோயில் பிரகாரங்களைச் சிறப்பாக ஆய்வு செய்ய வேண்டும். அமைப்பு முறை கலைத் தன்மை, பயன், கட்டியுள்ள பாங்கு முதலியவை விளக்கம் பெறுதல் தேவை. இராமேஸ்வரம், திருட்டாறு, மதுரை போன்ற கோயில் பிரகாரங்கள் சிறப்புடையன.

ஆலயங்களில் தூண்கள் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றுக் கலையின் இருப்பிடங்களாக விளங்குகின்றன. பல்லவர், பாண்டியர், சோழர், நாயக்கர் முதலிய பல கால கட்டத் தூண்கள் வேறுபாடுகளுடன்காணப்படுகின்றன. அவற்றின் அடிப்பகுதி, இடைப்பகுதி, முடிப்பகுதி (போதிகை) ஆகியவற்றைத் தனித் தனியாகப் பிரித்து அவற்றின் அமைப்பு முறையைச் சிந்திக்க வேண்டும். மூலைத் தூண்களுக்கும் இடைத் தூண்களுக்கும் வேறுபாடுகள் உள்ளன. அவற்றின் பயனுக்குத் தக்கவாறு அமைக்கப்பட்டு அந்த அமைப்பில் கண்ணைக் கவரும் கலையை இணைத்துச் சிற்பிகள் தங்கள் கைவண்ணத்தின் திறனைக் காட்டியிருக்கும் பாங்கை விளக்க வேண்டும்.

இசைத் தூண்கள் ஒரு வியப்பான கலைப் படைப்பாக விளங்குகிறது. சுசீந்திரம், தாடிக் கொம்பு ஆகிய இடங்களிலுள்ள இசைத் தூண்கள் சிறப்புடையவை. ஏழு நரம்பிசைகளையும் இனிதாக ஒரே கல்லின் பல பிரிவுகளில்அடுக்கிக் காட்டும் திறம் சிறப்புக்கு உரியது. அத்தகைய அரிய கலைப்படைப்புக்களின் பெருமையை உயர்வாகச் சிந்திக்கலாம்.

சிற்பக்கலை

பலவிதமான சிற்பக்கலைகளின் இடமாகக் கோயில்கள் காணப்படுகின்றன. அவற்றைவணக்கத்துக்கு உரியவை என்றும் வணக்கத்துக்கு அல்லாதவை என்றும் இரு பிரிவாகப் பிரித்துக் கொள்ளலாம். மேலும், தெய்வ உருவங்கள், மனித உருவங்கள், உயிரின உருவங்கள், கற்பனை மானிட உருவங்கள் எனவும் பகுத்துக் கொள்ளலாம். தேவர், முனிவர் ஆகியோரின் உருவங்களைத் தனியாகப் பிரித்து ஆய்வு மேற்கொள்வதிலும் தவறில்லை.

ஆடற்கலை வளர்ப்பது ஆலயங்களே

தெய்வங்களை மானிட உரு, மனித மிருகக் கலப்பு உரு, சிறப்பு உறுப்புகளுடன் கூடிய மனித உரு எனப் பிரித்துக் கொள்ளலாம். மானிட உருவங்களில் அரசர், வள்ளல்கள், அடியவர், புலவர் போன்ற வரலாற்று மாந்தர்களையும், ஆடுவோர், பாடுவோர், கருவி இசைப்போர், விளக்கேந்துவோர், சாமரை வீசுவோர், காவலர், பல் தொழில் வல்லோர் போன்ற பல நிலை உடையவர்களையும் காணலாம். மிருகங்கள், பறவைகள், ஊர்வனங்கள், நீரில் வாழ்வன போன்றவை உயிரின உருவங்களில் அடங்கும். யாளி, புருஷாமிருகம், பூதகணம், செடிகொடிகள் போன்ற கொத்து வேலைப்பாடுள்ள சிற்பங்கள் கற்பனை உருவங்களில் அடங்கும். புராணத் தொடர்புடைய சிற்பங்கள் தனியாகவும், கதை விளக்க அமைப்பிலும் காணப்படும்.

புடைப்புச் சிற்பங்கள், தனித்த சிற்பங்கள் என இருவிதமாகச் சிற்பங்கள் செதுக்கப்படும். பெரும்பாலும் அவை கல்லினால் வடிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பலவகையான கற்களில் சிற்பங்கள் பலவாறாக உருவாக்கப்பட்டுள்ளன. வணக்கத்துக்கு உரியவை கல், செம்பு, பஞ்சலோகம் ஆகியவற்றால் ஆக்கப்பட்டிருக்கும். தேர், வாகனம் முதலியவற்றில் மரத்தால் ஆன சிற்பங்களும், கோபுரம், விமானம், ஆகியவற்றில் சுதையாலான சிற்பங்களும் மிகுதியாக உள்ளன. இவை தவிர, திருநெல்வேலியில் சந்தன சபாபதியும், திருவலஞ்சுழியில் கடல் நுரையாலான விநாயகர் சிலையும், மதுரையில் பளிங்குக் கற்களினால் செதுக்கிய காசி விசுவநாதர், அன்னபூரணி, விநாயகர், ஆறுமுகன், நந்தி, மூஞ்சூறு சிற்பங்களும், அழகர் கோயிலில் தந்தத்தினால் செய்யப்பட்டுள்ள சிற்பங்களும், தேர் ஒப்பனைக்காகத் தாளினால் ஆன சிற்பங்களும் உள்ளன. வட மதுராவில் நெட்டியினால் உருவாக்கப்பட்ட கண்ணனின் சிற்பம் இருக்கிறது. தனிச் சிறப்புடைய சிற்பங்கள் தனியாக விளக்கப்படுதல் வேணடும். சுசீந்திரம் அனுமன் தஞ்சாவூர் நந்தி, வேலூர் கோயிலிலுள்ள ஒரு தூணில் புலியைக் கொல்லும் சிற்பம்,கிருஷ்ணாபுரம் கோயிலிலுள்ள பெண்ணைத் தூக்கிக் கொண்டு ஓடுவோனைக் குத்தும் சிற்பம் போன்றவைத் தனி ஆய்வுக்கு உரியன.

கலை நுட்பத்துடன் இத்தகைய சிற்பங்களைக் கலைஞர் உருவாக்கியுள்ள திறனைக் கூர்ந்து நோக்கி ஆய்வில் ஈடுபட்டு முடிவுகளைக் காணவேண்டும். மனித மனத்தில் இறையுணர்வை ஊட்டுவதற்கு இத்தகைய கலைப் படைப்புக்கள் உதவுகின்றன என்பதை நன்கு காண்பதுடன் நல்வாழ்வு பெறத் துணை செய்கின்றன என்பதையும் இணையாக ஆராயலாம். கலைச் செல்வங்களைச் சமயம், சமுகம் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தி உண்மை காண்பது சிறப்பாகக் கருதப்படும்.

ஓவியக்கலை

கோயில் சுவர்கள், மேற்புறங்களில் அழகான வண்ணங்களில் அரிய முறையில் வரையப்பட்ட சிறப்பான ஓவியங்கள் இருப்பதைக் காணலாம். அவற்றை வரையும் நுட்பம், வரை பொருட்கள், வண்ணக் கலவைகள், ஓவிய நோக்கம், பயன்கள், கலைச் சிறப்பு, கலைஞரின் கைத்திறன் போன்ற பலவற்றைச் சீர்தூக்கி ஆய்வில் ஈடுபடவேண்டும். அவை எவ்வாறு காலங்கடந்து நிலைபெற்றுள்ளன என்பதை அறிவியல் கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும். வரலாற்றுக்கும், வாழ்வுக்கும், சமயத்துக்கும், சமுதாயத்துக்கும் அவை எந்த அளவுக்கு உதவும் என்பதையும் அறிய முயலலாம்.

சார்புக்கலைகள்

கோயில் நடைமுறையில் இசை, நடனம், இசைச் சொற்பொழிவு போன்ற கலைகள் ஒட்டி உறவாடும் நோக்கத்தைத் தெரிந்து கூற வேண்டும். சிலகோயில்களில் குறிப்பிட்ட கலை நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட விழாக்களில் சிறப்பாக நடத்தப்படுவதின் காரணத்தை அறியலாம். திருவாரூரில் பஞ்சமுக வாத்தியமும் ஆழ்வார் திருநகரியில் கல்லால் ஆன நாதசுவரமும் உயர்வாக மதிக்கப்படுவதைப் பற்றிச் சிந்திக்கலாம். சார்புக் கலைகள் மக்களுக்கு எத்தகைய உணர்வை ஊட்டுகின்றன என்பதைப் பொது நோக்காகக் காண முயலலாம்.

ஆய்வுச் சிந்தனை

கோயில் ஆய்வு விரிந்த பரப்புடையது. பல்துறை அறிவு இருந்தால் தான் தெளிவான முடிவைக் காண இயலும். பல நிலையில் ஆய்வு செய்ய வேண்டியிருப்பதினால் குறிப்பிட்ட ஒரு பிரிவை எடுத்து ஆழ்ந்து சிந்தித்தால் அரிய முடிவுகளைக் காண முடியும். கோயிலிலுள்ள ஒவ்வொரு பகுதியுமே ஆய்வுக்குத் தகுதியுடையதாக அமைந்துள்ளது. தனிக் கோயிலைப் பற்றி ஆய்வுசெய்வதுடன் கோபுரம், மண்டபம், தெய்வச் சிற்பங்கள், ஆலய அணிகலங்கள், வழிபாட்டு முறைகள், விழாக்கள், தூண்கள், மரச் சிற்பங்கள், படையல்கள், வாகனங்கள், தேர், கோயில் மரபுகள் என்று ஏதாவது ஒன்றை எடுத்து தமிழ்நாட்டை மொத்தமாகக் கருத்தில் கொண்டு ஆராய்வது பயன்மிக்கதாக அமையலாம்.

கோயில் ஆய்வின் வாயிலாகப் பண்பாடு, வரலாறு, சமூகம், சமயம், மக்களின் வாழ்க்கை நிலை, கலைத்திறன் முதலியவற்றைப் பற்றி நன்றாக அறிய வாய்ப்பு உள்ளது. தமிழ்நாட்டுக் கோயில் ஆய்வு ஒரு தனித் துறையாக அமைக்கப்பட வேண்டிய அளவுக்குப் பரந்தும் விரிந்தும் காணப்படுவதுடன் தமிழர் உயர்வையும் தமிழ்ப் பண்பாட்டு உணர்வையும் உண்மையாக அளவிட்டுக் காட்டும் தகுதியுடையதாகவும் உள்ளது. சீரிய முறையில் சிந்தித்தால் அரிய கருத்துக்களைத் திருக்கோயில் ஆய்வின் வழியாக உலகுக்கு வழங்கித் தமிழ்நாட்டுக்குப் பெரும் புகழைச் சேர்ப்பதுடன் நற்பயனையும் பெறலாம்.

வாசகர் எண்ணங்கள்...

அன்புடையீர்!

ஜனவரி - பிப்ரவரி திருக்கோயில் இதழ் வரப்பெற்றேன். வாசித்து மகிழ்ந்தேன். அதில் இன்றையத் தமிழகஅரசு இந்துசமய வளர்ச்சிக்காகவும், தமிழகத்திலுள்ள வாலாற்றுப்புகழ் கொண்ட ஆலயங்கள் சிதைந்துபோகாவண்ணம் பாதுகாப்பதற்காகவும் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளையும் - திருப்பணிகளையும் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீ. அவர்கள் திருச்செங்கோட்டு உரையில் பேசக் கேட்டு வாசித்தபோது தமிழவேள் சர்.பி.டி.ராஜன் அவர்கள் மறைந்து விடவில்லை. மாண்புமிகு ஆர். எம். வீ. வடிவில் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறாரெனத் தோன்றியது. நிற்க, தங்களது மகான்பசவர் வரலாற்றுக் கட்டுரையினைப் படித்தேன். மிக அழகாக பசவரின் வரலாற்றினையும் அவர் கடைப்பிடித்த புரட்சிகரமான நெறிகளையும் அன்றும் அதற்கு இருந்த எதிர்ப்புகளையும் அன்றைய சமயச் சூழல்களையும் சுருக்கமாக மிக எளிய முறையில் படம்பிடித்துக் காட்டியிருக்கிறீர்கள். தங்களின் கற்கண்டுக் கந்தபுராணம் ஒரு அற்புதமான இதிகாசக் கவிதைப் படைப்பு. ''மணிமேகலை உணர்த்தும் அருளறம்'' சிறந்த இலக்கியத்திறனாய்வு. முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்களின் ''திருக்குறளில் விஞ்ஞானம்'' நகைச்சுவையும், கருத்துச் செறிவும் கொண்ட ஒருநல்லகட்டுரை. இன்னும் டாக்டர் ந.சஞ்சீவி அவர்களின் 'அரசகவிஞர் குலசேகராழ்வார்' திரு பழநியப்பனார் அவர்களின் 'திருமுறைகளில் திருக்குறள்' டாக்டர் இரா.கலைக்கோவன் அவர்களின் 'அருங்கலை வளர்த்த அருள் மொழிவர்மன்' முதலிய கட்டுரைகள் தமிழக மன்னர்களின் பெருமைகளையும், சமய இலக்கியங்களின் உயர்வையும் உணர உதவுகின்றன. இத்தகைய சிறந்த கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து 'திருக்கோயிலை' அழகுசெய்யும் தங்களின் திருப்பணி மேலும் மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

—கலைமாமணி இரா.பழநிசாமி,
2/38, சத்தியமூர்த்தி நகர்,
நந்தனம், சென்னை-600035.

—————

நண்ப,

திருக்கோயில் வெளியீட்டுப் பொறுப்பைத் தாங்கள் ஏற்றது நன்று; கலைப்பார்வையுடன், கோயிற் செல்வத்தைக் காக்க வழிசெய்க.

—டாக்டர் வ.அய்.சுப்பிரமணியம்,
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். 613001

—————

அன்புடையீர்,

கோயில்கள் பழங்காலத்தில் கலைக்கூடங்களாக இருந்தன. தற்போதுள்ள கல்லூரிகள் செய்கின்ற செயல்களைக் கோயில்கள் செய்து கொண்டு இருந்தன. அந்தக்கருத்தை வலியுறுத்தும் வகையில் ''திருக்கோயிலில்'' இசை நுட்பம், நடன நுட்பம் இவைகளைப் பற்றி எழுதலாம். தமிழக கோயில்களை அறிமுகப்படுத்தும் வகையில் மாவட்டவாரியாக எழுத முயலலாம்.

—டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்,
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
டி.டி.டி.ஐ. அஞ்சல், சென்னை. 600113.

—————

அன்பார்ந்த நண்பருக்கு,

வணக்கம், குழந்தைப்பகுதி, பெண்டிர் பகுதி, இளைஞர் பகுதி, தத்துவம், சமய இலக்கியம், கொள்கை விளக்கம், சடங்குத் தெளிவு - இப்படிப் பற்பல பிரிவுகளைக் கொண்டு அவ்வப்போது வியத்தற்குரிய புதுமைசெய்து திருக்கோயிலை வளர்க்க வேண்டும். ஒரு வீட்டில் திருக்கோயில் எவ்வகையினர்க்கும் எப்பருவத்தினர்க்கும், எப்பாலார்க்கும் பயன்படுதல் வேண்டும்.

—டாக்டர் பி. சௌரிராஜன்,
தமிழ்த்துறைத் தலைவர்,
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்,
திருப்பதி-517502.

—————

வாழ்க,

அருட்பெரியார் அடிகளார் தமதுஉரையில் அடிக்கடி கூறுவதுபோல்

''குடிகளைத் தழீய கோயிலும்
கோயிலைத் தழீய குடிலுமாக''
திருக்கோயில் இதழ்கள் மணம்பரப்புவ தாக.

—கலைமாமணி தஞ்சைவாணன்
தயாரிப்பாளர்,
தொலைக்காட்சி நிலையம், சென்னை-5.

—————

மேதகு குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்டராமன் அவர்கள் மாங்காட்டில் அருள்மிகு கா்மாட்சியம்மனுக்கு வெள்ளிக்கவசத்தை வழங்கியபோது எடுத்த படம். தமிழக அரசின் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு எச். வி. ஹண்டே அவர்களும், அறநிலையத்துறை ஆணையர் திரு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ். அவர்களும் படத்தில் உள்ளனர்.

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் நடைபெற்ற கோடைவிழா அலங்காரப் படகு அணிவகுப்புப் போட்டியில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை கலந்துகொண்டு முதற் பரிசைப் பெற்றது. தமிழகச் சத்துணவுத் திட்ட அமைச்சர் மாண்புமிகு ஆர். சௌந்தரராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், தமிழகக் கதர்த்துறை அமைச்சர் மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழநிச்சாமி அவர்கள் பரிசை வழங்க, அறநிலையத்துறையின் சேலம் உதவி ஆணையர் திரு க. ந. சொர்ணம் பரிசைப் பெற்றுக்கொள்கிறார்.

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் மலைமேல் அமைந்துள்ள சேர்வராயன் திருக்கோயில் திருப்பணியை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு இராம. வீரப்பன் அவர்கள் தொடங்கிவைக்கும் காட்சி. மாண்புமிகு சட்ட அமைச்சர் திருமிகு பொன்னையன் அவர்களும், அறநிலையத்துறை ஆணையர் திரு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ்., திருப்பணிக்குழுத் தலைவர் திரு இராமசாமி உடையார் மற்றும் துணை ஆணையர் M. சூரியராஜ் ஆகியோர் படத்தில் உள்ளனர்.



அருள்மிகு சேர்வராயன் திருக்கோயில் மூலவரைத் தரிசிக்க மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் குகைக்குள் குனிந்து செல்லும் காட்சி., மாண்புமிகு சட்ட அமைச்சர் மற்றும் துணை ஆணையர் M. சூரியராஜ் அவர்களும் படத்தில் உள்ளனர்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம். M.A., Ph.D.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.